# இன்பத் தமிழ்

எட்டாம் வகுப்புக்குரியது.

○

தொகுப்பாசிரியர் குழு:


ஏ. எஸ். கனகரத்தினம் (செயலாளர்)
வ. இளையதம்பி
இ. பாலசுப்பிரமணிய ஐயர்
க. கார்த்திகேசு
பொன். முத்துக்குமாரு
சு. இராசநாயகம்


○


வெளியீடு:
வடமாகாண ஆசிரிய சங்கம்.

முதற் பதிப்பு: மார்கழி, 1957.

அச்சுப்பதிவு :
நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை.]

[விலை ரூபா **1-50**

# முன்னுரை.

எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இலக்கிய இரசனையையும் நல்ல வசன நடையையும் விருத்தி செய்யும் நோக்கமாக இந்நூல் தொகுக்கப்பட்டது. இது, செய்யுள் வசனம் என இரு பாகங்களைக் கொண்டது.

செய்யுள்கள் பழைய இலக்கியங்களிலிருந்தும், இக்கால இலக்கியங்களிலிருந்தும் தெரிந்து தொகுக்கப்பட்டன. வசன பாகம், கட்டுரை கதை வரலாறு விஞ்ஞானம் விமர்சனம் ஆகிய பல அம்சங்களைக் கொண்டது.

செய்யுள்களிற் காணப்படும் கடினமான பகுதிகளுக்கு உரைவிளக்கங்களும், வசன பாகத்துக்கு அரும்பதவுரையும் தொகுப்பாசிரியர் குழுவால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பு, எவ்வகையான புதிய கருத்துக்களையும் செவ்வனே எளிதில் வெளிப்படுத்தும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்பதையும்,

'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே'
(தொல்காப்பியம்)

'புதியன புகுதலும் வழுவல'
(நன்னூல்)

என்கின்ற தொல்லாசிரியர் ஆணைவழி நின்று, காலப்போக்குக்கு இயைய வளர்ந்து செல்லும் இயல்பினது தமிழ்மொழி என்பதையும் நன்கு காட்டுகின்றது.

இந்நூலினைத் திறம்பட அமைப்பதற்குத் தொகுப்பாசிரியர் குழு எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

**ஆசிரிய சங்கம்.**

# நன்றியுரை.

பின்வரும் பகுதிகளை இந்நூலிற் சேர்ப்பதற்கு அநுமதி தந்த அறிஞர்களுக்கும் பதிப்புரிமையுடையோர்க்கும் ஆசிரிய சங்கத்தின் நன்றி:

1. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை இயற்றிய 'அஞ்சலி', 'சூரிய காந்தி' — திரு. K. குமாரசுவாமி அவர்களுக்கு.
2. நாவலியூர் சோமசுந்தரப்புலவர் இயற்றிய 'பேராதனைப் பூந் தோட்டம்', 'காலைப்பொழுது' — திரு. சோ. இளமுருகனுர் அவர்களுக்கு.
3. டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதிய 'விதியின் திறம்' திரு. K. சுப்ரஹ்மண்யன் அவர்களுக்கு.
4. திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய 'கரையில் ஆபத்து' — திரு. K. இராஜேந்திரன் அவர்களுக்கு.
5. டாக்டர் மு. வரதராஜன் எழுதிய 'அடிமை மனம்' — ஆசிரியர் அவர்களுக்கு.
6. திரு. ஆர். கே. விசுவநாதன் எழுதிய 'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்' — ஆசிரியர் அவர்களுக்கு.
7. ராஜாஜி எழுதிய 'சோதிடம் பொய்யாகுமா'? — ஆசிரியர் அவர் களுக்கு.
8. திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் எழுதிய 'குடிமக்கள் காப்பியம்' — ஆசிரியர் அவர்களுக்கு.
9. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய 'அஞ்சாமை' — முருகவேள் புத்தகசாலையாருக்கு.
10. 'மகாகவி பாரதியார்': — சக்திகாரியாலயம், சென்னை 6, வெளியிட்ட, வ. ரா எழுதிய 'மகாகவி பாரதியார்' என்ற நூலிலிருந்து இந்தக்கட்டுரை வெளியிடப்படுகிறது.
11. 'கோயில் இல்லா ஊர்' என்ற கட்டுரை இன்ப நிலையத்தார் வெளியிட்டுள்ள 'இலக்கியச் செல்வம்' என்ற நூலிலிருந்து அநுமதிபெற்று வெளியிடப்படுகிறது.
12. 'ஜப்பானியர் முத்துவளர்த்தல்' என்ற கட்டுரை திரு. சு. இராமசுவாமி நாயுடு எழுதிய 'நான் கண்ட ஜப்பான்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டு 'வெள்ளையன் பப்லிஷிங் ஹவுஸா'ரின் அநுமதியுடன் வெளியிடப்படுகிறது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றிய 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற பாடலுக்கும், எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் எழுதிய 'சி. வை. தாமோதரம்பிள்ளை' என்ற கட்டுரைக்கும் உரிமையாளரிடம் அநுமதி பெற முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

# உள்ளுறை.

## செய்யுள்.


பக்கம்

1. அஞ்சலி 1
2. குசேலோபாக்கியானம் 2
3. நளவெண்பா — கலி நீங்கு காண்டம் 9
4. வில்லிபாரதம் — சூது போர்ச் சருக்கம் 12
5. கம்பராமாயணம் — குகப்படலம் 20
6. திருக்குறள்:
   1. ஒப்புரவறிதல் 27
   2. தெரிந்து வினையாடல் 27
   3. அமைச்சு 27
   4. நாடு 28
   5. பொருள் செயல்வகை 28
7. "கத்தியின்றி ரத்தமின்றி" 29
8. சூரியகாந்தி 30
9. காலைப் பொழுது 31
10. பேராதனைப் பூந்தோட்டம் 31
11. ஜூலியஸ் சீஸர். 32
12. பாரதி பாடல்கள்:
    1. பாரத தேசம் 33
    2. நடிப்புச் சுதேசிகள் 33
    3. சுதந்திர தேவியின் துதி 34
    4. பாரதியார் வேண்டுவது 35
13. கவிஞனும் உலோபியும் 36
14. மறம் 37
15. மழைப்பாட்டு 38
16. ஆலத்தி எடுத்தல் 38
17. புல்லரைப் பாடேன் 39
18. முத்தொள்ளாயிரம் 39
19. புறநானூறு:
    இளமையின்பமும் முதுமைக்கவலையும் 40
    நாடும் தந்தையும் இழந்தமை 40

## வசனம்.

பக்கம்

1. இரசவாதம் 43
   ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
2. சி. வை. தாமோதரம்பிள்ளை 47
   எஸ். வையாபுரிப்பிள்ளை B. A., B. L.
3. அஞ்சாமை 55
   திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
4. விதியின் திறம் 62
   மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர்
5. அடிமை மனம் 69
   மு. வரதராஜன் Ph. D. வித்துவான்
6. கரையில் ஆபத்து 74
   ரா. கிருஷ்ணமூர்த்தி — "கல்கி"
7. குடிமக்கள் காப்பியம் 86
   தெ. பொ. மீனுட்சிசுந்தரம் M. A., M. O. L., B. L. வித்துவான்
8. சோதிடம் பொய்யாகுமா? 91
   சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
9. வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் 96
   ஆர். கே. விசுவநாதன் M. A.
10. பிரதாபமுதலியார் சரித்திரம் —இளமை விளையாட்டு 103
    முன்சீப் வேதநாயகம்பிள்ளை
11. கோயில் இல்லா ஊர் 105
    ம. பொ. சிவஞானக்கிராமணி
12. ஜப்பானியர் முத்து வளர்த்தல் 110
    சு. இராமசுவாமி நாயுடு
13. மகாகவி பாரதியார் 117
    வ. ரா.

செய்யுட் பாகத்தின் உரை 123—149
வசன பாகத்தின் அரும்பதவுரை 150—151
பிழைதிருத்தம் 152

# அஞ்சலி.

1. ஈசனே! ஒருகணப் பொழுதுயான் உன்னரு
   கிருந்திடற் கருளல் வேண்டும்;
ஏழையேன் செய்வதற் காகவுள கருமங்கள்
   யாவு மேபின் செய்குவேன்;
நேசமுற நின்முகம் காணு திருக்கிலென்
   நெஞ்சுதடு மாறி அழியும்;
நேர்ந்துகொள் பணிஎல்லை யில்லா ஆழியாய்
   நீண்டுதுயர் தந்து நிற்கும்;
வாசமெழு சோலைவாய் மதுவுண்டு வண்டினம்
   மதுரகீ தங்கள் பாட,
மந்தமா ருதம்வீச, வேனிலிங் கின்றெனது
   வாசலில் வந்தது, ஐயா!
ஆசையொடு நின்னையெதிர் நோக்கியிவ் வுள்ளத்தில்
   அமைதிபெற வீற்றி ருந்தென்
ஆவியை உனக்குரிமை ஆக்கிவழி படுவதற்
   கானவொரு தருணம் இதுவே.

2. இன்னிசை பாடுமுறை ஏதுமறி யேன்யான்;
   இரவுபகல் கேட்டின்பம் எய்திவியந் திடுவேன்;
மன்னுலகை ஒளிசெய்வ துன்னிசையின் ஒளியாம்;
   வானெங்கும் உலவுயிரும் உன்னிசையின் உயிராம்;
பன்னரிய நின்னிசையின் பாலாறு பொங்கிப்
   பாறைகளும் உடைந்துருளப் பாய்ந்தொழுகும் அதனோடு
என்னிசையுங் கலந்தொழுக ஏற்றகுரல் காணேன்;
   எண்ணிலிசை வலையிலிழுத் தெனையாளும் இறையே.

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

# குசேலோபாக்கியாநம்.

குசேலரும் ஸ்ரீ கிருஷ்ணனும் குருகுல வாசஞ்செய்து கல்வி பயின்றனர். கிருஷ்ணன் துவாரகாபுரிக்கு அரசனுகின்ருன். குசேலர் சுசீலை என்னும் பெண்ணை மணந்து இல்லறம் நடத்துகின்ருர்; பிள்ளைகளின் தொகை இருபத்தேழாகிவிட்டது. வறுமை குடிகொள்ளுகின்றது.

1. ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
 கைந்நீட்டு முந்திமேல் வீழ்ந்(து)
இருமகவுங் கைந்நீட்டு மும்மகவுங்
 கைந்நீட்டு மென்செய் வாளால்
பொருமியொரு மகவழுங்கண் பிசைந்தழுமற்
 றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெங்
 ஙனஞ்சகிப்பாள் பெரிதும் பாவம்.

ஆயினும், எல்லாத்துன்பங்களையும் சகித்துக்கொண்டு இல்லறம் நடாத்தி வருகின்ருள் சுசீலை.

2. இவ்வாறு மிடியென்னும் பெருங்கடலு
 ளழுந்தியுந்தற் கினிமை சான்ற
செவ்வாய்மை யந்தணனை வெறுத்துரையா
 ளலர்மொழிகள் சிறிதும் செப்பாள்
துவ்வாமை மைந்தர்கள்பால் மறந்துமியற்
 ருளவள்தன் சுகுண மென்னே
எவ்வாறித் துயர்க்கடல்நீந் துவமெனுமோ
 ரெண்ணமுளத் தென்று முண்டால்.

ஒருநாள் குசேலரின் செவ்வி அறிந்து அவரை அணுகிக் கிருஷ்ணனிடம் போய் அவனைத் தரிசித்து வருமாறு மனைவி வேண்டுகின்ருள். குசேலர் அதற்குடன்பட்டுப் பலநாள் நடந்து துவாரகை வாயிலை அரிதில் அணுகுகின்ருர். வாயில் காவலனொருவன் உட்புக விடாது தடுக்கின்ருன்.

3 வகுத்தபல் லுலகும் போற்ற
மாற்றலர் கூற்றூர் மேவச்
செகுத்தர சாளுங் கண்ணச்
செம்மலெங் கேநீ யெங்கே
இருத்தபஃ றுவாரக் கந்தை
யேழைப்பார்ப் பானே சற்றும்
பகுத்தறிந் திடலற் றுய்கொல்
பயனில்மூப் படைந்தாய் போலும்.

வேறொருவன் குசேலரின் பெருமையை அறிந்து அவர் வரவைக் கிருஷ்ணனுக்கு அறிவிக்கின்றான்.

4. ஆதிநா ளைய நின்னோ
டருங்கலை கற்று ளானும்
போதவுஞ் சிறந்த நட்புப்
பூண்டுகொண் டவனுங் கந்தை
மேதகக் கொண்ட நீரான்
மெய்ம்மறை யவர்கு லத்தான்
கோதறு குணத்திண் மிக்கான்
குசேலனென் றியம்பி னன்பேர்

5. என்றலு முவகை விம்ம
எழின்முக மலர்ச்சி காட்டப்
பொன்றலில் கருணை பொங்கிப்
பொழிதர விரைவி னிற்சென்(று)
இன்றுநம் வாயில் வந்த
இருந்தவத் தலைவன் றன்னை
மன்றவிங் கழைப்பீ ரென்று
வாய்மலர்ந் தருளி னனே.

6. தாயது வருகை கேட்ட
தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி
நெஞ்சினு ளுவகை பூப்பப்
போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே
யெனவிரை பொருளிற் சொற்றான்.

## குசேலர் கிருஷ்ணனைத் தரிசிக்கின்றார்

7. எண்ணனைக் கிலங்கு மார்ப
மீத்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனைம ணக்குங்
கண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான்.

## கிருஷ்ணன் குசேலரை உபசரித்து க்ஷேமம் விசாரிக்கின்றான்

8. வழிநடந் திளைத்த வேயிம் மலரடி யிரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினான் கமலக் கண்ணன்
பழியில்பல் லுபசா ரங்கள் பண்ணவுந் தெரியா னாகி
ஒழிவறு தவக்கு சேல னென்றும்பே சாதி ருந்தான்.

9. முத்திக்கு வித்தாகு முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கு நாடோறுந் தேவர்பெறற் கருந்திருவுஞ்
சித்திக்கும் படியருளுஞ் செப்பரிதா லதுநிற்க
எத்திக்கும் புகழுநினக் கியன்மணநன் காயிற்றே.

10. நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே
தன்னுடைய வுயிராநின் றனைப்பேணுந் தன்மையளே
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே.

## பழைய நினைவுகள் எழுகின்றன

11. இருவேமு முன்னாளி லிலங்குசாந் தீபமுனி
வருகாம ரடிவணங்கி மாமறைகற் றுணர்ந்திடுநாட்
பெருகார்வத் தொடும்பேசிக் கொண்டிருந்த பேச்செல்லாந்
திருகாரா வுளத்துநினைத் திருக்கின்றே யோசிறப்ப.

12. கொள்ளைமறை யுணர்ச்சிமிகு குருராயன் பத்தினியாந்
தள்ளைநமைப் பார்த்தமுது சமைப்பதற்கிந் தனமின்றின்
எள்ளருநன் மைந்தர்காள் கொடுவாரு மெனஏவ [(று)
விள்ளருமோர் பெருங்காட்டுள் விறகொடித்துத்
திரிந்தனமே.

## கெழுதகைமை (நட்புரிமை) பெருகுகின்றது

13. பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை யதனை யின்னே
தந்தனை யாயி னன்று தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற தென்றான் றெரிவரும் வஞ்சக் கள்வன்.

14. இனியசிற் றுணவே தேனு
மின்றுநீ வருவாய் கொல்லோ
இனியநின் னுள்ள மின்றே
யெண்ணியா னறிதல் வேண்டும்
இனியநின் மனைவி வாளா
ஏகிவா என்பளோ மற்(று)
இனியவெற் கன்றி யார்க்குக்
கொண்டுவந் திருக்கின் றாயே.

15. நடலைதீர்ந் தவன்மெய்ப் போர்த்த நாள்பல கண்ட கந்தைப்
படர்தலைச் சுருக்கி வாங்கிப் பாங்குவைத் தினிதி னய்ந்து
விடலருங் கற்பு வாய்ந்த மின்னனார் வணங்குந் தெய்வந்
திடமுற முடிந்து வைத்த சிறுபொதி கண்டு கொண்டான்.

16. முன்னுமிவ் மவலொன் றேனு
முனைமுறிந் ததுவு மின்று
பன்னுமுட் டையுமின் றாகும்
பட்டவங் கையு மணக்குங்
கொன்னும்வாய் செறிப்பி னம்ம
குளமும்வேண் டுவதின் றென்றே
உன்னுபல் லுலகு முண்டோ
னொருபிடி யவறின் றானே.

அவலை உண்ணும்போது “பாங்கிரு கொடிற் றேதுக்கிப் பதமுறச் சற்றிருத்தித் தேங்குற மென்று மென்று சிரம்பல தரம் அசைத்து” ஆனந்தமாக உண்டான்.

செல்வம் அனைத்தும் குசேலர்பின் செல்லுமே என்று உருக்குமணி தேவி அஞ்சுகின்றாள்

17. மற்றொரு பிடியெ டுத்து
வாயிடப் போகுங் காலை
முற்றிழைத் திருவு ருக்கு
மணியெனு முத்த மூரற்
பொற்றொடிப் பூங்கொம் பன்னாள்
பொருக்கென ஓடி வந்து
கற்றவர் புகழ்தன் கேள்வன்
கரத்தினைப் பிடித்துக் கொண்டாள்.

மறுநாள் குசேலர் கிருஷ்ணனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்படுகின்றார்

18. கதிருதிக்குங் காலையெழீஇக்
கடன்பலவு முற்றியடர்
முதிர்புலன்செற் றருஞான
முயன்றடைந்தோ னுதலினால்
மதிகுலத்து மன்னவன்பால்
வாய்திறந்தொன் றுங்கேளான்
நிதியமிகப் பெற்றவனாய்
நினைந்தூர்க்கு வழிக்கொண்டான்.

குசேலருக்குச் செல்வம் மேன்மேற் சுரக்கின்றது.

19. அருந்தவர்கள் புகழ்சீர்த்தி யமைந்ததிருக்
கண்ணபிரா னருளி னாலே
பொருந்துவிர தாதிகளான் மிக்கிளைத்த
தன்னுடம்பு பூரிப் புற்ற(து)
இருந்தபழங் கந்தைசெழும் பொன்னுடை
யாயிற்று லிலங்கு கண்டப்
பெருந்துளப மணியாரம் பெருவிலைமுத்
தாரமாப் பிறங்கிற் றன்றே.

### சுசீலை குசேலனை வரவேற்றல்

20. காலணி செம்பொற் சதங்கையந் தொடரும்
கதிர்மணித் தண்டையுஞ் சிலம்புஞ்
சாலவு மொளிர்ந்து கலின்கலி னென்னத்
தழைந்தபூங் கற்பகக் கொம்ப
ராலென நடந்து மங்கல மேந்தி
யளவறு பாங்கிய ராய
கோலமா மடவார் சூழ்ந்தனர் நடப்பக்
கொழுநனை எதிர்கொள்வான் வந்தாள்.

### பிள்ளைகளின் செல்வச் செருக்கு

21. குருமலர் செம்பொற் கலமெதிர் வைத்துக்
கோதறு வெள்ளிய மூரல்
பருகுதற் கமைந்த இன்சுவைக் குழம்புப்
பால்விரா யுபசரித் தூட்டத்
திருகுபு வேண்டா வென்மரு மதனைத்
திருமிப்பா ராதுசெல் குநரும்
அருகிய பசியு மில்லையென் மருமா
யணிமகார் செருக்குதல் கண்டான்.

### செல்வத்தை வெறுத்து ஒதுங்குகின்றார் குசேலர்

22. ஒருதி னத்தினி லுவளக வரைப்பினை யுற்றுக்
கருது மக்களு மனைவியு முருவகை கழிப்பி
இருக வாடத்தை நூக்குபு தாழக்கோ லிறுக்கி
மருவொ ருத்தனு யிருந்தன னின்னன வலிப்பான்.

### கிருஷ்ணன் காட்சியளிக்கின்றான்

23. வயங்கெழுதுந் துபியைந்துங் காருநெடுங்
கடலுமென வாய்விட் டார்ப்ப
நயங்கெழுபூ மழையமரர் பொழிதரவிண்
ணரமகளிர் நடியா நிற்க
மயங்கெழுநல் லறந்தழைப்ப உலகுகுது
கலிப்பளவி வந்து நின்றான்
பயங்கெழுமா மறைப்பொருளா யம்மறைக்கு
மெட்டாத படிவத் தண்ணல்.

## முன்போல வறுமைவாழ்வை வேண்டுகின்றார் குசேலர்

24. அடியனே னுய்ந்தே னென்று
அங்கைக ளிரண்டுங் கூப்பி
முடிமிசை யேற்றி நின்று
மூதறி வுடையோர் கொள்ளாக்
கொடியவிச் செல்வ மொன்றே
குணிப்பரும் பவத்திற் கேது
படியற வாயி லின்பம்
பயப்பதெட் டுணையு மின்றால்.

25. ஆதலா லைய இந்த அநித்தியச் செல்வம் வேண்டேன்
மேதக முன்னிருந்த மிடியதே யின்னும் வேண்டும்
காதலி னடியார் வேண்டுங் காரிய மளித்துக் காக்கு
நீதயை புரிந்தென் னுள்ளக் கருத்தினை நிரப்பு கென்றான்.

வல்லூர் தேவராஜபிள்ளை

# நள வெண்பா.

## கலிநீங்கு காண்டம்.

**கதைத் தொடர்:**

முற்காலத்தில் நிடதநாட்டை நளன் ஆண்டான். அவன் விதர்ப்பநாட்டை ஆண்ட வீமன்மகள் தமயந்தியைச் சுயம்வரத்தால் மணந்தான். பன்னிரண்டுவருட இல்வாழ்வின்பின் கலியின் சூழ்ச்சியால் புட்கரன் என்பானுடன் சூதாடித் தன் இராச்சியத்தையும் செல்வத்தையும் இழந்தான். பின் தன் மக்கள் இருவரையும் வீமன் இல்லத்திற்கு அனுப்பிவிட்டுத் தமயந்தியுடன் காட்டிற்குச் சென்றான்.

அங்கே இரவில் தமயந்தியைத் தவிக்கவிட்டுப் பிரிந்தான். அவள் பல இன்னல்களின்பின் தன் தந்தை மனை அடைந்தாள். நளனும் பேரிடர்களினின்றும் தப்பி அயோத்தி மன்னன் இருதுபன்னனை அடைந்து அவனுக்குச் சேவை செய்து வாழ்ந்தான்.

தமயந்தி தன் நுண்மதியால் தன்னையும் மக்களையும் நளன் அடையச் செய்தாள். அப்போது கலி சினந்தணிந்து நளனுக்கு வரம் நல்கிப் பிரிந்தான்.

அதன்பின் நளன் மனைவிமக்களுடன் சென்று இழந்த நாட்டைப் பெற்றதை இப்பாக்கள் கூறும்.

1. விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினான் - முற்றும்பல்
தேனீ ரளித்தருகு செந்நெற் கதிர்விளக்கும்
மாநீர் நிடதத்தார் மன்.

2. "தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்,
ஏனைநெறித் தூரமினி யெத்தனையோ?" - "மானேகேள்,
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனு நம்பதிதான் மிக்கு."

3. இக்கங்குல் போக இகல்வேல் நளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு - புக்கங்கு
இருக்குமா காண்பான்போ லேறினன் குன்றில்
செருக்குமான் றேர்வெய்யோன் சென்று.

4. மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச் - சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்தவொரு
பூவிந்தை வாழும் பொழில்.

5. "மற்றவனுக் கென்வரவு சொல்லி, மறுசூதுக்(கு)
உற்ற பணய முளதென்று – கொற்றவனைக்
கொண்டணைவீர்," என்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்டெரியற் றேர்வேந்தன் தான்.

6. மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய் - ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டா னெதிர்.

7. செங்கோ லரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோ லரசன் வினவினன்: - "அங்கோலக்
காவற் கொடைவேந்தே, காதலர்க்கும் காதலிக்கும்
யாவர்க்கும் தீதிலவே?" என்று.

8. தீது தருகலிமுன் செய்ததனை யோராதே,
"யாது பணயம்?" எனஇயம்பச் - சூதாட
மையாழி யிற்றுயிலும் மால்பராய் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து.

9 அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும் - ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்றானை வென்றானவ் வேந்து.

10. அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான் - செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லான் நளனென்று போற்றிசைக்கும்
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து.

11. ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி - ஆனபுகழ்ப்
பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன்.

12. கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ - பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்(கு)
ஏதோ வுரைப்ப னெதிர்.

புகழேந்திப் புலவர்

# வில்லிபுத்தூரர் பாரதம்.

## சூது போர்ச் சருக்கம்.

துரியோதனாதியோர் அத்தினபுரத்திலும் பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்திலும் அரசுபுரிகின்றனர். தருமர் இராசசூய யாகஞ் செய்கின்றார். அந்த யாகத்திற்குச் சென்ற துரியோதனாதியர் பாண்டவர்களின் பெருஞ்சிறப்பைக் கண்டு பொறாமையுடன் திரும்புகின்றனர்; போரினாலாயினும், வஞ்சனையினாலாயினும் பாண்டவரின் செல்வத்தைக் கவர விரும்பி ஆலோசிக்கின்றனர்.

### துரியோதனன் தன் கருத்தை வெளியிடல்

1. இந்திரன் முதலா வுள்ள
இமையவர் சிறப்புச் செய்யச்
சுந்தரப் பொற்றோள் வேந்தர்
தொழில்புரிந் தேவல் செய்ய
மந்திர முனிவர் வேள்வி
மறைநெறி முறையிற் செய்யத்
தந்திர வெள்ளச் சேனைத்
தருமனே தலைவ னானான்.

2. இனியவன் சின்னாட் செல்லி
னெம்மனோர் வாழ்வுங் கொள்ளுந்
துனைவரும் புரவித் திண்டேர்த்
துணைவருஞ் சூர ரானார்
முனைவரு கூர்முள் வேலை
முளையிலே களையி னல்லால்
நனிவர வயிர்த்த போது
நவியமு மடியு மன்றே.

3. போதுற விரைந்து மற்றப்
புரவலன் செல்வம் யாவும்
பேதுறக் கவர்ந்தி லேனேற்
பின்னையார் முடிக்க வல்லார்

மோதுறப் பொருதே யாதன்
 மொழியொஞ வஞ்ச மொன்று
தீதுறப் புரிந்தே யாதல்
 கொள்வதே சிந்தையென்ருன்.

### துச்சாதனன் கூறல்

4. எத்தனை தரணி வேந்தர்
 யாகநல் விழாவில் வந்தார்
அத்தனை பேரில் யாமு
 மொருவரா யடங்கி நின்றேம்
கொத்தனை யுகளு நன்னீர்க்
 குருநிலக் கோமா னந்த
முத்தனை யன்றிப் பின்னை
 யாரையே முதன்மை செய்தான்.

5. எல்லியல் பரிதி யன்ன
 யதுகுல மன்னன் ருனுஞ்
சல்லிய மிகுபோர் செய்யச்
 சல்லியன் றன்மேற் சென்ருன்
சொல்லிய கருமம் வாய்ப்பச்
 சூழ்வலைப் படுத்திக் கொண்ட
வல்லிய மென்னச் சூழ்ந்து
 மலைவதே கரும மென்ருன்.

### துரியோதனன் உத்தரங் கூறல்

6. வஞ்சனை கொண்டே யாதல்
 வாரண மணித்தேர் வாசி
நஞ்சனை யவரா லாத
 ஞானையே யழித்தல் வேண்டும்
கஞ்சனை மலைய வெண்ணிக்
 கரியபேய் முலைப்பா லுண்ட
நெஞ்சினா னெய்தா முன்ன
 நீர்விரைந் தெழுமி னென்ருன்.

### கன்னன் கூறல்

7. வெஞ்சிலை குனித்தோ ரம்பு
 யான்விடின் வெகுண்ட வேந்தர்

எஞ்சிவிண் புகுவ ரல்லால்
　　யாவரே யெதிர்க்க வல்லார்
வஞ்சனை கொண்டு வெல்ல
　　மதிப்பது வாளால் வெல்ல
வஞ்சின மாயி னன்றே
　　என்றன னங்கர் கோமான்.

## சகுனி கூறல்

8. இடிம்பனைப் பகனை வைவே
　　லிகற்சரா சந்தன் றன்னை
நெடும்பணைப் புயத்தால் வென்ற
　　நிகரிலா வீம னிற்கக்
கடும்படைப் பெருமை யால்வெங்
　　காணலா மென்ப ராயில்
தொடும்படைத் தடக்கை வீரர்க்
　　குத்தரஞ் சொல்ல லாமோ.

9. துப்புற ழமுதச் செவ்வாய்த்
　　திரௌபதி துணைத்தோள் வேட்டுக்
கைப்படு சிலையி னோடுங்
　　காவலர் கலங்கி வீழ
மெய்ப்படு முனியாய் வந்து
　　விசயன்வில் வளைத்த போதும்
இப்பொழு திருந்த வீரர்
　　யாவரு மிருந்தி லேமோ.

10. இப்பிறப் பொழிய வின்னு
　　மேழெழு பிறப்பி னாலு
மெய்ப்பிறப் பற்ற நீதித்
　　தருமனை வெல்ல மாட்டோம்
ஒப்பறப் பணைத்த தோளா
　　யுபாயமெங் கேனு மொன்றால்
தப்பறச் சூது கொண்டு
　　சதிப்பதே கரும மென்றான்.

## துரியோதனன் உபாயங் கேட்டல்

11. கோமக னெஞ்சு நாவுங்
குளிர்ந்துபே ருவகை கூர்ந்து
மாமனைத் தவிசின் கண்ணே
வருதியென் றிருத்திக் கொண்டு
பாமரு பனுவன் மாலைப்
பாண்டவர் தம்மை நின்கைக்
காமரு சூதால் வெல்லுங்
கருத்தெனக் குரைத்தி யென்றான்.

## சகுனி உபாயங் கூறல்

12. மன்னநின் செல்வக் கோயின்
மண்டப மொன்று தேவர்
பொன்னுல கினுக்கு மில்லை
யென்பதோர் பொற்பிற் றாகப்
பன்னுநூற் சிற்பங் குன்றாப்
பஃறொழில் வினைஞர் தம்மால்
நன்னில விரிவுண் டாக
நாளையே யியற்று விப்பாய்.

13. மண்டபங் காண வெம்முன்
வருகவென் றழைத்து வந்தாற்
கண்டுகண் களித்து மற்றக்
காவல ரிருந்த போதில்
புண்டர விசால நெற்றிப்
புரவல பொழுது போக
வண்டரும் விரும்பும் வன்சூ
தாடுதும் வருக வென்பேம்.

14 அதிர்முர சுயர்த்த கோவு
மையெனத் துணியும் பின்னை
மதிமரு ளியற்கைத் தாகு
மாயவெஞ் சூது தன்னால்
விதியெனப் பொருது வாழ்வு
மேதகு மரசுந் தங்கள்
பதிமுதற் பலவுந் தோற்கும்
படிசெகுத் திடுவ லென்றான்.

## துரியோதனன் மகிழ்தல்

15 இன்னதே கரும மென்றெண்
றிளைஞரும் விழைந்து சொன்னர்
அன்னதே கரும மாக
அவர்வழி யொழுகு நீரான்
தன்னதே யாகு மிந்தத்
தலமெனுங் கருத்தான் மாமன்
சொன்னதே துணிந்து மார்புந்
தோள்களும் பூரித் திட்டான்

## விதுரன் மறுத்தல்

16. வையமு மரசும் வாழ்வும்
வாங்குகை கருத்தே யாயிற்
பொய்யடர் சூது கொண்டு
புன்மையிற் கவர வேண்டா
ஐயநின் தந்தை யோலை
ஐவருக் கெழுதி விட்டால்
மெய்யுற மறுத்துச் சொல்லார்
வேண்டின தருவ ரன்றே.

## துரியோதனன் விதுரனை இகழ்தல்

17. நினக்கிது தொழிலா லென்று
நேயமு மவர்கண் மேலே
எனக்குயிர்த் தந்தை நீயென்
றியானுனை மகிழ்ந்து காண்பன்.
உனக்குமுன் கிளைக்கு நாளு
முண்டியும் வாழ்வு மிங்கே.
மனக்கருத் தங்கே யென்றான்
மாசுணத் துவசன் மாதோ.

## விதுரன் இடித்துரைத்தல்

18. மைந்தனங் குரைத்த மாற்ற
மனத்தினை யீரப் பின்னும்
வெந்திறல் விதுர னுற்று
விளம்புவ னென்ப மாதோ

புந்தியின் மறுவி லாதோய்
புதல்வரி லொருசா ரன்பு
தந்தையர்க் கில்லை யென்றா
யானுமத் தந்தை யன்றே.

19. நீங்களு மவரு நேய
நெறிமுறை தவறா தென்றும்
வாங்குநீ ருததி யாடை
மண்ணின்மேல் வாழ்த லுற்றால்
பாங்கலா வரச ரெல்லாம்
பணிந்துநும் வாயி னிற்பர்
ஓங்கிய புகழும் வாழ்வு
மொருப்பட வளரு மன்றே.

20. உங்களி னவரு நீரு
முளம்பிரிந் தெதிர்த்தீ ரானால்
தங்களி னெதிர்ந்தா ரம்மா
குருகுலத் தலைவ ரென்னாப்
பொங்களி நிகழுங் கஞ்சப்
புரவல னொழிவு கண்ட
திங்களி னுயர்ச்சி போலத்
தெவ்வருந் திகழ்வ ரன்றே.

## திருதராட்டிரன் மகனின் சூழ்ச்சியைக் கேட்டு மகிழ்தல்

21. மகன்மொழி நயந்து கேட்டு
வாழ்வுறு தந்தை தானு
மிகநயந் துருகி நல்ல
விரகினால் வெல்ல லுற்றீர்
அகநெடும் போர்செய் தாலு
மைவரை யடக்கொ ணாது
சகுனியை யன்றி வேறார்
தரவல்லார் தரணி யென்றான்

திருதராட்டிரன் விதுரனைப்போக்கிப் பாண்டவர்களை அழைக்கின்றான். தங்களை அழைப்பது சூழ்ச்சி யென்று விதுரனால் அறிந்தும் பெரியதந்தையின் அழைப்பாதலின் இணங்குகின்றனர். ஆனால், சூதாடுவதில்லையென்ற முடிபோடு அத்தினபுரம் செல்கின்றனர்.

பாண்டவர்கள் மண்டபத்தைக் கண்டு மகிழ்ந்திருப்பத் துரியோதனன் கூறல்.

22. மாய மொன்று மெண்ண லாம
னத்தின் மிக்க மாமனு
நீயு மின்று சூது கொண்டு
நிகழ்வி லாச மயர்விரோ
ஆய வென்றி யைய னில்லி
லமுத மன்ன போனகம்
போய ருந்து மளவு மிங்கி
ருந்து போது போகவே.

தருமன் மறுத்தல்

23 மீதெ டுத்த வஞ்ச ராகி
வெகுளி செய்தல் பிறர்பெருங்
கோதெ டுத்து ரைத்த னன்பு
கொண்ட யிர்த்தல் கொடியவெஞ்
சூதெ டுத்து விழைத லுற்ற
சூழ்பி ழைத்த லின்னவே
தீதெ டுத்த நூலின் முன்பு
திய வென்று செப்பினர்.

24. வாது கொண்டு காதல் கூரு
மாம னோடு வஞ்சனைச்
சூது கொண்டு பொருத ழிந்து
தோல்வி யெய்த வேண்டுமோ
தாது கொண்டு தேனி ரங்கு
தாம மார்ப நெஞ்சனீர்
ஏது கொண்ட ததுநு மக்க
ளிப்ப னிம்ப ரென்னவே.

### கன்னன் பழித்தல்

25. போது போகு மாறி ருந்து
    பொருதும் வருதி யென்னவுஞ்
சூது போரு மஞ்சி யேதொ
    லைந்து ளந்து ளங்குவாய்
மோது போரி லெங்ங னுய்தி
    யிளைஞ ரோடு முடுகுதேர்
மீது போயுன் நகரி தன்னின்
    விரைவி னெய்து கென்னவே

### அருச்சுனன் வெகுளல்

26. இல்லெ டுத்து விரகி னோடு
    மெமைய ழைத்து மாயைகூர்
வல்லெ டுத்து வருத லான்ம
    றுத்த னன்ம கீபனும்
சொல்லெ டுத்து வைத வாய்து
    ணிப்ப னென்று கன்னன் மேல்
வில்லெ டுத்த னன்பொ ருமல்
    வீர வாளி விசயனே.

### தருமன் மானத்தால் சூதுக்குத் தூண்டப்படல்

27. ஏதி லாரி னெம்பி நீயி
    ருக்க வென்றி ருத்திமுன்
காதி லாரென் னுடன்மு னைந்து
    கண்வி ழிக்க வல்லபேர்
ஓதி லாண்மை குன்று மென்று
    ருத்தெ ழுந்து மாயநின்
சூதி லாடல் புரிது மென்று
    தரும னுங்தொ டங்கினன்.

வில்லிபுத்தூராழ்வார்

# கம்பராமாயணம்

## குகப்படலம்

சிறிய தாயான கைகேயியின் சொற்படி இராமன் காட்டுக்குச் செல்கின்றான். அவனைப் பிரியாது சீதையும் இலக்குமணனும் கூடவே தொடர்ந்து போகின்றார்கள். வழியிலே கங்கையாறு எதிர்ப்படுகின்றது. குகனுடைய நட்பைப்பெற்று, மூவரும் கங்கையைக் கடந்து சென்று சித்திரகூட பர்வதத்தில் தங்கியிருக்கின்றார்கள். இராமன் கானகம் சென்றான் என்பதைக் கேட்டதும் பரதன் அடைந்த துயரத்திற்கோர் அளவில்லை. அவன் தவக்கோலம் பூண்டு தமையனை அழைத்துவரச் செல்கின்றான். அவனைத் தொடர்ந்து அயோத்தி நகரமே செல்கின்றது. இராமன் சென்ற வழியே சென்று, தங்கிய இடங்களில் தங்கி, பரதன் தன் சேனையுடன் கங்கையின் வடகரையை அடைகின்றான்.

1. பூவிரி பொலன்கழற் பொருவில் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான்.

பரதனோடு சென்ற சேனையோ கடல்போலப் பரந்தது. அச்சேனையால் எழுந்த தூசி வானகத்தை மண்ணகமாக்கி விடுகின்றது. யானைப்படையும் குதிரைப்படையும் சென்று நீரருந்துதலால் கங்கையின் ஓட்டமே தடைப்படுகின்றது. அப்படைகளின் எண்ணிக்கை அத்துணைப் பெரியது!

2. கான்றலை நண்ணிய காளை பின்படர்
தோன்றலை யவ்வழித் தொடர்ந்து சென்றன
ஆன்றவ ருணர்த்திய அக்கு ரோணிகள்
மூன்றுபத் தாயிரத் திரட்டி முற்றுமே.

பரதன் சேனையோடு வருதலைக்கண்டு ஐயுற்ற குகன் தன் சேனையோடு கங்கையின் தென்கரை அடைதல்

3. அப்படை கங்கையை யடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான்.

4 குகனெனப் பெயரிய கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமிகக் கண்கள் தீ நாற நாசியிற்
புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான்.

5. எலியெலா மிப்படை யரவம் யானென
வொலியுலாஞ் சேனையை யுவந்து கூவினன்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்த போலவே.

## குகன் தன் படைத்துணைவரான வேடருக்குக் கட்டளையிடுதல்

6. தோன்றிய புளினரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்(கு)
ஏன்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீ ரமைதி ராமென்றான்.

## தன்னினத்தவரான வேடர்முன் குகன் தன் வீரம் கூறுதல்

7. ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ. [லன்றோ

8. முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோ
பின்னவ னின்றன னென்றில னன்னவை பேசானேல்
என்னிவ னென்னை யிகழ்ந்ததிவ் வெல்லை கடந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ.

9. அருந்தவ மென்றுணை யாள இவன்புவி யாள்வானோ
மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனோ
பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று கழிக்குவெ னென்கட னின்றோடே.

10. ஆடு கொடிப்படை சாடி யறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தவென் னாயக னுக்கிவர் நாமாளுங்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ.

### குகன் இவ்வாறு தன்னினத்தவருக்குக் கூறுநிற்க, சுமந்திரன் பரதனிடம் சில சொல்லல்

11. என்பன சொல்லி இரும்பன மேனிய ரேனோர்முன்
வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்(கு)
அன்பனு நின்றனன் நின்றது கண்டரி யேறன்ன
முன்பனில் வந்து மொழிந்தனன் மூரிய தேர்வல்லான்.

### சுமந்திரன் பரதனுக்குக் குகனைத் தெரிவித்தல்

12. கற்காணுந் திண்மையான் கரைகாணாக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோள் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்.

### பரதன் குகனைக் காணப் புறப்படுதல்

13. தன்முன்னே யவன்றன்மை தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற தூரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பென் யானேசென்
றெனவெழுந்தான்.

### பரதன் நிலையைக்கண்டு குகன் திடுக்கிடல்

14. என்றெழுந்து தம்பியொடு மெழுகின்ற காதலொடுங்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி யெயினர்கோன் துண்ணென்றான்

15. வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்

### குகன் பரத சத்துருக்கினர் நிலையைக் கருதுதல்

16. நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் தவவேடந் தலைக்கொண்டான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்

### பரதனிருந்த இடத்திற்குக் குகன் வருதல்

17. உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான்.

### குகனும் பரதனும் சந்தித்தல்

18. வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

### பரதன் வந்த செய்தியைக் குகன் வினவ அவன் தெரிவித்தல்

19. தழுவின புளிஞர் வேந்தன்
தாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா
யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க
மன்னனைக் கொணர்வா னென்றான்.

### பரதனது பெருந்தன்மையை உணர்ந்து அவனைக் குகன் மறுபடியும் தண்டனிடுதல்

20 கேட்டனன் கிராதர் வேந்தன்
கிளர்ந்தெழு முயிர்ப்ப னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
விம்மின னுவகை பொங்கத்
தீட்டரு மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யி
லுள்ளத்தான் புகல லுற்றான்.

## குகன் பரதனைப் புகழ்தல்

21. தாயுரை கொண்டு தாதை
யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச்
சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து
புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே
ழாவரோ தெரியி னம்மா.

22 என்புகழ் கின்ற தேழை
யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண்
மரபினோர் புகழை யெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா
யுயர்குணத் துரவுத் தோளாய்

## பரதன் வினாவும் குகன் விடையும்

23. அவ்வழி யவனை நோக்கி
அருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ண
றென்றிசைச் செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்தா னம்மு
னென்றலு மெயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே
காட்டுவ லெழுக வென்றான்.

## இராமன் பள்ளிகொண்ட புற்படுக்கையைக்கண்டு பரதன் பெருந் துயரடைதல்

24. காரெனக் கடிது சென்றான்
கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்

பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்
பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை
மண்ணுநீ ராட்டுங் கண்ணன்.

### துயரமிகுதியாற் பரதன் தன்னைத் தானே வெறுத்துக் கூறல்

25. இயன்றதென் பொருட்டி னாலிவ்
விடருனக் கென்ற போழ்தும்
அயின்றனை கிழங்குங் காயு
மமிர்தென வலிய புல்லிற்
துயின்றனை யெனவு மாவி
துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ்
செல்வமுங் கொள்வென் யானே.

### இலக்குமணன் இராப்பொழுது கழித்த இடத்தைப் பரதன் வினாவல்

26. தூண்டர நிவந்த தோளான்
பின்னருஞ் சொல்லு வானந்
நீண்டவன் துயின்ற சூழ
லிதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் தொடர்ந்து பின்னே
போந்தவன் பொழுது நீத்த(து)
யாண்டென இனிது கேட்டா
னெயினர்கோ னிதனைச் சொன்னான்.

### குகன் விடை கூறுதல்

27. அல்லையாண் டமைந்த மேனி
யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்

கல்லையாண் டுயர்ந்த தோளாய்
　　கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்று
　　னிமைப்பில னயன மென்றான்

### பரதன் தன்னை நோதல்

28. என்பத்தைக் கேட்ட மைந்த
　　னிராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில்
　　யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானே
　　னவனது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுணடே
　　யழகிதென் னடிமை யென்றான்

கம்பர்

# திருக்குறள்.

## அறத்துப்பால்

### ஒப்புரவறிதல்

1. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

3. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

## பொருட்பால்

### தேரிந்து வினையாடல்

1. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை.

2. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

3. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல்.

### அமைச்சு

1. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

2. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

3. அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

## நாடு

1. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

2. உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

3. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

## பொருள் செயல்வகை

1 அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

2 அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

3. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

திருவள்ளுவர்

# "கத்தியின்றி ரத்தமின்றி"

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர் (கத்)

ஒண்டி அண்டிக் குண்டு விட்டு
உயிர்ப றித்த லின்றியே
மண்ட லத்தில் கண்டி லாத
சண்டை யொன்று புதுமையே. (கத்)

குதிரை யில்லை யானை யில்லை
கொல்லும் ஆசை யில்லையே
எதிரி யென்று யாரு மில்லை
எற்றும் ஆசை யில்லதாய் (கத்)

கோப மில்லை தாப மில்லை
சாபங் கூறல் இல்லையே
பாப மான செய்கை யொன்றும்
பண்ணு மாசை யின்றியே. (கத்)

கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டை செய்த புண்ணியம்
பலித்த தேநாம் பார்த்திட (கத்)

காந்தி யென்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்த ருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே (கத்)

**நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை**

# சூரியகாந்தி.

1 ஆகாய வீதி யுலாவி வருமிந்த
ஆதித்த னோடுஉன: தன்பனடி!
வேகாமல் வெந்து வெயிலில் உலர்ந்துநீ
விண்ணிலே கண்ணாக நிற்பதேனோ?

2 பொன்னிற முண்டு, பொலிவுண்டு, கண்டுனைப்
போற்ற இனிய வடிவுமுண்டு,
என்ன அரிய வரம்பெற, இன்னும்நீ
இத்தவம் செய்வது, பூமகளே!

3 காயும் கதிரவன் மேனியை நோக்க, உன்
கண்களும் கூசிக் கலங்காவோ?
நேயம் மிகுந்தவர் காய வருத்தம்
நினைப்பதும் இல்லையோ? சொல்லடியே!

4 காலையி லேகதிர் வீசிவர நிதம்
கண்டு களித்து மகிழ்ந்திடும்நீ,
மாலையி லேமுகம் வாடித் தளர்ந்திட,
வந்த வருத்தமும் ஏதடியே?

5 செங்கதிர் செல்லும் திசையது நோக்கிஉன்
செல்வ முகமும் திரும்புவதேன்?
மங்கையே உன்மண வாளனாகில் அவன்
வார்த்தை யொன்று சொல்லிப் போகானோ?

6 ஆசை நிறைந்தஉன் அண்ணலை நோக்கிட,
ஆயிரங் கண்களும் வேண்டுமோடி?
பேசவும் நாவெழ வில்லையோடி? கொஞ்சம்
பித்தற் பெருமையும் வந்ததோடி?

7 மஞ்சட் குளித்து முகமினுக்கி இந்த
மாயப் பொடிவீசி நிற்கும் நிலை
கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ
கண்ணீர் உகுக்குமோ? யாரறிவார்?

8 உன்பெயர் சூரிய காந்தியென்றார் அதன்
உண்மையும் இன்றே அறிந்துகொண்டேன்;
இன்பமளித்திடும் பூவுல கத்துனக்(கு)
யாரும் இணையில்லை, இல்லையம்மா!

**கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை**

## காலைப் பொழுது.

1 கூரிரு ளகன்றது கூவின கோழி
குருவிக ளெழுந்தன மறைந்தன விண்மீன்
ஏரியிற் றாமரை யினமலர் மலரும்
இறையவன் கோவிலில் மணியொலி கேட்கும்
ஊரினிற் றொழில்புரி மாந்தர்க ளெழுந்தார்
உயர்மரக் கொம்புவிட் டோடின காக்கை
சேர்கிழக் கெனுந்திசை வெளுத்தது மெல்லச்
செங்கதி ரவனுத யஞ்செய்கி றானே.

2 இரவினி லுலகினை மறைத்துவைத் திருந்த
இருளினைத் துரத்தியே பிடிப்பது போலக்
கிரணங்க ளெனும்பல கரங்களை நீட்டிக்
கீழ்த்திசை நின்றுமென் மெல்லெனக் கிளம்பித்
தருமெரித் திரளெனத் தாமிரத் தாற்செய்
தட்டம தெனப்பனிப் பகையினைச் சாடித்
திருவுறு முலகினர் மகிழ்வுற வந்து
செங்கதி ரவனுத யஞ்செய்கி றானே.

## பேராதனைப் பூந்தோட்டம்.

சீரான வெங்காடு மெப்பதியு மூருஞ்
சேர்வான தாவரமும் மாமரமுங் காவும்
பேரான பழமரமும் பெருமரமும் பூவும்
பெரிதான பனைமரமும் வாழையொடு தாழை
நேராக வோரிடத்தில் நிலையாகக் காண
நிலமடந்தை வைத்ததென நின்றுபய னுதவும்
பேராதனைப் புதிய நந்தவன மகவைப்
பேணியமு தூட்டிமகா வலிகங்கை பெருகும்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

# ஜூலியஸ் சீஸர்.

### சீஸரின் மனைவி வேண்டுதல்

1. பேரிரவில் நடந்தவெலாம் பிழையினை விளக்கப்
பேதலிக்கு முளச்சிறியேன் பேசுகின்ற மொழிகள்
ஆருயிர்க்குத் தலைவனின தருட்செவியில் வீழ்க
அகத்திடையின் றிருந்திடுக அவைபுகுத லொழிக

### சீஸர் புன்னகைபுரிந்து கூறல்

2. அஞ்சினர்க்குச் சதமரண மஞ்சாத நெஞ்சத்
தாடவனுக் கொருமரண மவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குந்
துன்மதிமு டரைக்கண்டாற் புன்னகைசெய்
பவன்யான்

3. இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தி லறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான்மூத்தோ னெனது
பின்வருவ தின்னலெனப் பகைமன்ன ரறிவார்
பேதுறல்பெண் ணணங்கேயான் போய்வருதல் வேண்
டும்.

சுவாமி விபுலானந்தர்

# பாரதிபாடல்கள்.

## 1. பாரத தேசம்

1. வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் — அடி,
மேலைக் கடல்முழுதுங் கப்பல் விடுவோம்,
பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்குவோம்; எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட் டுவோம்.

2. சிங்களத் தீவினுக்கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய் குவோம்

3. வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்
வேறுபல பொருளுங் குடைந் தெடுப்போம்
எட்டுத் திசைகளிலும் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்துங் கொண்டு வருவோம்

4. "சாதி யிரண் டொழிய வேறில்லை", என்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்
நீதி நெறியில் நின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்.

## 2. நடிப்புச் சுதேசிகள்

1. நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடீ — கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி

2. கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ — கிளியே
நாளில் மறப்பா ரடீ

3. கண்க ளிரண் டிருந்தும்
காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடீ — கிளியே
பேசிப் பயனென்னடீ?

4. ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக் கோர்கணமும் — கிளியே
வாழத் தகுதியுண்டோ?

5. பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள்போல்
துஞ்சத்தம் கண்ணுற்கண்டும் — கிளியே
சோம்பிக் கிடப்பாரடீ.

## 3. சுதந்திர தேவியின் துதி

1 இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

2. நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பர்.

3. தேவிநின் னொளிபெ றாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள்வே தங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்றன்
பாலனம் படைத்தி லாதார்.

## 4. பாரதியார் வேண்டுவது

1. காணி நிலம் வேண்டும் — பராசக்தி
காணி நிலம் வேண்டும் — அங்கு
தூணி லழகியதாய் — நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் — அந்தக்
காணி நிலத்திடையே — ஓர்மாளிகை
கட்டித் தரவேண்டும்; — அங்கு
கேணி யருகினிலே — தென்னைமரம்
கீற்று மிளநீரும்.

2. பத்துப் பன்னிரண்டு — தென்னைமரம்
பக்கத்திலே வேணும்; — நல்ல
முத்துச் சுடர்போலே — நிலாவொளி
முன்பு வரவேணும்; — அங்கு
கத்துங் குயிலோசை — சற்றேவந்து
காதிற் படவேணும்; — என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே — நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

3. பாட்டுக் கலந்திடவே — அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும்; — எங்கள்
கூட்டுக் களியினிலே — கவிதைகள்
கொண்டு தரவேணும்; — அந்தக்
காட்டு வெளியினிலே, — அம்மா, நின்றன்
காவலுற வேணும்; — என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித் திடவேணும்.

சுப்பிரமணிய பாரதியார்

# கவிஞனும் உலோபியும்.

வாருநீர் யாரென்ன வித்துவா னென்னவு
　　மதிமோசம் வந்ததென்றே
வாய்குளறி மெய்யெலா மிகநடுக் குற்றுநீர்
　　வந்தகா ரியமேதெனச்
சீருலா வியகாம தேனுவே தாருவே
　　சிந்தாம ணிக்குநிகரே
செப்புவச னத்தரிச் சந்த்ரனே யெனலும்
　　சினந்திருக னுஞ்சிவந்தே
யாரைநீ மாடுகல் மரமென்று சொன்னது
　　மலாலரிச் சந்த்ரனென்றே
யடாதசொற் சொன்னையே யார்க்கடிமை யாகினேன்
　　யார்கையிற் பெண்டுவிற்றேன்
தீருமோ இந்தவசை யென்றுரைசெய் வெகுகொடிய
　　தீயரைப் பாடிநொந்தேன்
திருமன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற
　　தென்தில்லை நடராஜனே.

அட்டாவதானம் சரவணப்பெருமாட் கவிராயர்

# மறம்.

விற்ற தார்கலை பாதி யோடுவ
ளத்தி லேயழ விட்டதார்
வெஞ்சி றைப்புக விட்ட தார்துகி
லுரிய விட்டு விழித்ததார்
உற்ற தாரமும் வேண்டு மென்றினி
மன்னர் பெண்கொள லொக்குமோ
உடிய டாமண மென்ற வாய்கிழித்
தோலை காற்றிலு ருட்டடா
வெற்றி யாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவ ரெமைய டுத்தினி
தெங்கள் மிச்சில்மி சைந்ததால்
பெற்ற வேலர்த மக்கு யாமொரு
பெண்வ ளர்ப்பினி லிந்தனம்
பெற்ற பெண்ணைக் கொடுப்ப மோவிதென்
பேய்பி டித்திடு தூதரே.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

## மழைப்பாட்டு.

கருமயி லாடக் குயிலினம் வாடக்
கவியின மோடக் கரடிபுல்வாய்
பொருபுலி யாளித் திரள்மரை சாரற்
புறமுழை பதறிக் கொடுகிடவே
அருகுழை தவழக் குலமலை தகரத்
தடதிகி ரியின்முத் துதிர்தரவே
சொரிமல ரகலப் பலமர முறியச்
சோவென மாரி பொழிந்ததுவே.

சின்னத்தம்பிப்புலவர்

## ஆலத்தி எடுத்தல்.

மரமது மரத்தி லேறி மரமதைத் தோளில் வைத்து
மரமது மரத்தைக்கண்டு மரத்தினுல் மரத்தைக் குத்தி
மரமது வழியே சென்று வளமனைக் கேகும் போது
மரமது கண்ட மாதர் மரமுடன் மரமெ டுத்தார்.

சுந்தர கவிராயர்

## புல்லரைப் பாடேன்.

மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக வென்றனிர் நும்மையிங்
கெங்ஙனம் பாடுகென் யானே வெங்கட்
களிறுபடு செங்களங் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்
அவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தேரீர்
உடீஇ ருண்ணீர் கொடீஇர் கொள்ளீர்
ஒவ்வாக் கானத் துயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே.

ஔவையார்

## முத்தொள்ளாயிரம்.

1 வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால் — தேருது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை.

2 அடிமதிற் பாய அழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழிதல் நாணி — முடியுடை
மன்னர் குடையால் மறைக்குமே செங்கனல்வேல்
தென்னவர் கோமான் களிறு.

# புறநானூறு.

## இளமையின்பமும் முதுமைக் கவலையும்

இனிநினைந் திரக்கம் ஆகின்று; திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர் நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே! யாண்டுண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்(று)
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே.

தொடித்தலை விழுத்தண்டினார்

## நாடும் தந்தையும் இழந்தமை

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையும் இலமே.

பாரி மகளிர்

# வசனம்.

# இரசவாதம்

பேராசை யுடையோர் இனி வரும் பயனை விரும்பி இப்போது உள்ளதையும் இழக்கின்ருர். பேராசை கிலேசத்தையே விளைவிக்கும். பேராசை யுடையோருக்கு ஒருபொழுதும் திருப்தி பிறவாது. உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம். எத்துணைப் பெருஞ் செல்வராயினும், திருப்தி யில்லாதவர் ஒருபொழுதும் சுகமடையார். இத்தேசங்களிலே அநேகர் பேராசைகொண்டு இரசவாதத்தினுலே பெரும் பொருள் சம்பாதிக்கலாம் என்று துணிந்து, பொய்வேடம் பூண்டவர்களாலே வஞ்சிக்கப்பட்டு, தங்களிடத்து முன்னுள்ள பொருளையும் இழந்து, வறுமையுற்று வருந்துகின்ருர்கள்.

சூரன் என்னும் ஓரரசன் தவவலிமையினுலே ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாண்டான், என்று கந்தபுராணத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அத்தச் சூரன் தவஞ்செய்யப் புகுதற்கு முன்னரே, அவனுடைய பிதாவாகிய காசிபமுனிவர், அவனுக்கு மார்க்கண்டேய முனிவர் கடவுட் பூசைசெய்து எமனை வென்ற சரித்திரத்தைச் சொல்லினுர். அம்மார்க்கண்டேய முனிவருடைய சரித்திரம் சூரன் பிறக்க எண்ணில்லாத காலத்துக்கு முன்னே நடந்தது. அம்மார்க்கண்டேய முனிவருடைய பிதா மிருகண்டுமுனிவர். அவர் பிதா மிருககண்டுயமுனிவர். அவர் பிதாக் குச்சகமுனிவர். அக்குச்சகமுனிவர் காலத்திலே ஒருவன் இரசவாதத்தினுலே பெரும்பொருள் சம்பாதிக்க விரும்பி, தன்னிடத்துள்ள பொருளையும் இழந்து, தான் செய்த தருமங்களையும் இழந்த சரித்திரத்தைச் சொல்வாம்:

கலிங்கநாட்டிலே அரிபுரத்திலே வணிகர்குலத்திலே தேவதத்தன் என்ருெருவன் இருந்தான். அவனுடைய புதல்வனுகிய தருமதத்தன் மிக்க செல்வத்தை யுடையவனுய், தருமங்களைச் செய்து பெரும்புகழ் பெற்ருன். அவன் தன்னுடைய தந்தை

யும் தாயும் இறத்தலும், தமியனுகித் துயருழந்து, பின் ஒரு வாறு தேறியிருக்கும் பொழுது, ஓரிரசவாதி முண்டிதமாகிய சிரசையும், குண்டலம் பொருந்திய காதையும், விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்த நெற்றியையும், உருத்திராக்ஷமாலையையும். பிரம்பு பொருந்திய கையையும் உடையவனுய், அவனிடத்து வந்தான். தருமதத்தன் அவ்விரசவாதியைக் கண்டு, வணங்கி, தன் வீட்டினுள் அழைத்துக்கொண்டு சென்று, அமுதுசெய்வித்து, முகமன் கூறி, பின்பு அவனை நோக்கி, "சுவாமீ, நீர் இங்கு வந்ததென்னை" என்ருன். வாதி அது கேட்டு, "நம்மிடத்து ஒரு வித்தை உளது. அது எவருக்கும் பேசுந்தன்மையதன்று. குருபக்தியுடையோருக்கு மாத்திரம் சொல்லத்தக்கது. நெஞ்சில் சிறிதும் மாசில்லாத உனக்கு நாம் அதனைச் சொல்வோம். இரசத்தினுலே வேண்டிய பொன்னைச் செய்வோம். காரிரும்பை நாகமாக்குவோம். மீட்டும் அதனைப் பொன்னுக்குவோம். ஈயத்தையும் இரசத்தையும் வெள்ளியாக்குவோம். வங்கத்தைப் பொன்னுக்குவோம் இரும்பிற் செம்புண்டாக்குவோம். ஈயத்தையும் அப்படியே செய்வோம். நமது வன்மையை உள்ளபடி சொல்ல விரும்பினேமாயின், அளப்பில்லாத வருடங்கள் வேண்டும். ஒரு பொன்னைக் கோடி பொன்னுக்குவோம். கோடி பொன்னை மலைபோலக் கோடி பொன்னுக்குவோம். உன் பொருளனைத்தையும் தருவாயாயின், உன்வீட்டிலே அப்பொருளை வைத்தற்கு இடமில்லையென்னும்படி செய்குவோம்" என்ருன். இப்படிச் சொல்லிய வாதியைத் தருமதத்தன் வணங்கி, முன்னே தன்னிடத்துள்ள நிதியையும், பின்னே தன்னுலே சம்பாதிக்கப் பட்ட நிதியையும் பேடகங்களில் உள்ள ஆபரணங்களையும் கொண்டுவந்து அவன்முன்பு வைத்தான். வாதி அவற்றை நோக்கி, "ஒகோ! வணிகரில் திலகனுகிய உன்னிடத்துள்ள செல்வம் இதுதானே" என்று கைதட்டிச்சிரித்து, "இப்பொருள் நமது வித்தையில் இறைக்கும் போதாது. இது நாம் உருக்கு முகத்திலே சிந்துகின்ற அளவுங்காணுது. நீ நமக்குப் பின்னே திரிவாயாயின், அளப்பில்லாத பொருள் தருவோம். இதனை வைத்துக்கொள்வாயாக" என்ருன். அப்பொழுது தருமதத்தன் "சுவாமீ, கோபிக்கவேண்டா. நீர் வேண்டிய பெருநிதி முழுதும் தேடிக்கொண்டு வருவேன், இரும்" என்று சொல்லிக்கொண்டு

# வசனம்.

போய், வஸ்திரங்களையும், நிலங்களையும், இரத்தினங்களையும், ஆபரணங்களையும், வீடுகளையும், ஆடுமாடுகளையும், விற்று மதிமயக்கத்தினலே தருமத்தையும் விற்ருன். இவ்வாறு தேடிய பெருநிதியனைத்தையும் கொண்டுவந்து, வாதிமுன் வைத்து நிற்றலும், வாதி மனமகிழ்ந்து, அவையெல்லாவற்றையும் அக்கினியிலே உருக்கித் திரட்டி, ஒருருவாக்கி, அதனிரட்டி எடைகொண்ட இரசத்தை ஓரம்மியிலிட்டு, அப்பொன் முழுதையும் உரைத்து அதனை உருட்டி, மட்குகையினுள்ளே மருந்தை உள்ளுறுத்திப் பொன்னை உள்ளிட்டு, அதனிடத்தே ஓர் களங்கத்தை இட்டு, சீலமண்செய்து, அக்கினியிலே நூற்றெட்டுக்குக் குக்குடபுட மிட்டு, அதனைப்பார்த்து "மிகவும் மாற்றுவந்தது; இனி ஒரு வராகியிலே பழுக்கும்; காற்றில்லாத ஒருறையுள் காட்டு" என்ருன். தருமதத்தன் ஒருறையுளைக் காட்டலும் இரசவாதி அதனுள்ளேபோய், விறகின்மீது சுடலையக்கினிகொண்டு வராகிமேலிட்டுப் புகைப்பித்தான். அதனலே தருமதத்தன் கண்ணீர்பொழிய, சரீரம் வெதும்ப எங்கும் வேர்ப்ப, ஊமைபோல் ஒன்றும்பேசாமலும், போகமுயலாமலும், சும்மாவிருந்தான். அப்பொழுது இரசவாதி பொற்குகையை எடுத்து, மெல்லெனத் தனது வஸ்திரத்தினுள்ளே மறைத்துக்கொண்டு, அதுபோலத் தன்னிடத்திருந்த வேருெரு குகையைப் பக்கத்து வைத்து, புகையைத் தணித்து, தருமதத்தனை நோக்கி, "இக்குகையை உன்கையினுல் எடுத்து, இவ்வக்கினிமேல் வைப்பாயாக" என்ருன். தருமதத்தன் அப்படிச் செய்தலும், இரசவாதி அதற்குரியன யாவற்றையும் அமைத்துச் சேமஞ்செய்து, தருமதத்தனை நோக்கி, "நீ உணவில்லாமலும், ஒருவரோடும் பேசாமலும், பிறரைப்பாராமலும் மூன்று நாள் நம்மையே சிந்தித்துக்கொண்டிருக்கக் கடவாய். நாம் காளி சந்நிதியிலே ஒரு யாகம் முடித்தல்வேண்டும். முடித்துக்கொண்டு நாலாம்நாள் இங்கே வருவோம்" என்ருன். தருமதத்தன் அப்படியே செய்க என்று சொல்லி அவனை மும்முறை வணங்கி, அவன்பின் செல்லாது நின்ருன். இரசவாதி அங்குநின்று விரைந்து நெடுந்தூரம் போய், உருமாறி வேருேரிடத்தை அடைந்தான். தருமதத்தன் இரசவாதிவிதிப்படியே இருந்து, மூன்றுநாள் செல்லலும், 'பெரியவர் சொல்லிய நாளெல்லை சென்றுவிட்டதே, இன்று வந்திலர். அவர் சொற்

றப்புவாரா' என்று தளர்ந்து, காளிகோயிலினும் நகரத்தினும் அவனைத் தேடிக் காணுது மயங்கி வாடி, வீட்டுக்குத் திரும்பி ஞன். முன்வைத்த குகையை எடுத்துப்பார்த்து, அது இரும் பாய் இருக்கக்கண்டு, மிகுந்த துயரமடைந்து வீழ்ந்திறந்தான். அவன் தருமத்தை விற்ற பாவத்தினலே யானையாய்ப் பிறந்தான்.

கடவுட்பூசைசெய்து எமனை வென்ற புண்ணிய யுகத்தி னும் இரசவாதத்தினலே பொருள் சம்பாதித்தல் இயலாதிருப்ப, நம்மவர்கள் அநேகர் இப்பாவ யுகத்தில் இரசவாதத்தினலே பொருள் சம்பாதிக்கலாம் என்று மயங்கி அலேவது என்ன பேதமையோ அறியேம். இரசவாத மயக்கத்தினலே உள்ள பொருளேயும் இழந்து வீண்காலம் போக்காமல் தங்கள் தங்க ளால் இயன்ற தொழில்களைச் செய்து வருந்திப் பொருள் சம்பா தித்துத் தங்கள் அநுபவத்தின் பொருட்டும் தருமத்தின் பொருட்டும் செலவுசெய்து வாழ்ந்திருக்கக் கடவர்கள்.

---

# சி. வை. தாமோதரம்பிள்ளை

சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியிலே நமது தமிழ்மொழி ஒரு நூதன சக்தியால் இயக்கப்பட்டது. மேலே நாட்டுப் புதிய நாகரிகமும், பயிற்சிப் பண்பும் (Culture) நமது நாட்டினரையும் தாக்கத் தொடங்கின. மேலே நாட்டுக் கல்விமுறை நம்மவர்களால் கையாளப்பட்டது. மேலேநாட்டு இலக்கிய நயங்களிலே நம்மவர்களும் ஈடுபட்டு அதன் நலங்களை நுகர்ந்து இன்புறத் தொடங்கினர். பெரும்பாலோர் அதன் புதுமை மோகத்தில் தம்மைப் பறிகொடுத்துவிட்டனர். "புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார்" என்று கம்பன் கூறியது பொய்படுமா? இவர்கள் அந்நியமொழிகளைத் தங்கள் தாய்மொழியாகவே கருதினர். தங்கள் தாய்மொழியைப் புறக்கணித்தல் செய்தனர். ஆனால் ஒருசிலர் இவர்களுக்கு விலக்காய் அமைந்து தாய்மொழியாகிய தமிழையும், அதன் இலக்கியங்களையும் போற்றி வரலாயினர். இச்சிலருள் ஒருவர் இராவ்பகதூர் ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்.

பிள்ளையவர்கள் 90 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திலே சிறுப்பிட்டியில் சைவ மரபிலே வைரவநாதருக்குப் புத்திரராய்ப் பிறந்தவர்கள். அந்நாட்டிலேயுள்ள கிறிஸ்தவ சங்கம், கல்வி நிலையங்கள் நிறுவிக் கல்வியைப் பரப்பிவந்தது. ஆங்கிலங் கற்க விரும்பினோர்க்கு இச்சங்கத்தைத் தவிர வேறு கதியில்லாதிருந்தது. சங்கத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றியாவது கல்வி கற்க வேண்டுமென்று தாமோதரனார்க்குத் தோன்றியது. 'பிச்சைபுகினும் கற்கை நன்றே' என்பது நமது முன்னோர்களது கொள்கையல்லவா? சிலகாலம் கிறிஸ்தவர்களோடு கூடித் தங்கித் தமது கருத்தை முற்றுவித்துக்கொண்டனர். தாமும் கிறிஸ்தவ மதச் சார்பினராய்ச் சிலகாலம் இருந்தனர். இவ்வநுபவம் ஒரு சோதனையாய் முடிந்தது. இதனால் புடமிட்ட பொன்போல அறிவொளி மிகுந்து, சைவசமயத்தில் பேரன்பு பூண்டவராய்ப் பின்பு விளங்கினர்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

என்பது பொய்யாமொழியன்றோ? ஸ்ரீ ஆறுமுக நாவலர் இவரது சைவசமயப் பற்றுக்குக் காரணமாயிருந்தனர்.

ஆங்கிலக் கல்வியில் ஈடுபட்டனர் என்பது உண்மை. ஆனால் தாய்மொழிக் கல்வியை மறந்துவிடவில்லை. சுன்னை முத்துக்குமார கவிராசர் என்ற ஆசிரியரிடம் தமிழ் கற்றுச் சிறந்த புலமை எய்தினர். இவரது ஆசிரிய பக்தி

தெள்ளுதமிழ்க் கடல்கடந்து செழியகலைத்
துறைபடிந்து திரிபில் ஞானக்
கொள்ளை கொண்டு நுகர்ந்தமுத்துக்
குமாரகவி மேகமிதைக் கொடிச்சுன்னாக
வள்ளலென துள்ளமதி கொள்ளநறை
விள்ளுதமிழ் மணஞ்சற் றேறி
வெள்ளறிவின் முடைநாற்றம் வீவித்தான்
விரைமலர்த்தாள் மிலைவன் மாதோ.

என்ற அழகிய செய்யுளால் விளங்கும்.

யாழ்ப்பாணத்திற் கல்வி முடிந்தது. தாமோதரனார் தமிழ் நாட்டிற்கு வந்தனர். அப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகம் 1857ல் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கழகத்தின் முதல் ஆண்டில் இவர் பி. ஏ. பட்டம் பெற்றனர். பின்னர் இவர் தமிழ்நாட்டிலேயே உயர்தர அலுவலில் அமர்ந்து, இறுதியில் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்து நீதிபதியாக விளங்கினர். இம்மகிழ்ச்சி நிரம்பிய வாழ்வில் தம்மை மறந்துவிடவில்லை. இவரது தமிழார்வம் இவர் உள்ளத்திலே மங்கா ஒளியாகத் திகழ்ந்து, ஒருகாலைக் கொருகால் வளர்ந்து, முடிவில் பேரொளிப் பிழம்பாகச் சுடர்விட்டு எரிந்தது.

ஒருநாட்டில் இலக்கிய வுணர்ச்சியும் பயிற்சிப் பண்பின் நலமும் பெருக வேண்டுமாயின், அந்நாட்டுப் புராதன இலக்கியங்களாற்றான் அது நன்கு கூடுவதாகும். புதிய இலக்கியங்களும் புராதன இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு தான் பிறத்தல் இயலும். தேசியப்பற்றும் இப்பண்டை இலக்கியக் கல்வியினாலும், பயிற்சிப்பண்பினாலும் உண்டாவதேயாம். இதனை நன்குணர்ந்த பிள்ளையவர்கள், "தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்றிவை இல்லாதார் பெருமை ஒரு பெருமையா?" என்று ஓரிடத்துக் கூறியிருக்கிறார்கள். இதனால் இவர்கள் உள்ளப்பாங்கு நன்கு விளங்குகிறது. நமது நாட்டில் மொழிப்பற்று மிகுதியாக உண்டு. ஆனால் இம்மொழிப்பற்றுச் சுயநலத்தோடு கலந்தது. விரிந்து இடம்பரந்த நெறியிற் செல்லாது, சுருங்கிக் குறுகிய நெறியிற் சென்றது. புராதன இலக்கிய நலன் பற்றிய உணர்ச்சியின் சார்பாகத் தோன்றாது, கேவலம் பெருமித உணர்ச்சியில் தோன்றி, அறைகூவிப் போர்புரிதற்கு மாத்திரம் துணையாக இப்பற்று அமைந்திருந்தது. இப்பொய்ம்மையான மொழிப்பற்று வளர்ந்து, பெருகி, உண்மையான மொழிப்பற்றை ஒழித்து வந்தது. இதனிடையில், பண்டையிலக்கியங்களும் பேணுவாரற்று அழிந்துவந்தன. ஏட்டுச்சுவடிகள் நீர்வாய்ப்பட்டும், தீவாய்ப்பட்டும், சிதல்வாய்ப்பட்டும் மறைந்தவண்ணமாய் இருந்தன. இந்நிலையைக்கண்டு பிள்ளையவர்களுடைய உள்ளம் கொதித்தது. கலித்தொகையின் பதிப்புரையிலே,

"ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ வென்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து உழுது கிடக்கின்றது.

"பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்துபோகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்து

வான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட் தவறின் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம் பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றே கிட்டுவது! காலத்தின் வாய்ப் பட்ட ஏடுகளைப் பின் தேடியெடுப்பினும் கம்பையும், நாராசமுந்தான் மீளும்.

"சங்கமரீஇய நூல்களுட் சில இப்போதுதானும் கிடைப்பது சமுசயம்—எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றுவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கிலும் மனந்தளம்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னென்று வாளாவிருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம் பாஷாபிமானமென்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையாமா? இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக" என்று எழுதி அபயமிட்டார்கள்.

இச்சொற்கள் இன்றும் நமது உள்ளத்தைக் கொதித்தெழச்செய்யும் பேராற்றல் வாய்ந்தன. இவ்வாறு உளங்கொதித்திருந்த பிள்ளையவர்களுக்கு அமைதியுண்டா? இவர்கள் காலம்வரை ஒருவரும் எட்டிப்பாராத இப்பணிக் களரியில் உழைத்துவர முற்பட்டனர்.

ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவ சமய நூல்கள், குறள், பாரதம் வெளியிடுவதோடு அமைந்துவிட்டார்கள். வித்வான் தாண்டவராய முதலியார் திவாகர முதலிய நூல்களையும், பள்ளி மாணவர்களுக்கு வேண்டும் வசன நூல்களையும் அச்சியற்றுவதில் ஒடுங்கிவிட்டார்கள். மழவை மகாலிங்க ஐயர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்து வேறு சில நூல்களையும் வெளியிட்டு அத்துடன் நின்றுவிட்டார்கள். களத்தூர் வேதகிரி முதலியார் நாலடி, நைடதம் முதலிய நூல்களை வெளியிட்டு அவ்வளவில் திருப்தியுற்றார்

கள். திருத்தணிகை விசாகப்பெருமாளையர் குறளுக்குத் தெளி பொருள், பிரபுலிங்கலீலை, சூடாமணி நிகண்டு முதலியவற்றைப் பிரசுரித்து அவ்வளவில் தங்கள் முயற்சியைச் சுருக்கிக் கொண்டார்கள். திருவேங்கட முதலியார், இராசகோபாலப் பிள்ளை முதலானவர்கள் இராமாயணம் வெளியிடுவதிலும், நாலடி முதலியன பதிப்பித்தலிலும் ஈடுபட்டுநின்றனர். ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள் அப்பொழுதுதான் சீவகசிந்தாமணிப்பதிப்பு முயற்சியில் போராடிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, நமது பிள்ளையவர்கள் தன்னந் தனியராய்ப் பண்டைத் தமிழ்ச் செல்வப் புதையலைத் தமிழ் மக்களுக்கு அகழ்ந்தெடுத்து உதவும் பெருமுயற்சியை மேற்கொண்டனர்.

இம்முயற்சியில் நேர்ந்த இடையூறுகள் மிகப்பல. முதலாவதாக, ஏட்டுப்பிரதிகள் கிடைப்பது அரிதாயிருந்தது. பரம்பரை வித்துவான்களின் இல்லங்கள் தோறும் பிரதிகள் தேடுவது அவசியமாயிற்று. பிள்ளையவர்களின் உற்ற நண்பர்கள் அங்கங்கேயிருந்து உதவிபுரிந்தனர். இந்த நண்பர்களுக்கு ஏட்டுப்பிரதிகளை நேரிற் பரிசோதிப்பது பெரும்பாலும் இயலாத காரியமாயிருந்தது. இதனால் ஏடுபெறும் முயற்சி முற்றும் நன்கு நிறைவேற வழியின்றிப்போயிற்று. ஏடுகளுக்கு உரியவர்கள் அவற்றைக் கொடுத்துத் தமிழுலகிற்கு நன்மை புரிவதில் விருப்பமில்லாதிருந்தார்கள். ஆனால், பிள்ளையவர்கள் மனந் தளரவில்லை. மேலும் மேலும் ஊக்கங்கொண்டு தேடியவண்ணமா யிருந்தார்கள்.

இரண்டாவதாக, ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துப்பல படியாக ஆராய்ந்து வழுவறப் பிரதி செய்வதற்கு அக்காலம் ஏடு பார்த்து வாசித்தல் வழக்காயிற்றுப் புதியதொரு கலையாகத் தோன்றிவிட்ட காலம். தற்போது அச்சிற் கிடைக்கும் பல இலக்கியங்கள் பெயர்தாமும் அறியப்படாமல் இருந்த காலம். எட்டுத்தொகையில் அடங்கியுள்ள நூல்கள் இன்ன என்று அறியாக்காலம். சிலப்பதிகாரமா அல்லது சிறப்பதிகாரமா என மயங்கிக்கொண்டிருந்த காலம். ஆகவே, தக்க பாண்டித்தியம் இருந்தாலன்றி நூல்களைப் பதிப்பிடுதல் இயலாததாம். அவ்வகைப் பாண்டித்தியமுள்ள உதவியாளர்கள்

பிள்ளையவர்களுக்குக் கிடைப்பது அருமையாயிருந்தது. அவர்களே ஏடு பார்த்துப் பிரதிசெய்து பொருள் ஆராயவேண்டியதாயிற்று. தமக்கு விளங்காத இடங்களைக் குறித்துக் கடிதவாயிலாகப் பல வித்துவான்களுக்கும் எழுதிய வண்ணமாயிருந்தார்கள். ஆனால் இக்கடிதப் போக்குவரத்தினால் விளங்கிய இடம் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். பிள்ளையவர்களுடைய அல்லற்பாடுகளை யுணர்ந்தார்தாமும் மிகச் சிலரேயாவர். 'எனக்கு ஸ்ரீமத்சாமிநாதையரும் அவருக்கு நானுமே சாட்சி' என்று ஓரிடத்தில் எழுதியிருக்கின்றார்கள்.

மூன்றாவதாக, நூல்களைப் பதிப்பிடுதலின் செலவு. சிற்சில பெரியார்கள் இவ்விஷயத்தில் உதவினார்கள். எனினும் பெரும்பாலும் தமது கைப்பொருளையே செலவிடும்படி நேர்ந்தது. இக்காலத்திற்போன்று தமிழ் மக்கள் நூல்கள் வாங்குதல் முற்காலத்தில் இல்லை. மிகச்சொற்ப பிரதிகள் வெளியிடப்படினும், அவைதாமும் பதிப்பாசிரியரிடமே தங்கிச் செல்லரிப்புண்டு அழிதல் வழக்கமாயிருந்தது. அன்றியும் தமிழ் நூல்களிற் பற்றுள்ள புஸ்தகப் பிரசுராலயங்களும் அக்காலத்தில் இல்லையென்றே சொல்லல்வேண்டும்.

நான்காவதாக எத்துணையோ சிரமமெடுத்து நூல்களை வெளியிட்டபோதிலும் அதற்குக் கைம்மாறாகக் கிடைத்தது வசவுரைதான். ஆங்கிலங் கற்ற தமிழ் விற்பன்னர்கள் உதாசீனமாயிருந்தார்கள். தமிழ் கற்ற பண்டிதர்களிற் சிலர் பொறாமை மிக்குப் பகைகாட்டினார்கள். ஒரு சில அறிஞர் தமிழ் நூல்களை வெளியிடுவதற்குத் தங்களுக்குத்தான் தனியுரிமையுண்டென்று கருதினார்கள். அவ்வாறாவது நூல்களைப் பதிப்பிட முன்வந்தார்களா? அதுவும் இல்லை. முன்வந்தார்களாயின், தமிழ் நூல்கள் அழியாது பாதுகாக்கப்பட்டிருக்குமே. இவர்கள் செய்தனவெல்லாம் குறைகூறிக் கொண்டிருந்த தொன்றேயாம்.

பிழைகளை எழுதி அனுப்பினால், எழுதினோர் பெயர்களோடு அவை வெளியிடப்படுமென்றும், 50 பிழைகள் காட்டுவோருக்கு ஒரு புத்தகம் இனாமாக அளிக்கப்படுமென்றும் பிள்ளை

யவர்கள் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்கள். யாரும் எழுதியனுப்பியதாகத் தெரியவில்லை. பிறரைக் குறைகூறிக் கொண்டிருப்பதே, பாண்டித்தியத்தின் முக்கிய இலட்சண மென்ற கொள்கையுடையாரால் தமிழில் இலக்கியச்செல்வம் எந்நாளேனும் பெருகுவதாகுமா? அக்காலத்தில் பலராலும் விரும்பிக் கற்கப்பட்டுவந்த திராவிடப் பிரகாசிகை என்னும் நூலில் பிள்ளையவர்களைக் குறித்து எழுதியிருப்பன தமிழ்ப் பண்டிதர்கள் சிலரது மனப்போக்கை நன்கு தெரிவிக்கின்றன

ஆனால், பிள்ளையவர்கள் இக்கண்டனவுரை, வசவுரை முதலிய இடையூறுகளையெல்லாம் பொருட்படுத்தியவர்களே யல்லர். அறிவொழுக்கங்களுக் கேற்ப, சிறந்த நற்குணம் உடையவர்கள்; அடக்கம் நிரம்பியவர்கள்; எல்லாம் அறிந்த பெரும் புலவர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளவில்லை. தமக் குத்தெரியாத பொருள்களைப் பிறரிடங் கேட்டுணர்வதில் சிறி தும் கூச்சமற்றவர்கள். அவ்வாறு கேட்பது தமக்குச்சிறுமை யாமென்று கருதியவர்களுமல்லர். தமிழன்னைக்குப் புரியும் திருத்தொண்டிற் பிற வித்துவான்களும் உழைத்து வரவேண் டுமென்ற கொள்கையையே உடையவர்கள். ஒருசிலர் தம்மைத் தவிரத் தமிழ் நூல்களைப் பதிப்பிடும் பணியில் இறங்கிய பிற ருக்கெல்லாம் நரகதண்டனை விதித்துச் சபித்து வந்துள்ளார் கள். பிள்ளையவர்கள் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள் அல்லர். உண்மையான அன்போடு உண்மையான தமிழ்த்தொண்டு புரிவதே பிள்ளையவர்களது வாழ்க்கையின் பெருநோக்கமா யிருந்தது.

இவ்வகையான உண்மைத்தொண்டு பயனற்றுப்போகுமா? பிள்ளையவர்கள் வெற்றி யெய்தியமை தமிழ்நாடு நன்கறிந் ததே. தொல்காப்பியம், கலித்தொகை, சூடாமணி யென்பன அவர்கள் தந்த தனிப்பெருஞ் செல்வங்களுட் சிறந்தன. தமி ழன்னையின் அருங்கலமாகத் திகழும் இந்நூல்கள் உள்ள வரை இவர்கள் புகழும் நின்று நிலவுவதாகும்.

உரைநடை யெழுதுவதில் இவர்கள் எத்தனை ஆற்றல் படைத்தவர்களென்பது மேலே தந்துள்ள எடுத்துக்காட்டுக்

களால் விளங்கும். அழகிய செய்யுள்கள் இயற்றவல்ல கவித்துவ சக்தி இவர்களிடத்தில் சிறந்து விளங்கிற்று. மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள்,

நீடிய சீர்பெறு தாமோ
தரமன்ன நீள்புவியில்
வாடிய கூழ்கள் மழைமுகங்
கண்டென மாண்புறநீ
பாடிய செய்யுளைப் பார்த்தின்ப
வாரிபடிந் தனன்யான்
கோடிப் புலவர்கள் கூடினும்
நின்புகழ் கூறரிதே.

என்று பாடியிருக்கிறார்கள். இது சிறிதும் முகஸ்துதியன்று, உண்மையேயாகும்.

உரைநடையாளர், கவிஞர் என்ற இரண்டு நிலையிலும் பிள்ளையவர்கள் சிறந்த ஸ்தானத்தைப் பெறத்தக்கவர்கள். ஆனால் இவ்விரண்டு வகையிலும் அவரது ஆற்றல் மேன்மேலும் விளங்குவதைக் காணும் பேறு நமக்குக் கிடைக்கவில்லை. உதயதாரகை என்ற பத்திரிகைக்கு இவர்கள் ஆசிரியராயிருந்ததும், சைவ சமயம் பற்றிப் பல வசன நூல்கள் எழுதியதும் இங்கே குறிப்பிடத்தக்கன. ஆனால் சிறந்த பதிப்பாசிரியர் என்ற நிலையிற்றான் இன்று அவர்களைப் போற்றுகிறோம்.

தமிழன்னையே! உனது திருவுதரத்தில் பிள்ளையவர்களைப் போன்ற உத்தம மக்கள் பல்லாயிரவர் தோன்றுதல்வேண்டும். அவர்களது விரிந்து பரந்த நோக்கங்களும், அரிய நற்குணங்களும் நம்மனோருக்கு வழிகாட்டியாய் என்றென்றும் திகழ்தல் வேண்டும்! அவர்கள் தாய்மொழியின்மீது கொண்டிருந்த தூய அன்பும், உண்மைத் திருத்தொண்டும் நம்மனோரையும் ஊக்குவித்து நம்மை உண்மைத் தமிழ் மக்களாகத் திருத்துதல் வேண்டும்! அவர்களை இலட்சிய புருஷராகக்கொண்டு நமது தாய்மொழிக்கு உற்ற பணியை நாம் புரிந்துவரல்வேண்டும்!

# அஞ்சாமை.

இப்பொழுது நாட்டுக்கு எது தேவை? அஞ்சாமை தேவை. அஞ்சாமையால் உண்மை அரும்பும்; உண்மையால் உணர்வு பிறக்கும்; உணர்வால் சுயஆட்சி கிடைக்கும்; சுயஆட்சியால் உலக இன்பம் நுகரலாம்; உலக இன்பத்தால் பேரின்பம் பெறலாம். ஆதலால், வரம்பிலா இன்பத்துக்கு அடிப்படை அஞ்சாமை என்பதை ஈண்டு ஒரு முறைக்குப் பன்முறை வலியுறுத்துகிறோம்.

தேசபக்தசிரோமணியாகிய சித்தரஞ்சினதாஸர் சிறைக்குள் நுழைவதற்கு முன்னர் விடுத்த திருமுகமொன்றில் அஞ்சாமையை மூன்றிடங்களில் சிறப்பாக வகிக்குமாறு குறிப்பிட்டிருக்கிறார். 1. சிறைபுகுதற்கும் 2. அடிஉதைபடுதற்கும் 3. பீரங்கிக் குண்டுப் பிரயோகத்துக்கும் அஞ்சுதலாகாது என்று அப்பெரியார் தேசத்தாருக்கு அறிவுறுத்தினர். இந்திய மக்கள் இப்பொழுது முதலிரண்டு சோதனைகளுக்கும் இடங்கொடுக்கவில்லை. இந்திய மக்கள் தாராளமாக அகமுகமலர்ச்சியோடு சிறை புகுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குச் சிறைப் பயம் ஒழிந்தது. இந்தியமக்கள் அடி உதை படுதற்கு அஞ்சுகிறார்களில்லை. ஆகவே அவர்கள் அடி உதை, அச்சத்தையுங் கடந்து நிற்றல் விளங்குகிறது. பீரங்கிப் பயம் உண்டாகாதென்று நம்புகிறோம். காந்தியடிகள் துணைவழியே மூர்க்கமில்லா ஆத்ம சக்தி வழிநின்று, பிறர்க்கு எவ்வழியிலுங் கேடு சூழாது, ஒத்துழையா இயக்கத்தை வளர்த்து வருமட்டும் பீரங்கிப் பிரயோகத்திற்கு இடமே நேராது. ஆதலால், பீரங்கிப் பயம் நேர்தல் அருமை. நியாயவரம்பு மீறிச் சில முரட்டு உத்தியோகத்தர்கள் பீரங்கி துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யினும், அதற்கும் அஞ்சலாகாது. தேசபந்து சித்தரஞ்சின தாஸர் சிறைச்சாலை நண்ணுவதற்கு முன்னர்த் தேசத்தார்க்குச் செய்த உபதேசம் அஞ்சாமையைப் பற்றியதேயாம்.

'சிறை புகுவதில் அஞ்சாமை காட்டலாம், அடிஉதைபடும் போதும் அஞ்சாமை காட்டலாம், பீரங்கிமுன்னே அஞ்சா

மையை எப்படிக் காட்டுவது?' என்று சிலர் வினவலாம். பீரங்கி முன்னே அஞ்சாமை காட்டுவதுதான் உண்மையும் உறுதியும் நிரம்பிய அஞ்சாமை. ஒருவன் பீரங்கி எடுத்துச் சுடுங்காலத்து, அச்சுடுதலுக்குப் பயந்து, பீரங்கியால் அவனை எதிர்த்துச் சுட நினைப்பதும் முயல்வதும் அஞ்சாமையின்பாற் பட்டனவாகா. ஆயுதம் தாங்குகிறவன் அச்சம் உடையவனே யாவன். அச்சம் இல்லாதவன் ஆயுதம் தாங்கமாட்டான். பீரங்கியைப் பீரங்கியால் எதிர்க்கிறவன் அஞ்சாமையுடையவனல்லன். பீரங்கியை ஆத்மசக்தியால் எதிர்ப்பதே ஆண்தகைமை. பீரங்கிமுன் பீரங்கி காட்டாது; ஆத்மசக்தி காட்டி அஞ்சாது நிற்பவனே மனிதன்.

விசுவாமித்திரன் ஆயுதந்தாங்கி எதிர்த்தபோது, வசிட்டர் ஆயுதம் தாங்கி எதிர்த்தாரோ? இரணியனுல் ஏவப்பட்ட கொலைஞர் ஆயுதங்களைக் காட்டிய நேரத்தில் பிரகலாதன் என்ன செய்தான்? ஆயுதம் தாங்கினனோ? யமன் பாசத்தை வீசிய வேளையில் மார்க்கண்டேயர் பாசத்தை அறுத்தெறிய வாள் ஏந்தினரோ? கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சமயத்தில், அவர் சத்துருக்களை வதைக்க நினைத்தாரோ? யானை வந்தெதிர்த்தபொழுது திருநாவுக்கரசர், அதனை மூர்க்க சக்தியால் எதிர்த்தாரோ? இல்லையே.. இவர்கள் அஞ்சாமலிருத்தற்குக் காரணமென்னை? இவர்கட்கு ஆத்ம சக்தியில் நம்பிக்கை யிருந்தமையே யாகும். ஆத்மசக்தியில் முழு நம்பிக்கையுடையவர் எல்லாச் சோதனைகட்கும் அஞ்சாது நிற்பர். அவர் உள்ளத்தில் அஞ்சாமை பதிந்துகிடக்கும். மகாத்மா காந்தி ஆத்மசக்தியில் முழு நம்பிக்கை கொண்டுள்ளமையால் அஞ்சாமை அவர்பால் பணிசெய்கிறது.

நமது தேசநிலை, காலநிலை, அதிகாரவர்க்கத்தார்நிலை முதலிய நிலைகளைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால், நமக்கு அஞ்சாமை வேண்டற்பால தென்பது தெற்றென விளங்கும். தேசம் அதிகாரவர்க்கத்தார் ஆட்சி முறைவழி உழல்கிறது. காலமும் அவர்காலமாக இருக்கிறது. இந்நெருக்கடியான நிலையில் நாம் சுயராஜ்ய முயற்சி செய்கிறோம். நம் முயற்சியை அடக்குமுறைகள் ஒடுக்குகின்றன. அதிகாரவர்க்கத்தார் இப்பொழுது சட்டங்களைப் பிரயோகித்துவரும் முறை

யைப்பற்றி நாம் விரித்துக்கூற வேண்டியதில்லை. அடக்கு முறையை நாணுறச்செய்ய வேண்டுவது தேசத்தார் கடமை. அதற்குக் கருவி யாது? அஞ்சாமை. தேசத்தார் அஞ்சாமை, தேசத்தையும் காலத்தையும் அதிகாரவர்க்கத்தாரையும் குணப்படுத்தும். ஆதலால் வேண்டுவது அஞ்சாமை.

இப்பொழுது தேசத்தில் அஞ்சாமை நிலைபெற்றாலன்றி, ஒத்துழையா இயக்கம் வெற்றி பெறாது. ஒத்துழையாமை என்னும் தெய்வீக இயக்கம், அஞ்சாமையை அடிப்படையாகக் கொண்டிலங்குகிறது. ஒத்துழையா இயக்கத்துக்கு அஞ்சாமை வேண்டும், வேண்டும், வேண்டும் என்று காந்தியடிகள் சொல்லிவந்தார். காந்தியடிகள் சொல்லிவந்த அஞ்சாமையை லார்ட்ரெடிங் தேசத்தில் செய்கையில் நிலைபெறுத்துகிறார் அவரைத் தலைமைகொண்ட அதிகாரவர்க்கம், ஒத்துழையா இயக்கத்தை ஒடுக்க அடக்குமுறையைக் கையாண்டு வருகிறது. அடக்குமுறையின் நெருக்கடி அஞ்சாமையை உண்டு பண்ணுவது இயல்பு. சிறைவாசத்துக்கு அஞ்சிக்கொண்டிருந்த எத்தனையோ சீமான்கள் இப்பொழுது சிறைவாசத்துக்கு அஞ்சுகிறார்களில்லை. லார்ட்ரொனால்ட்ஷே, ஸர் ஹார்கோர்ட்பட்லர் முதலாயினோர் தேசத்தில் அஞ்சாமையை வளர்க்கின்றனர். இன்னும் இவர்கள் தங்கள் பிடிவாதத்தை விடாமலிருக்கிறார்கள். அப்பிடிவாதத்தால் தேசத்துக்குக் கெடுதி விளையாது.

கூட்டங் கூட்டமாகச் சிறை புகுவதன் பொருள் லார்ட்ரெடிங்குக்குத் தெரியவில்லைப்போலும்! லார்ட்ரெடிங் பலவித வித்தைகள் பயின்றிருக்கலாம். அவர் எத்தனையோ புத்தகங்களைக்கண்டிருக்கலாம், கேட்டிருக்கலாம், எத்தனையோ தேச சரித்திரங்களைப் படித்திருக்கலாம். ஆனால் காந்தியடிகளின் சத்தியாக்கிரக வித்தையை லார்ட் ரெடிங் எந்தச் சர்வகலா சாலையிலும் பயிலவில்லை. இவ்வருமையான வித்தையைப்பயில எந்தக் கலாசாலையையுந் தேடி ஓடவேண்டுவதில்லை. இயந்திரத்திலும் பீரங்கியிலும் வாழ்வை நடத்துவோருக்குச் சத்தி

யாக்கிரகத்தின் நுண்மை புலனுதல் அருமை. இயற்கையோடியைந்த வாழ்வை நடாத்துவோருக்குச் சத்தியாக்கிரகத்தின் உண்மை புலனுகும். இந்தியாவிலுள்ள சில கொடிய சட்டங்களைக்கொண்டு சத்தியாக்கிரகத்தின் ஒரு பகுதியாகிய ஒத்துழையா இயக்கத்தை ஒடுக்கலாம் என்று லார்ட்ரெடிங் கருதியிருக்கின்றுரோ என்னவோ தெரியவில்லை. ஒத்துழையாமையை ஒடுக்கும் முறை ஒன்று உண்டு. அஃது அன்புமுறை. அடக்குமுறையால் ஒத்துழையாமையை ஒடுக்க முயல்வது, அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாத கருவியாகிய அஞ்சாமையை வளர்ப்பதாக முடியும்.

லார்ட் செம்ஸ்பர்ட் சத்தியாக்கிரகத்தின் செம்பொருள் உணராது இடர்ப்பட்டார்; ஓட்வியர் செய்த பஞ்சாப் படுகொலையை ஆதரித்தார்; பின்னர்த் தோன்றிய ஒத்துழையா இயக்கத்தின் பொருள் தேருது 'அவ்வியக்கம் தானே சாகட்டும்' என்று கூறி வாளாவிருந்தார். லார்ட்ரெடிங்குக்கும் ஒத்துழையா இயக்கத்தின் உண்மை புலனுகவில்லை என்பது அவர் பேச்சாலும் செயலாலும் நன்கு விளங்குகிறது. லார்ட் ரெடிங்குக்கு ஒத்துழையா இயக்கத்தின் உண்மை புலனுகியிருந்தால், பண்டித மதன்மோகன் மாளவியாவைத் தலைமைகொண்டு தம்மைக்கண்ட பிரதிநிதிக் கூட்டத்தின் வேண்டுகோளுக்கு அவர் இணங்கியிருப்பர் லார்ட் ரெடிங் பிடிவாதம், தேசத்தில் அஞ்சாமையை வளர்க்கும் என்பதிற் சந்தேகமில்லை.

காந்தியடிகள், சத்தியாக்கிரகத்தை இந்தியாவில் பிரசங்கித்தபோது, அவரது பிரசங்கத்துக்கு ஒரு சிலரே செவிசாய்த்து வந்தனர். மற்றவர்கள், இவர் சொல்வது நடவாத காரியம் என்று பேசினர். 'சகல சுகங்களையும் வெறுத்து எவரையா சிறைபுகுவார்' என்று அச்சம் தரத்தக்க உரைகளை வழங்கிக்கொண்டிருந்தனர் பல நண்பர். ஆனுல், இப்பொழுதோ காந்தியடிகளின் அஞ்சாமை, செல்வத்திற் சிறந்த மோதிலால் நேருவையும், வருவாயிற்சிறந்த சித்தரஞ்சினதாஸரையும் சிறையில் நிறுத்தியிருக்கிறது. அடிகளின் அஞ்சாமை சிறைகளில் நிரம்பிவருகிறது. எங்கணும் அஞ்சாமை!

கொழுந்துவிட்டெரியும் அஞ்சாமையை எவர் அடக்கமுயலினும் அஃது அடங்காது. காங்கிரஸ் துணையை மீறி, எவராவது மூர்க்கசக்தியை உபயோகித்தால், கொழுந்துவிட்டெரியும் அஞ்சாமை அடங்கி ஒடுங்கிப்போகும். மலையாளத்தில் எழுந்த மூர்க்க சக்தியால் காங்கிரஸ் முயற்சி எவ்வளவோ தளர்ச்சிபெற்றது என்று கூறலாம். மூர்க்கசக்தியை உபயோகிப்பது காந்தியடிகளுக்கு அவமானத்தையும், தேசத்துக்குக் கேட்டையும், காங்கிரஸுக்குத் தோல்வியையுந் தேடுவதாகும்; இப்பொழுது தோன்றியுள்ள அஞ்சாமையையும் வீழ்த்துவதாகும். ஆதலால் எந்த மூலையிலும், எந்த முடுக்கிலும், எந்தச்சந்திலும், எந்தப்பொந்திலும் மூர்க்கசக்தி எழாதவாறு பாதுகாக்க வேண்டியது காங்கிரஸ் ஊழியர் கடமை. எதிரிகள் மூர்க்க சக்தியைக் கிளப்பினுலும் காங்கிரஸ்காரர் தம் அறிவால்-அன்பால்-மூர்க்க சக்திக்கு இடந்தாராது போதல்வேண்டும். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தவர்கள் தமது இரத்தத்தைப் பிறர்சிந்த இடங்கொடுக்கலாம், பிறர் இரத்தத்தை தாம்சிந்த மனத்திலும் நினைத்தல் ஆகாது. அவ்வாறு நினைப்பவன் அஞ்சாமையின் பெருமையை உணராத கோழையாவான்.

இப்பொழுது எதிரிகள் பலவழியிலும் அச்சமூட்டிவருவது பலர் அறிந்ததொன்றே. முதலாவது கைராட்டினத்தைப் பற்றிப் பல அஞ்சுமொழிகள் வெளிவருகின்றன. 'கைராட்டினத்தால் வாழ்வு நடைபெருது, பொருள்வராது, வயிற்றுக்கே வனவாசஞ் செய்தல்வேண்டும், இரண்டணுக் கடன் கிடைக்காது' என்று அச்சமூட்டுவோர் சிலர்; 'கைராட்டினம் ஒத்துழையா இயக்கத்தின் சார்பாகப் பரவிவருகிறது, ஆதலால் அது கூடாது' என்று அச்சுறுத்துவோர் சிலர். அதிகாரிகளுக்குக் கதர் உடையும் காந்திக்குல்லாயும் பிடிப்பதில்லை. அவைகளை அணிதல் வேண்டா என்று பயமுறுத்துவோர் சிலர்; ஒத்துழையா இயக்கம் பெருங்குழப்பத்தை உண்டுபண்ணும், அதில் தலையிடாதிருப்பதே நல்லது என்று கிலியூட்டுவோர் சிலர்; ஒத்துழையா இயக்கம் சிறைவாசத்தில் கொண்டுபோய் நிறுத்தும், அதில் சேரவேண்டா என்று நடுக்குறுத்துவோர் சிலர். இவ்வாறு தேசமக்கள் பெற்றுவரும் அஞ்சாமையை வேரோடு அறுத்துத்தள்ள எதிரிகள் முயன்றுவருகிருர்கள்.

இவர்தம் அச்ச உரைகளுக்குச் செவிசாய்ப்பது தேசத்தை வஞ்சிப்பதாகும். அஞ்சாமையை இயல்பாக வளர்க்கும் ஓர் இயக்கத்தின் வேரைக் கல்லமுயல்வோரோடு சேராதிருக்கு மாறு நேயர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

அஞ்சுகிற மனிதன் விலங்கினும் தாழ்ந்தவன். அச்சம் என்பது அஞ்ஞானம். அஞ்சாமை என்பது ஞானம். அஞ்சாமையைப்பற்றிய கல்வியைப் பயிலல்வேண்டும்; அதைப்பற்றிக் கூறும் நூல்களை ஓதல்வேண்டும்; அதைப்பற்றிப்பேசும் கூட்டத்தலைவரோடு பழகல்வேண்டும். அஞ்சாமையை வளர்க்கப் பல சங்கங்களைக்கண்டு, பல சொற்பொழிவுகளைக் கேட்பது நல்லது. அஞ்சாமையை அருந்தி, அஞ்சாமையை உண்டு, அஞ்சாமையில் வாழ்வது சிறப்பு. காண்டல் கேட்டல் முதலியனவும் அஞ்சாமை மயமாக இருத்தல் வீரவாழ்வுக்கு வழி கோலுவதாகும். காந்தியடிகள் அஞ்சாமை என்னும் ஞான வாள் ஏந்தி நிற்கிறார்.

அவர் மனைவியார் அவ்வாயுதந் தாங்கி அவர்பின்னே நிற்கின்றார். அவர் குமாரருள் ஒருவர் கல்கத்தாவில் சிறை புகுந்தார். மற்றொருவர் அலகபாத்தில் சிறைபுகத் தொடை தட்டுகிறார். மோதிலால் நேரு சிறைபுகுந்தார். அவர்பின்னே அவர் தம் மகனார் அஞ்சாது சிறைசென்றார். அவர்தம் உறவினர் பலர் சிறைநோக்குகிறார். வங்காளத்தில் சிரரஞ்சினதாஸர் சிறைபுகுந்தார். அவர்பின்னே அவர்தம் தந்தை சித்தரஞ்சினதாஸர் சிறைவாசத்தை நாடினார். தாயாரோ வலிந்து வலிந்து சிறை நோக்குகிறார். இப்பெரியோர் குடும்பத்தில் அச்சத்தைக் காணோம். என்ன அஞ்சாமை!

தேசத்தினிடத்தில் உண்மையான அன்பு கொள்வோரிடத்து அஞ்சாமை இயல்பாகவே அமையும். கல்கத்தாவில் கண்டோரை நடுக்குறச்செய்யும் பீரங்கிகளும், துப்பாக்கிகளும் ஏந்திய போர்வீரர்கள் அணி அணியாகச் சூழ்ந்துள்ள ஓரிடத்தில், கதர் உடை தரித்துச் சென்ற குற்றத்தின்பொருட்டு, ஒரு சார்ஜண்டின் கோபத்துக்குள்ளாகிய ஓர் இளைஞன், அவ்விடத்தில் காட்டிய அஞ்சாமை போற்றத்தக்கது. சார்ஜண்ட் கதர்

உடையைக் கிழித்தபோதும் 'காந்திக்கு ஜேய்' என்று இளைஞன் கோஷித்தான். அவன் சார்ஜண்டால் அடி உதை வாங்கியபோதும் முகமலர்ச்சியோடு 'காந்திக்கு ஜேய்' என்று முழங்கினான். வழியே தாணாவுக்குச் சார்ஜண்ட் அவனை இழுத்துக் கொண்டு போனபோதும் 'காந்திக்கு ஜேய்' என்று சங்கீர்த்தனஞ் செய்தான். தன் உடையும் முழக்கமும் சார்ஜண்டுக்குக் கோபமூட்டுமே, கோபமேலீட்டால் அவன் தன்னைப் பெரிதும் துன்புறுத்துவானே என்ற அச்சம் இளைஞனுக்குத் தோன்றவில்லை. அத்தகைய அஞ்சாமை, சிறுவனுக்கு எங்கேயிருந்து தோன்றியது? அவனிடத்துள்ள தேசபக்தியினின்றும் அது தோன்றியதென்றே கூறல் வேண்டும். உண்மையான தேசபக்தி உள்ளவரிடத்தில் அஞ்சாமை இயல்பாகத் தோன்றும்.

சகோதரிகளே! சகோதரர்களே! எதற்கும் அஞ்சவேண்டா! அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்சவருவதுமில்லை என்ற திருவாக்கு நமது தமிழ் நாட்டில் பிறந்ததன்றோ. தமிழ்மக்களே! எழுங்கள், அஞ்சாதேயுங்கள், பொன் பொருள் பூமி காணி மனைவி மக்கள் உற்றார் பெற்றார்மீது கவலைவேண்டா. திடீரென மரணம் நேர்ந்தால், நம் உயிர்ச்சார்பும் பொருட்சார்பும் உடன்வருமோ? எல்லாவற்றையும் எல்லாரையுங் காக்க ஓர் ஆண்டவன் இருக்கிறான் அவன்மீது பாரத்தைச்சுமத்தி, வந்தேமாதர முழக்கத்தோடு, 'அஞ்சாமை' என்னும் ஞானவாளேந்தி எழுங்கள்.

# விதியின் திறம்.

நமது நாட்டில் ஆங்காங்கு வழங்கும் தனிப்பாடல்கள் பல. அவற்றைப் பாடிய புலவர்கள் பலருடைய வரலாறுகள் சொல்வாரற்று மறைந்துபோயின. சில தனிப்பாடல்கள் இயற்றிய புலவர்களைப் பற்றியும் அவற்றின் சந்தர்ப்பங்களைப் பற்றியும் கர்ணபரம்பரையாக அங்கங்கே சிலசில செய்திகள் மட்டும் அப்பாடல்களோடு வழங்கிவருகின்றன. என்னுடைய இளமைக்காலத்தில் அத்தகைய செய்திகள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். சில தனிப்பாடல்கள் சம்பந்தமான வரலாறுகள் மிகுந்த வியப்பை உண்டாக்கும். அவற்றுள் ஒன்று பின்வருமாறு:—

'மூவேந்தரு மற்றுச் சங்கமும் போய்'விட்டகாலத்தில் தமிழ் நாட்டில் ஒரு சமயம் பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது புலவர்களை ஆதரிக்கும் பிரபுக்கள் அரியராயினர். கொள்ளைக் கூட்டங்கள் அதிகரித்தன. புலவர்கள் வறுமையின் மிகுதியால் தாம் கற்ற கல்வியையே வெறுத்துப் பேசும் நிலைமைக்கு வந்துவிட்டனர்.

அக்காலத்தில் ஒரு புலவர் தம்மை ஆதரிப்பாரின்றி வருந்தினார். அவர் சிவபக்திச்செல்வம் நிரம்பியவர்; வேறொரு தொழிலும் செய்ய அறியார். ஆதலின் எங்கேயாவது சென்று ஜீவனம் செய்யலா மென்னும் நினைவுடன் தம் இல்லாளொடு அவர் வீட்டைவிட்டு அயலிடத்துக்குப் புறப்படலானார்.

புலவரும் மனைவியும் ஒரு காட்டின் வழியே செல்ல நேர்ந்தது. அக்காட்டில் சிலர் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் புலவரையும் அவர் மனைவியையுங் கண்டு நெருங்கி வந்தார்கள். அவர்களுடைய தோற்றம் அஞ்சத்தக்கதாக இருந்தது. அக்கூட்டத்தினரைக் கண்ட புலவருடைய மனைவி பயந்து, "சகோதரர்களே, என்னையும் என் கணவரையும் காப்பாற்றுங்கள். நாங்கள் ஜீவனத்துக்கு வழியில்லாமல் வேறு இடங்கள் சென்று பிழைக்கலாமென்றெண்ணி வருகிறோம்.

உங்களைக் கண்டால் நல்ல புண்ணியசாலிகளென்று தோன்றுகிறது" என்று சொல்லி அழுதாள். சகோதரர்களென்று அவள் அழைத்ததை அக்கூட்டத்தில் இருந்த ஒருவன் கேட்டு மனமிரங்கி அவ்விருவரையும் பார்த்து, "நீங்கள் பயப்பட வேண்டா. உங்களை நாங்கள் காப்பாற்றுகிறோம். நீங்கள் இனிமேல் எங்களோடு இருக்கலாம். எங்களுடைய சகோதரியையும் சகோதரிபுருஷரையும்போல உங்களை நாங்கள் பார்த்து வருவோம். எங்களுக்கு வரும் லாபத்தில் உங்களுக்கும் பங்கு தருவோம். எங்களோடு சேர்ந்து உழைக்கவேண்டும்" என்றான்.

புலவர்:- அப்படியே செய்கிறேன். நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?

அவன்:- நாங்கள் திருட்டுத் தொழில் செய்வோம்.

புலவருக்கும் அவருடைய மனைவிக்கும் அப்பொழுதுதான் அவர்கள் கள்வரென்று தெரியவந்தது. புலவர் சற்று நேரம் யோசித்தார்.

கள்வர் தலைவன்:- என்ன யோசிக்கிறீர்? எங்களுக்குள் ஒரு தருமம் இருக்கின்றது. ஏழைகள் வீடுகளிலும் தருமவான்கள் வீடுகளிலும் போய் நாங்கள் திருடமாட்டோம். பிறருக்குக் கொடாமல் தாமும் உண்ணாமல் பணத்தைச் சேர்த்து வைத்திருக்கும் உலோபிகள் வீட்டிலேதான் திருடுவோம். நல்லவர்கள் வீட்டிற்கு நாங்கள் திருடப்போனால் அபசகுனங்கள் உண்டாகும். கன்னம் வைக்கும்போது தேள் கையில் கொட்டும். அப்பொழுது நாங்கள் பயந்து திரும்பிவிடுவோம்.

கள்வர் தலைவன் திருட்டுத்தொழிலைப்பற்றி வேறுசில செய்திகளும் சொல்லி நிறுத்தினான்.

புலவர் 'இதுவும் சிவன் செயல் போலும்!' என்று எண்ணி வேறு வழி இல்லாமையால் அவர்களோடு இருக்க உடன்பட்டார். கள்வர்கள் அவ்விருவருக்கும் காட்டுக்குள் ஒரு தனி இடம் அமைத்துக் கொடுத்து வேண்டியவற்றை அளித்து ஆதரித்துவந்தார்கள். தீத்தொழிலை உடையவர்களானாலும் அவர்களுக்கு இருந்த அன்புடைமையை நினைந்து நினைந்து

அப்புலவர் வியந்தார்; நாளடைவில் நல்லுபதேசம் செய்து அவர்களைத் திருத்திவிடலாமென்று அவர் எண்ணினர்.

ஒருநாள் கள்வர் தலைவன் புலவரையும் திருட வரும்படி அழைத்தான். ‘குரங்குக்கு வாழ்க்கைப் பட்டால் மரம் ஏறு திருக்க முடியுமோ?’ முன்பே வாக்குக் கொடுத்தபடி செய்ய வேண்டியவர் ஆதலின் புலவர் அதற்கு இணங்கினர்.

பக்கத்திலிருந்த ஊரிலுள்ள ஒரு ஜமீன்தாருடைய அரண்மனையில் அன்று திருட எண்ணிக் கள்வர் சென்றனர். புலவரும் உடன் சென்றார். சென்ற கள்வர்கள் ஜமீன்தாரின் அரண்மனையை அடைந்து ஒரு பக்கத்தில் கன்னமிட்டுப் புலவரை உள்ளே போய் உளவறிந்துவரச் செய்தனர்.

கன்னமிட்ட துவாரத்தின் வழியே புலவர் நுழைந்து உள்ளே சென்றார். அவர் சென்ற இடம் அரண்மனையின் அந்தப்புரமாக இருந்தது. அங்கே ஓரிடத்தில் ஒரு பெரிய மஞ்சத்தில் ஜமீன்தாரும் அவர் மனைவியும் உறங்கிக்கொண்டிருந்தனர். நிலைக் கண்ணாடிகளும் அழகிய விளக்குக்களும் வேறு பல அலங்காரப் பொருள்களும் அவ்விடத்தை அழகுசெய்து விளக்கின. அவற்றைக்கண்ட புலவர் வியந்து இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்தார். பின்பு அந்த மஞ்சத்தின் கீழே புகுந்து மறைவாக இருந்து என்ன செய்வதென்று யோசிக்கலானார்.

இரவின் நான்காம் ஜாமத்திலே ஜமீன்தாரும் அவர் மனைவியும் விழித்துக்கொண்டனர். ஜமீன்தார் தமிழ்ப் பயிற்சி மிக்கவர். தமிழ் நயம் கண்டு இன்புற்றுப் பொழுதுபோக்கும் இயல்புள்ளவர். அவர் மனைவியும் தமிழன்பு மிக்கவள். விழித்துக்கொண்ட அவ்விருவரும் ஒருவரோடொருவர் பலவிஷயங்கள் பேச ஆரம்பித்தார்கள். சிலநேரத்திற்குப் பின் இருவரும் சேர்ந்து ஒரு நூதனமான செய்யுளை இயற்றலானார்கள்.

ஜமீன்தார் முதல் இரண்டுஅடியை ஒரு வினாவாக அமைத்தார். அவர் மனைவி, அவ்வினாவுக்குரிய விடையை அமைத்துப் பின் இரண்டடியையும் பூர்த்திசெய்ய முயன்றாள்.

புலவர் கீழே இருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு இருந்தார். அவர் காதில் அத்தமிழ்ச் செய்யுள் இனிமையோடு புகுந்தது. கள்வருக்கிடையே இருக்கையில் தமிழ் நூல்களைப் பற்றி நினைக்கச் சமயம் ஏது? ஆதலின் தமிழுக்கு அலந்திருந்த அவர் மனம் அப்பொழுது ஒரு புதிய உணர்ச்சியை அடைந்தது. உடனே அவர் அவ்விருவர் சம்பாஷணையிலும் ஒன்றிவிட்டார். ஜமீன்தார் சொன்ன செய்யுளின் முற்பாதிக்கு ஏற்ற பிற்பாதி அநாயாசமாக அவருக்குத் தோன்றிற்று. அதைச் செவ்வையாக மனத்துக்குள் அமைத்துக் கொண்டார். தமக்கு அப்போது உண்டான ஊக்கத்தில் அவர் தாம் களவு செய்ய வந்திருப்பதையும் மறைவாக இருப்பதையும் மறந்தார். ஒரு சபையில் தமக்குக் கொடுக்கப்பட்ட சமஸ்யையை முடிக்கவேண்டிய நிலையில் இருப்பதாக எண்ணினர். ஜமீன்தார் தாம் முடித்த முற்பாதியை மீண்டும் மனைவிக்குச் சொல்லிக்காட்டினர். உடனே புலவர் தாம் முன்பே மனத்துள் முடித்துவைத்திருந்த பிற்பாதியைத் தொடர்ந்து கீழே இருந்தபடியே கூறினர்.

ஜமீன்தார் திடுக்கிட்டார். அவர் மனைவி சரேலென்று எழுந்து வேறிடஞ் சென்றாள். ஜமீன்தார், "யார் அங்கே?" என்று அதட்டிக் கேட்டார். புலவர் தம்முடைய நிலை இன்னதென்பதை அப்பொழுதுதான் உணர்ந்தார். மெல்ல வெளியே வந்து உடல் நடுக்கத்தோடு நாக்குழற அவர் தம்முடைய வரலாற்றை உரைக்கலானர்.

ஜமீன்தார் முதலில் கோபம் கொண்டவராக இருந்தாலும் தமிழ்ச்சுவை யறிந்தவராதலின் புலவர் தமது வரலாற்றைக் கூறிக்கொண்டு வரவர அவர் மனம் இளகியது. பசிப் பிணியே புலவரை அந்நிலைக்குக் கொண்டுவந்ததென்பதை நினைந்து நினைந்து அவர் மிகவும் மனம் இரங்கினர்.

புலவர்:- ஏதோ ஊழ்வினை வசத்தால் இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். நான் முன்பே உயிரை விட்டிருப்பேன். தமிழை மறந்துவிட்டு உயிர் தரித்திருப்பதில் என்ன

பயன் இருக்கிறது? என்னுடைய மனைவி யொருத்தி இருக்கிருள். அவளுக்காக உயிர் வைத்திருக்கிறேன். என்செய்வேன்! என்னை எஜமானவர்கள் காப்பாற்றவேண்டும். அன்றியும் மற்றொரு வரம் அருளல்வேண்டும். என்னேடு வந்திருக்கும் கள்வர்கள் சில நற்குணங்களை உடையவர்கள்; லோபிகள் வீடுகளில்தான் அவர்கள் திருடுவார்கள். இன்று தவறி இங்கே வந்துவிட்டார்கள். இதுவரையில் எங்களை அவர்கள் பாதுகாத்துவந்தார்கள். அவர்களை இப்பொழுது எஜமானவர்கள் துன்புறுத்தாமல் விட்டுவிடவேண்டும். என்னுல் அவர்கள் அகப்பட்டு வருந்தலாகாது.

புலவருடைய நன்றியறிவின்மிகுதியை ஜமீன்தார் உணர்ந்தார். அவருடைய மனம் அதிகமாக இரங்கியது.

"ஐயா! நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டா. உம்முடைய நண்பர்களை நான் ஒன்றும் செய்யேன். இதோ என்னுடைய பொக்கிஷ அறையைக் காட்டுகிறேன். அங்கே உள்ளவற்றில் உமக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டுபோய் உம்முடைய நண்பர்களுக்கும் கொடுத்துச் சௌக்கியமாக இரும்" என்று சொல்லி ஜமீன்தார் புலவரை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றுர். அவ்வறையில் பலவகையான ஆடையாபரணங்கள் நிறைந்திருந்தன. முளைகளில் முத்துமாலைகளும் இரத்தின மாலைகளும் பொன்மாலைகளும் மாட்டப்பட்டுத்தொங்கின. கொடிகளில் உயர்ந்த பட்டுப்பீதாம்பரங்கள் இருந்தன. இவைகளையன்றிக் கீழே சில பெட்டிகளும் காணப்பட்டன.

ஜமீன்தார், "இவற்றுள் எது வேண்டுமானுலும் எடுத்துச் செல்லலாம்" என்றுர். அங்கே இருந்தவற்றைக்கண்ட புலவர் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றுர். இன்னதை எடுத்துக்கொள்வதென்று தோன்றவில்லை. "யாவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கத்தக்கதாக இருக்கவேண்டுமே" என்று யோசித்தார். சிலசில ஆபரணங்களைக் கையால் தொட்டுப்பார்த்தார். சிலவற்றை எடுத்து நோக்கினுர். பித்துப்பிடித்தவர்போல ஒரு நாழிகை ஒன்றும் தோன்றுமல் இப்படி நின்று பின்பு முடிவில் ஒரு பெட்டியைக்காட்டி, "இதை எடுத்துப்போகிறேன்" என்றுர். "அப்படியே செய்யும்" என்று சொல்லிவிட்டு ஜமீன்தார்

அதன் ஒரு பக்கத்தைப் பிடித்துக்கொண்டார். புலவர் மற்றொரு பக்கத்தைப் பிடித்துக்கொண்டார். அதை இருவரும் கன்னவாசல் வரையில் தூக்கிவந்தனர். அவ்வாசலுக்குள் பெட்டி செல்லவில்லை. அதையறிந்த ஜமீன்தார் சில ஆயுதங்களை எடுத்துவந்து அந்தத் துவாரத்தைப் பெரிதாக்கினர். வெளியே பெட்டியைக் கொண்டுவந்து புலவர் தலையில் தூக்கி வைத்தார். "புலவரே, ஞாபகம் இருக்கவேண்டும், கஷ்டப் பட்டால் கூசாமல் என்னிடம் வந்துவிடும். எப்பொழுது உமக்கு வரமுடியுமோ அப்பொழுது வாரும். சௌக்கியமாக இங்கேயே இருக்கலாம். இந்த இடம் உம்முடைய இடமே இதோ அந்தப் பெட்டியின் திறவுகோல் இருக்கிறது" என்று சொல்லி ஒரு திறவுகோலை அளித்து விடைகொடுத் தனுப்பினர்.

உள்ளே சென்றவர் நெடுநேரமாகியும் வாராமையினலும் உள்ளிருந்து ஏதோ பேசும் குரல் கேட்டமையாலும் புலவர் அகப்பட்டுக்கொண்டாரென்று பயந்து கள்வர்கள் ஓடிப் போய்விட்டனர். வெளியில் வந்த புலவர் அவர்களைக் காணவில்லை. ஆதலின் அவர் 'இன்றைக்கு நல்ல லாபம் நம்மால் உண்டாயிற்றென்று கள்வர்கள் சந்தோஷப்படுவார்கள், அவர்களைத் திருத்துவதற்கு இது நல்ல சமயம்' என்று எண்ணிக்கொண்டு பெட்டியின் பாரத்தைப் பொருட்படுத்தாமல் ஊக்கத்தோடு அதனைச் சுமந்துகொண்டு தம்முடைய உறைவிடத்துக்கு வந்தார். அவருடைய நிலை என்ன ஆகுமோ என்றெண்ணிய அவர் மனைவி அவரது வரவை மிக்க ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். புலவர் மகிழ்ச்சியோடு தள்ளாடித் தள்ளாடிப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வருவதைக் கண்ட அவளுக்குப் போன உயிர் வந்தது. எதிர்சென்று அவர் தலையிலிருந்த பெட்டியை இறக்கினள். அதைக் கீழே வைத்துவிட்டு நிகழ்ந்தவற்றையெல்லாம் அவர் சொன்னர். அவர் மனைவி கேட்டு வியப்புற்றாள்.

அந்தப்பெட்டியில் என்ன என்ன பொருள்கள் இருக்கின்றனவோ என்று பார்க்கவேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு இருந்தது. ஆதலின் திறவுகோலைக்கொண்டு புலவர் திறந்து கைவைத்துப்பார்த்தார். முத்தும் இரத்தினங்களும் பொன்

னும் ஆடையும் அதில் நிரம்பியிருக்குமென்று அவர் நம்பியிருந்தார். பாவம்! அப்பெட்டி முழுவதும் உப்பு நிறைந்திருந்தது. புலவருக்கு உண்டான வருத்தத்துக்கு எல்லையில்லை; "எவ்வளவு சிரமப்பட்டுத் தூக்கிவந்தேன்! வேறு பெட்டியை எடுத்து வந்திருக்கலாகாதா? ஜமீன்தார் நினைத்திருந்தால் அங்கேயே என்னைக் கொன்றிருக்கலாம்! அவர் எவ்வளவு அன்புடன் பேசினர்! தம்முடைய பொக்கிஷத்தை அவரே திறந்துகாட்டி "எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்" என்றாரே; சில முத்து மாலைகளையோ பொன் மாலைகளையோ எடுத்துவந்தேனில்லையே. சில பட்டாடைகளையாவது மூட்டை கட்டி எடுத்து வந்திருக்கலாகாதா! என்னுடைய துரதிர்ஷ்டம் இப்படியா வந்து முடியவேண்டும்?" என்று பெருமூச்சுவிட்டு வருத்தமுற்றார். அவர் மனைவியும் வருந்தினாள்.

அப்பால் சிறிதுநேரம் கழிந்தபின்னர், அவர் மனைவி, "இனி வருத்தப்படுவதில் என்ன பயன்? இந்த உப்பைக் கீரைக்கு வைத்துக்கொள்ளலாம்" என்று சொல்லி அதில் சிறிது கையிலெடுத்தாள். என்ன ஆச்சரியம்! அது வாண உப்பாக இருந்தது. "இது நல்ல உப்புக்கூட அன்றே! வாண உப்பாக இருக்கிறதே!" என்றாள். புலவருடைய மனம் எப்படியிருந்ததென்பதை வார்த்தைகளால் சொல்லமுடியுமோ? கொஞ்ச நாழிகை அவர் மௌனமாக இருந்தார். பின்பு அவருடைய உணர்ச்சி,

"நாடெலாஞ் செந்நெல் விளையினும் நாட்டின்
நதியெலாம் நவமணி தரினும்
காடெலாம் ஆடை காய்க்கினும் மேகம்
கனகமே பொழியினும், மடவாய்!
ஆடலே புரியும் அம்பல வாணர்
அவரவர்க் கமைத்ததே யல்லால்
வீடெலாம் கிடந்து புரண்டுருண் டழினும்
விதியலால் வேறுமொன் றுளதோ?"

என்ற செய்யுளாக வெளிப்பட்டது. விதியின் திறத்தையன்றி அவர் வேறு எதை நினைந்து ஆறுதலடைய முடியும்?

# அடிமை மனம்.

குழந்தைகளை அடிக்கக்கூடாது, திட்டக்கூடாது, உரிமையோடு வளர்க்கவேண்டும், அறிவும் ஊக்கமும் மிகுந்தவர்களாக வளர்க்கவேண்டும் என்றெல்லாம் பெற்றோர் பலரும் உணர்கின்றார்கள். ஆனால் தம்முடைய வெறுப்பையும் ஆத்திரத்தையும் அடக்கமுடியாமல் திட்டியும் அடித்தும் வளர்க்கின்றார்கள். இதுவே பழக்கமாகிவிடுகின்றது. பழக்கம் முதிர்ந்த பிறகும் சிலவேளைகளில் எண்ணிப் பார்க்கின்றார்கள்; தம் தவறை நினைந்து வருந்துகின்றார்கள். ஆனாலும் பழக்கம் பொல்லாதது. "வேறு வழி இல்லை நம்மால் இப்படித்தான் வளர்க்கமுடியும்" என்று ஆறுதல் அடைய முயல்கின்றார்கள்

குடிகாரர் வரலாறும் இப்படித்தான் வளர்கின்றது. தொடக்கத்தில் ஏதோ ஒரு காரணத்தால் குடிக்கத்தொடங்கிப் பின்பு படிப்படியாகப் பழக்கத்திற்கு அடிமையாகின்றார்கள்; குடியை விடமுடியாத நிலையை அடைகின்றார்கள். சளி பிடித்தது என்று இரண்டு மூன்று வேளை பொடி போடத் தொடங்கியவர்களே, மூக்குப்பொடி இல்லையானால் மூளை வேலைசெய்யாது என்னும் நிலையை அடைகின்றார்கள். தூண்டும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் இப்படியே பலர் அடிமையாகி விடுதலை இன்றி வருந்துகின்றார்கள். 'பழக்கம் பொல்லாதது' என்பதே இவர்கள் தம்மனச் சான்றினிடம் ஓயாமல் முறையிட்டுக் குறை கூறி ஆறுதல் பெறும் நெறியாகும்.

தனி வாழ்க்கையில் மட்டும் அல்லாமல் பொது வாழ்க்கையில் உள்ள தீமையையும் இவ்வாறே புறக்கணித்துவிடுவது மக்கள் இயல்பு. மஞ்சம்புல்லால் போர்த்த குடிசைகளே சில கிராமங்களில் தொடர்ந்து தெருத்தெருவாகக் காணப்படும். அந்தக் கிராமங்களில் தீப்பிடித்தால் நேரும் அழிவுபோல் வேறு எங்கும் ஏற்படுவதில்லை. ஒரு மஞ்சம்புற் குடிசையில்

தீப்பற்றினால், அதைக்கண்டு ஓடி அவிப்பதற்குள் அந்தத்தீ ஐந்தாறு குடிசைகளைக் கடந்து பரவிவிடும். அவ்வளவு விரைவில் தீப்பற்றி எளிதில் அழியக்கூடியது மஞ்சம்புல். அப்படிப்பட்ட கிராமங்கள் தீப்பற்றி எரியும் கொடுமை பொல்லாதது. ஒருமுறை இந்தக் கொடுமைக்கு ஆளானால், அந்தக் கிராம மக்கள் அத்தனைபேரும் "இனி மஞ்சம்புல்லை நாடவே கூடாது. அதைவிட எங்காவது மரத்தடியிற் பொங்கிச் சாப்பிடலாம். கடன்பட்டாவது ஓடு வேயவேண்டும். இல்லையானால் பேசாமல் வீடு இல்லாமல் நடுத்தெருவில் நிற்கலாம்" என்று ஓயாமல் பேசிக்கொள்வார்கள். மறுநாளே எல்லாரும் ஓலைபோடுவார்களோ என்றும் தோன்றும். ஆனால் சில வாரங்கள் கழிந்து, சில மாதங்களும் கழிந்தபின்பு பார்த்தால், எல்லாரும் பழையபடி மஞ்சம்புற்குடிசைகளையே அழகாகக் கட்டிக்கொண்டு அமைதியாகக் காலங் கழிப்பதைக் காணலாம். வேறு வகையாக வீடு கட்டிக்கொள்ளமுடியாத வறுமை ஒரு காரணமாக இருப்பது உண்மைதான். ஆனால் கர்ப்பூரம் போல் பற்றி எரியும் மஞ்சம்புல்வீட்டில் கவலையில்லாமல் அமைதியாக வாழும் மனப்பான்மை வருவதற்குக் காரணம் என்ன? பழக்கத்தின் வன்மையே காரணம்.

ஜப்பானில் அடிக்கடி பூகம்பம் ஏற்படுவதையும் எரிமலை அழிவு விளைவிப்பதையும் அறிந்திருந்தும், அழிவுகள் ஏற்பட்டு முடிந்தபின்பு மக்கள் அமைதியாக வாழ்க்கையை நடத்துவதும் இப்படித்தான். அந்த நேரத்தில் அல்லற் படும்போது புதுப்புது எண்ணங்களும் அளவுகடந்த வெறுப்பும் ஏற்பட்டாலும், அழிவுநேர்ந்து முடிந்து சில வாரங்கள் கழிந்ததும் எல்லாம் மறந்துபோகின்றன.; பழையபடியே வாழ முற்படுகின்றார்கள்.

பூகம்பமும் எரிமலையும் சில நாடுகளுக்கே உரியவை. ஆனால் நச்சுப் புகையும் அணுக்குண்டும் செய்யும் அழிவு வேலைகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை. அவைகளுள் அணுக்குண்டு அந்த ஜப்பான் நாட்டில் மட்டும் அழிவு வேலை செய்யவேண்டுமா? சென்ற போரில் ஹிரோஷிமா, நாகசகி என்ற பகுதிகள் அடியோடு பாழாகி உயிர்களை எல்லாம்

கொள்ளைகொண்டன. அவற்றுள் ஹிரோஷிமா என்ற பகுதியில் பொல்லாத அழிவுகள் ஏற்பட்டிருப்பதை உணர்ந்திருந்தும் மக்கள் குடியேறத் தொடங்கினர்கள்; இப்போது 50000 வீடுகள் இருக்கின்றனவாம். 25000 மக்கள் வாழ்கின்றார்களாம். அணுக்குண்டின் அழிவுகள் நடைபெற்றுச் சில ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் ஆண்டுநினைவை அங்கே கொண்டாடுகின்றார்கள். (இதை ஆண்டுவிழா என்று சொல்வதா? கொண்டாடுவது என்று சொல்வதுதான் பொருந்துமா? இறந்தவர்களை நினைந்து உருகுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதே இது.) இவ்வாறு நினைக்கும் அளவுக்கு நிற்கின்றதே அல்லாமல், அணுக்குண்டு வீசிச்செய்யும் போர்க்கொடுமையை எண்ணி அதற்குக் காரணமான அரசியல் முறைகளை எதிர்த்து உலகத்தைக் காக்கும்படியான சீர்திருத்த முயற்சி உண்டா? அதுதான் இல்லை. கூட்டங்கள் கூடுவது, தீர்மானங்களை நிறைவேற்றுவது, சில விநாடிகள் அமைதியாக எழுந்து நிற்பது, எல்லாம் சடங்குபோல் நடைபெறும். பழையபடியே போர்த் தினவுகொண்ட தலைவர்களின் செல்வாக்கும் ஓங்கும்; போர்க்குக்காரணமான வித்துக்களும் விளைந்துசெழிக்கும். இவற்றை அந்த ஜப்பான் நாட்டு மக்களோ, அல்லது 'வி-2' குண்டுக்கு இரையான இங்கிலாந்து நாட்டு மக்களோ, அல்லது எல்லாம் இழந்து அடிமைகளாய் இயங்கும் ஜெர்மனி நாட்டு மக்களோ எண்ணிப் பார்க்கின்றார்களா? இல்லை. நாள்தோறும் எப்படியோ வாழ்க்கையைக் கழித்துப் பழகிப் பழகி அவற்றை ஒருவாறு மறந்துபோகின்றார்கள். போர்ச் செயல்கள் எந்த வகையிலும் பூகம்பங்களைவிட, எரிமலைகளைவிடக் கொடுமை குறைந்தவையல்ல; ஆனல் பூகம்பங்களை எதிர்பார்த்து வாழ்வதுபோல, எரிமலைகளைப் பார்த்துக்கொண்டே வாழ்க்கையை நடத்துவதுபோல, போர்ப்படைகளைப் பெருக்குவதையும் அடக்குமுறைகளைப் பெருக்குவதையும் பார்த்துக்கொண்டே மக்கள் வாழ்ந்து வாழ்ந்து பழகுகின்றார்கள். பழக்கம் பொல்லாதது, ஆகையால், "உலகம் இப்படித்தான்" என்ற பழம்பாட்டைப் பாடவும் கற்றுக்கொள்கின்றார்கள்.

ஒரு கதை சொல்லப்படுகின்றது. பெரிய செல்வனாக வேண்டும், இரும்பை எல்லாம் பொன் ஆக்கவேண்டும் என்று

ஆசைகொண்ட ஒருவனுக்கு ஒரு பெரியார் வழி கூறினாராம். கையில் ஓர் இரும்புத் துண்டைக்கொடுத்து, "இதைக் கையில் வைத்துக்கொண்டு இந்த ஆற்றங்கரையில் தேடிப்பார். இங்கே ஒரு மந்திரக்கல் இருக்கின்றது. அந்தக்கல் பட்ட வுடனே இந்த இரும்பு பொன்னாகிவிடும். அதைத் தேடி எடுத்துக்கொண்டால் உன் கவலை தீரும்" என்று சொன்னாராம். உடனே அவன் ஆற்றங்கரையில் உள்ள ஒவ்வொரு கல்லையும் எடுத்தெடுத்துப் பார்த்து இரும்பைப் பொன்னாக்கும் சிறந்த கல் கிடைக்காத காரணத்தால் அந்த ஒவ்வொரு கல்லையும் ஆற்றில் வீசி வீசி எறிந்துகொண்டிருந்தான். ஆயிரக்கணக்கான கற்களை எறிந்து எறிந்து கையும் நோகும் நிலை வந்தது. அப்போது வழக்கம்போல் ஒரு கல்லை எடுத்து இரும்புத்துண்டின்மேல் வைத்து ஆற்றில் வீசி எறிந்தான். உடனே அந்த இரும்பு பொன்னாகிவிட்டது. ஆனால் அதைப் பொன்னாக்கிய அந்தக்கல் எங்கே? அது ஆற்றில் எத்தனையோ கற்களுக்கிடையே விழுந்துவிட்டது. எல்லாக் கற்களையும் வீசி வீசி எறிந்து பழக்கப்பட்ட கை அதையும் உடனே அப்படியே எறிந்தது; அதனால் ஏழையின் கவலை முன்னைவிட மிகுதியாயிற்று. பழக்கம் பொல்லாதது என்பதை அவனுடைய கை மெய்ப்படுத்திவிட்டது.

பல ஆண்டுகள் தொடர்ந்து ஒரு தனித் தீவில் தனியே சிறையில் கிடந்தார் புரட்சிப் பேரறிஞர் ஒருவர். அவர் விதைத்த புரட்சி விளைந்து பயன் தரும் காலம் வந்தது; சிறையின் கதவுகள் திறக்கப்பட்டன. பேரறிஞரின் கண்ணும் கால்களுஞ் சிறையிலேயே ஆண்டுக் கணக்காய் பழகிவிட்டவை. வெளியுலகத்தை எட்டிப்பார்த்தார். கண்கள் மீண்டும் சிறைக்குள் நோக்கின. வெளியே வருமாறு நடத்திச் செல்ல முயன்றார்கள், அவரை விடுதலை செய்ய வந்தவர்கள்; ஆனால் அவருடைய கால்கள் சிறை எல்லையை விட்டு வெளிவரப் பின்வாங்கி மீண்டும் சிறைக்குள்ளேயே நடந்தன. அறிவு தெளிந்த பிறகுதான் அவரை வெளியே கொண்டுவர முடிந்தது. பழக்கம் பொல்லாதது என்பதைச் சிறை வாழ்க்கையும் காட்டியது.

நெடுங்காலமாக இந்த நாடு அடிமைப்பட்டுக்கிடந்தது.

அடிமை நாடாக இருந்த காலத்தில் நம் எண்ணத்திலும் செயலிலும் பல தீமைகள் குடிபுகுந்திருந்தன; அவை வாழ்வில் பழக்கப்பட்டு வேரூன்றியிருந்தன. விடுதலை எய்தி உரிமை பெற்று வாழும்போது அவை அணுகாமல் வாழ்வதே கடமை யாகும். உரிமை உணர்வு மிக்க புலவர்களும் தொண்டர்களும் அவ்வாறு விழிப்போடு வாழ வல்லவர்கள்.

பெறுவதற்கு அரிய உரிமையைப் பெற்ற பின்பும் அடிமை மனப்பான்மையை உதற முடியாமல் வருந்துவது, சிறை வாழ்வு முடிந்த பின்பும் சிறையை நோக்கி நடப்பதைப் போன்றது. பெற்ற உரிமையைப் போற்றாமல் புறக்கணிப்பது பொன்னாக்கும் மந்திரக்கல்லைப் பெற்றபின்பு ஆற்றில் எறியும் கொடுமைக்கு நிகரானது. உணர்வுலகத்தில் உரிமையோடு வாழும் புலவர்கள் பொது மக்களுக்கு விடாமல் உணர்த்தி வருவது இதுவே ஆகும். பாரதியார் அந்தக் கடமையை முன்னமே உணர்ந்து உணர்த்தியிருக்கின்றார். உரிமை பெற்ற பிறகும் ஏய்ப்போருக்கு ஏவல் செய்தல், ஏற்போரைப் பணிதல், உழவையும் தொழிலையும் நிந்தனைசெய்தல், வீணில் உண்டு களித்திருப்போர்க்கு வந்தனைசெய்தல் முதலிய அடிமை வாழ்க்கைப் பழக்கங்கள் தொலையவேண்டும் என்றே வற்புறுத்திப் பாடியிருக்கின்றார். இவை உண்மையாகவே தொலைந்தாற்றான் அடிமை வாழ்க்கைப் பழக்கங்கள் அறவே அகன்றன என்று நம்பமுடியும். இல்லையானால், சுதந்திரப் பள்ளுவைப் பாடுவது வெறும் வாயளவில் நிற்பதாக முடியும்; அதனால் வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியாமற் போகும். குண்டுகளை உண்டாக்கும் தொழிற்சாலைகளைக் கண்ணால் பார்த்துக் கொண்டே அமைதியாக வாழ்வதைப்போல் வாழும் வாழ்விற் பயனில்லை. அடக்குமுறையும் கொடுங்கோன்மையும் அழிவு வேலைகளும் சூழ்ந்துள்ள சூழலில் விழாக்கொண்டாடிய நாடுகள் என்ன என்ன அல்லலுக்கு இரையாயின என்பதை உலக வரலாறு எடுத்துரைக்கின்றது. ஆகையால், நாம் அப்படிப்பட்ட பொருளற்ற விழாக் கொண்டாடாமல், உரிமையைத் தெளிந்து உணர்த்திய புலவர்காட்டிய வழியில்நின்று எண்ணி உணர்ந்து உள்ளத்தைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

அடிமை மனம் நீங்குவதற்கு அறிகுறி இப்படி உள்ளம் உணர்ந்து திருந்துதலே ஆகும்.

# கரையில் ஆபத்து.

## I

கரையிலிருந்து வந்த இறுதிச் செய்திக்குக் காந்திஜி மற்றப் பிரயாணிகளையும் கலந்துகொண்டு பதில் அனுப்பினர். “திரும்பிப் போக முடியாது, நேட்டால் துறைமுகத்தில் இறங்குவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. என்ன நேர்ந்தாலும் சரி, அந்த உரிமையை நிலைநாட்ட உறுதி கொண்டிருக்கிறோம்” என்பதுதான் பதில்.

இனியும் கப்பல்களைக் கடலிலேயே நிறுத்திவைக்க முடியாது என்று அதிகாரிகள் கண்டார்கள். சொல்லக்கூடிய காரணம் ஒன்றும் இல்லை எனவே ஹார்பருக்குள் கப்பல்கள் வருவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இரண்டு கப்பல்களும் கரையோரமாகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன. இத்தனை நாளும் காத்திருந்த பிரயாணிகள் இப்போது பரபரப்புடன் இறங்கினர்கள். நேட்டால் அரசாங்க அட்டர்னியும் ஏற்கனவே காந்திஜிக்குத் தெரிந்தவருமான மிஸ்டர் எஸ்கோம்ப் இச்சமயத்தில் காந்திஜிக்கு ஒரு செய்தி அனுப்பினர். “இங்குள்ள ஐரோப்பியர்கள் உங்கள் பேரில் தனிப்பட மிகவும் கோபம் கொண்டிருக்கிறார்கள். இது உங்களுக்குத் தெரிந்ததே. ஆகையால் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் பகலில் கப்பலிலிருந்து இறங்கவேண்டாம். நன்றாக இருட்டிய பிறகு இறங்குங்கள். துறைமுகத்தின் தலைமை அதிகாரி மிஸ்டர் டாட்டம் உங்களைப் பத்திரமாக அழைத்துப்போய் வீட்டில் விட்டுவிடுவார்”—இந்தச் செய்தியைக் கப்பற்றலைவர் காந்தி மகானிடம் தெரிவித்தார். காந்திஜியும் அதன்படி செய்ய உத்தேசித்தார். ஆனால் அரைமணி நேரத்துக்கெல்லாம் டர்பன் இந்தியர்களின் வக்கீலான மிஸ்டர் லாப்டன் என்பவர் கப்பலுக்கு வந்து சேர்ந்தார். அவர் காந்திஜியிடம் சொன்னதாவது:—

"நீங்கள் இருட்டியபிற்பாடு நகரில்பிரவேசிக்கும் யோசனை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. எதற்காக அப்படிப் பயப்படவேண்டும்? உங்கள் மனைவியையும் குழந்தைகளையும் முதலில் வண்டியில் ஏற்றி றஸ்டம்ஜியின் வீட்டுக்கு அனுப்பி விடுவோம். நாம் இருவரும் நடந்து போவோம். யாரும் உங்களுக்குத் தீங்கு செய்வார்கள் என்று நான் கருதவில்லை. நகரம் இப்போது அமைதியாய் இருக்கிறது. கிளர்ச்சி அடங்கிவிட்டது. அப்படி ஏதாவது அபாயம் வருவதாயிருந்தாலும் அதற்குப் பயப்பட்டுக்கொண்டு திருடனைப்போல் இருட்டில்போவதா? கூடவே கூடாது. உங்கள் விருப்பம் என்ன?" இவ்விதம் மிஸ்டர் லாப்டன் கூறியது காந்திஜிக்கு நியாயமாகத் தோன்றியது. அவருடைய யோசனைப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டார். காந்திஜியின் மனைவியும் குழந்தைகளும் முன்னதாக வண்டியில் ஏறி றஸ்டம்ஜியின் வீட்டுக்குப் பத்திரமாகப் போய்ச்சேர்ந்தார்கள்.

கப்பற்றலைவரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு காந்திஜி மிஸ்டர் லாப்டனுடன் கப்பலிலிருந்து இறங்கினார். துறைமுகத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலிருந்த றஸ்டம்ஜியின் வீட்டுக்கு இருவரும் நடந்துசெல்லத் தொடங்கினார்கள்.

கப்பலில் இருந்து இறங்கிச் சிறிது தூரம் செல்வதற்குள்ளே வெள்ளைக்காரச் சிறுவர்கள் சிலர் அவரைப் பார்த்து இன்னார் என்று தெரிந்துகொண்டார்கள். உடனே அவர்கள் "காந்தி! காந்தி!" என்று கூச்சல்போட்டார்கள். அதைக் கேட்டு ஐந்தாறு பெரிய ஆட்கள் வந்து அந்தப் பிள்ளைகளுடனே சேர்ந்து கூச்சல் போட்டார்கள். அந்தக்கூச்சலைக்கேட்டுவிட்டு நாலாபுறத்திலிருந்தும் சிறுவர்களும் பெரியவர்களும் ஓடிவரத் தொடங்கினார்கள்.

இதைப்பார்த்ததும் மிஸ்டர் லாப்டனுக்குப் பயமாய்ப் போய்விட்டது. கூட்டம் பெரிதாகிவிட்டால் தொந்தரவாய்ப் போய்விடலாம் என்றும், காந்திஜி மேலே நடந்துசெல்ல முடியாமற் போய்விடலாம் என்றும் எண்ணினார். ஆகையால் பக்கத்தில் நின்ற ஒரு ரிக்ஷாவைக் கூவி அழைத்தார். மனிதன்

இழுக்கும் வண்டியாகிய ரிக்ஷாவில் காந்திஜி ஏறுவதே கிடையாது. அச்சமயம் மிஸ்டர் லாப்டனுடைய வற்புறுத்தலுக்காக ஏற உத்தேசித்தார். ஆனால் அந்த உத்தேசம் பயனளிக்கவில்லை. கூட்டத்தினர் சிலர் ரிக்ஷா வண்டியைச் சுற்றி நின்றுகொண்டு ரிக்ஷாக்காரனைப் பயமுறுத்தினார்கள். அங்கிருந்து அவன் ஓடியே போய்விட்டான்.

காந்திஜியும் மிஸ்டர் லாப்டனும் மேலே நடந்தார்கள். போகப் போகக் கூட்டம் பெருகியது. கூச்சலும் அதிகமாயிற்று. மேலே ஓர் அடி வைக்கவும் முடியாத நிலைமை ஏற்பட்டது. அப்போது கூட்டத்தில் சிலர் மிஸ்டர் லாப்டனைப் பிடித்து இழுத்து அப்புறம் கொண்டு போனார்கள். மற்றவர்கள் தன்னந் தனியாக நின்ற காந்திஜியைச் சூழ்ந்துகொண்டார்கள். அந்த ஏழை பங்காளன்மீது கல்லை விட்டெறிந்தார்கள். ஒரு முரடன் அவருடைய தலைப்பாகையைப் பிடுங்கிக்கொண்டான். பின்பு ஜனங்கள் அம்மகானைக் கையாலே அடிக்கவும் குத்தவும் தொடங்கினார்கள். காந்திஜியின் உடல் தளர்ந்தது, தலை சுற்றத் தொடங்கியது. ஆயினும் மன உறுதி மட்டும் குன்றவில்லை. கீழே விழுந்துவிடாதிருக்கும் பொருட்டுப் பக்கத்தில் இருந்த வீட்டின் முன்புற வேலிக்கம்பிகளைப் பிடித்துக்கொண்டார். அவரைச் சூழ்ந்திருந்த கூட்டம் மேலும் அதிகமாகி நாலாபுறத்திலும் அவரை நெருக்கியது. அவருக்கு மூச்சுவிடவும் முடியாத நிலைமை ஏற்பட்டது.

அச்சமயத்தில் கடவுள் அருளால் டர்பன் போலிஸ் சூப்ரின்டெண்டு மிஸ்டர் அலெக்சாண்டரின் மனைவி அந்த வழியாகச் சென்றார். அவருக்கு ஏற்கனவே காந்திஜியைத் தெரியும். கூட்டத்தையும் கூக்குரலையும் பார்த்ததும் என்ன விஷயம் என்று விசாரித்தார். கூட்டத்தின் நடுவில் காந்திஜி அகப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்று தெரிந்ததும், தீரமுள்ள அந்தப் பெண்மணி கூட்டத்திற்குள் துணிந்து புகுந்தார். ஜனங்களை விலக்கிக்கொண்டு காந்திஜியின் அருகில் வந்து சேர்ந்தார். அப்போது வெய்யில் இல்லாவிட்டாலும் தம்முடைய கையிலிருந்த குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு காந்திஜிக்கும் ஜனக்கூட்டத்துக்கும் மத்தியில் நின்றார். இதனால் ஜனங்

கள் காந்திஜியை நெருங்கவோ அடிக்கவோ முடியாமற் போயிற்று. ஸ்ரீமதி அலெக்சாண்டர்மீது அடிபடாமல் காந்திஜியை அடிக்க முடியவில்லை.

இதற்குள்ளே அங்கு நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இந்திய இளைஞன் ஒருவன் போலிஸ் ஸ்டேசனுக்கு ஓடினன். அங்கே போலிஸ் சூப்ரின்டெண்டு மிஸ்டர் அலெக்சாண்டர் இருந்தார். அவரிடம் தகவலைச் சொன்னன். மிஸ்டர் அலெக்சாண்டர் உடனே சில போலிஸ் ஜவான்களை அனுப்பி, காந்திஜியை அவருடைய வீட்டில் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு வரும்படி அவர்களுக்கு உத்தரவிட்டார். போலிஸ் ஜவான்கள் அவ்விதமே சென்று காந்திஜியைச் சுற்றி வளையம்போல் நின்றுகொண்டு றஸ்டம்ஜியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் போகும் வழியிலே போலிஸ் ஸ்டேசன் இருந்தது. ஸ்டேசன் வாசலில் மிஸ்டர் அலெக்சாண்டர் காந்தியைச் சந்தித்து "நீங்கள் இன்றைக்கு இங்கேயே இருந்துவிடுவது நலம். போலிஸ் ஸ்டேசனிலேயே இருந்துவிட்டால் உங்களைப் பாதுகாப்பதற்கு நான் இருக்கிறேன்" என்றார். காந்திஜி அவருக்கு நன்றி செலுத்தினர். ஆயினும் உயிருக்குப் பயந்து கொண்டு போலிஸ் ஸ்டேசனில் தஞ்சம் புகுவதற்குக் காந்திஜி விரும்பவில்லை.

"இனிமேல் அபாயம் ஒன்றும் இராது. ஜனங்கள் சீக்கிரத்தில் சாந்தமடைந்துவிடுவார்கள். அவர்களுடைய குற்றம் அவர்களுக்கே புலப்பட்டுவிடும்" என்றார்.

பின்பு போலிஸ் துணையுடன் வழியில் வேறு அபாயம் எதுவுமின்றி றஸ்டம்ஜியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

காந்திஜியின் உடம்பெல்லாம் அடிபட்டதினுல் தழும்பேறியிருந்தது. ஓரிடத்தில் பலமான காயம் ஏற்பட்டிருந்தது. காயத்துக்குச் சிகிச்சை செய்தார்கள். அடிபட்ட தழும்புகளுக்கு ஒத்தடம் கொடுத்தார்கள். நல்லவேளையாக இந்தமட்டோடே போயிற்றே என்று வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் ஆறுதல் அடைந்தார்கள்.

ஆனுல் அந்த மட்டோடு போய்விடவில்லை! வீட்டைச் சுற்றி வெள்ளைக்காரர்களின் கூட்டம் சேர்ந்துகொண்டது. சீக்கிரத்தில் கூட்டம் பெரிதாகிவிட்டது. "காந்தியை வெளியே அனுப்பு" என்ற ஒரு குரல் எழுந்தது. ஒரு குரல் பத்துக் குரலாயிற்று. பத்துக்குரல் நூறு குரலாயிற்று. "காந்தியை வெளியேஅனுப்பு" என்ற கோஷம் வானை அளாவியது. அந்தக் கோஷம் வீட்டுக்குள்ளே இருந்தவர்களின் காதிலும் விழுந்தது. தூரத்தில் போலிஸ் ஸ்டேசனில் இருந்த அலெக்சாண்டர் காதுக்கும் எட்டியது.

மிகத் திறமைசாலியான அலெக்சாண்டர் ஓடோடியும் வந்தார். ஜனக்கூட்டத்தை அச்சமயம் பயமுறுத்துவதில் பயனில்லையென்று கண்டார். அவர்களுடன் தமாஷாகப் பேசிக் குஷிப்படுத்தத் தொடங்கினுர். இதன்மூலமாக அவர்கள் அத்துமீறி வீட்டுக்குள் புகாமலும் வேறு தீய செயல்களில் இறங்காமலும் பார்த்துக்கொண்டார்.

ஆனுல் இம்மாதிரி எத்தனைநேரம் சமாளிக்க முடியும்? ஜனங்கள் கலைந்து போகிற வழியாகக் காணவில்லை.

மிஸ்டர் அலெக்சாண்டர் யோசனைசெய்து ஒரு முடிவுக்கு வந்தார். வீட்டின் பின்புற வழியாக ஒரு ஆளை அனுப்பிக் காந்திஜியிடம் ஒரு செய்தி சொல்லும்படி செய்தார். அந்தச் செய்தி இதுதான்: "உங்கள் நண்பரின் வீட்டையும் வீட்டிலுள்ள உடைமைகளையும் உங்கள் குடும்பத்தாரையும் நண்பரின் குடும்பத்தாரையும் காப்பாற்ற விரும்புகிறீர்களா? அப்படியானுல் நீங்கள் உடனே மாறுவேடம் பூண்டு இந்த வீட்டை விட்டுத் தப்பிச் செல்வது அவசியம். இதைத் தவிர இந்தச் சமயத்தில் வேறு வழியில்லை".

இந்தச் செய்தியைக் கேட்டதும் காந்திஜியின் மனதில் 'வெளியே போவதா இல்லையா' என்பதுபற்றி ஒரு போராட்டம் எழுந்தது. கடைசியில் அலெக்சாண்டரின் யோசனைப்படி நடக்க முடிவு செய்தார். அதைக்குறித்துக் காந்திஜி தம் சுய சரிதத்தில் எழுதியிருப்பதாவது:-

"உயிருக்கு அபாயம் நேரிடலாமென்பது வெறும் உத்தேசமாக மட்டும் இருந்தபோது மிஸ்டர் லாப்டன் என்னைப் பகிரங்கமாக வெளிக் கிளம்பும்படி சொன்னார். அவருடைய யோசனையை நான் ஒப்புக்கொண்டு நடந்தேன். அபாயம் நிச்சயம் என்னும் நிலைமை ஏற்பட்ட போது மற்றொரு நண்பர் நேர்மாறான யோசனையைக் கூறினார். அதையும் நான் ஏற்று நடந்தேன். என் உயிருக்கு அபாயம் வரலாம் என்பதை முன்னிட்டே அப்படிச் செய்தேனோ? அல்லது என் நண்பரின் சொத்தையும் சொந்தக்காரர்களையும் காப்பாற்றுவதன் பொருட்டுச் செய்தேனோ, அல்லது என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அபாயம் நேரிடாதிருக்கும் பொருட்டுச் செய்தேனோ, என்று யார் கூறமுடியும்? முதலிலே ஜனக் கூட்டத்தை நான் "தைரியமாக" எதிர்த்ததும், பின்னர் மாறு வேடம் பூண்டு அக்கூட்டத்தினின்று தப்பியோடியதும், இரண்டும் சரியானவை என்று யார் நிச்சயமாகச் சொல்ல முடியும்?"

காந்திஜி தப்பித்துச் செல்வது என்று முடிவு செய்ததும் அது சம்பந்தமான ஏற்பாடுகளில் கவனம் செலுத்தினார். உடம்பின் காயம், வலி எல்லாம் அந்தப் பிரயத்தனத்தில் மறந்து போய்விட்டன. இந்தியப் போலிஸ் சேவகனைப்போல் உடை தரித்துக்கொண்டார். நமது சென்னை மாகாணத்தில் வழங்கும் அங்க வஸ்திரம் ஒன்றை ஒரு தட்டின்மீது சுற்றி அதைத் தலைக்குக் கவசமாக அணிந்துகொண்டார். (மதராஸ் அங்க வஸ்திரத்தின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! அது மகாத்மா காந்தியின் தலையின்மேல் அவருக்குப் பாதுகாப்பாக விளங்கியதல்லவா?) அலெக்சாண்டரின் திட்டப்படி இரகசியப் போலிசைச் சேர்ந்த இருவர் காந்திஜியை வெளியில் பத்திரமாக அழைத்துப் போவதற்காக வீட்டுக்குள் வந்தார்கள். அவர்கள் முகத்திற்கு வர்ணம் பூசிக்கொண்டு இந்திய வியாபாரிகளைப்போல் வேஷம் தரித்திருந்தார்கள்.

வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த குறுக்குச் சந்தியில் வெளியேறி ஒரு சாமான் கிடங்கில் புகுந்து சாக்கு மூட்டைகளின் வழியாக இருட்டில் தட்டுத் தடுமாறிக் கடைசியில் வீதிக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிடங்கின் வாசலிலேயும் ஜனக்

கூட்டம் நிறைந்திருந்தது. ஆனால் கிடங்கில் இருந்து வெளி வந்தவர்களில் காந்திஜி இருப்பார் என்று யாரும் எதிர்பார்க்க வில்லை. அனைவருடைய கவனமும் றஸ்டம்ஜியின் வீட்டு வாச லிலேயே இருந்தது. அங்கே மிஸ்டர் அலெக்சாண்டர் உயர மான படிக்கட்டில் நின்றுகொண்டு ஜனக்கூட்டத்தோடு தமா ஷாகப் பேசிக்கொண்டிருந்தார். சமய சந்தர்ப்பத்திற்கேற்ப அவர் ஒரு பாடல் இயற்றி அதைப் பாடியும் காட்டினார்.

"புளிப்பு இலந்தை மரத்தின் மீது
போல்லாத காந்தியைத் தூக்குப் போடு".

என்பது அந்தப்பாட்டின் பல்லவி. இதை மிஸ்டர் அலெக் சாண்டர் முறை வைத்துப்பாட, ஜனக்கூட்டமும் அவருடன் சேர்ந்து உற்சாகமாகப் பாடியது.

ஜனங்கள் கவனத்தை இவ்விதம் மிஸ்டர் அலெக்சாண்டர் கவர்ந்திருக்கையில், காந்திஜியும் இரகசியப் போலிஸ்துணை வர்களும் அக் கூட்டத்தின் வழியாகப் புகுந்து சென்று தெருக் கோடியில் தயாராய் நின்ற வண்டியில் ஏறிப் போலிஸ் ஃடேச னுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

காந்திஜி பத்திரமாய்ப் போலிஸ் ஸ்டேசனை அடைந்தார் என்ற செய்தி வந்ததும் மிஸ்டர் அலெக்சாண்டரின் குரல் மாறியது. "நல்லது, பறவை கூட்டிலிருந்து தப்பியோடிவிட் டது! நீங்கள் யாருக்காக இங்கே வந்து காத்திருக்கிறீர்களோ அவர் இந்த வீட்டில் இல்லை. இனிமேல் உங்களுடைய வீட்டுக் குத் திரும்பிப் போகலாம்" என்று அங்கே கூடியிருந்தவர்க ளைப் பார்த்து உரத்த குரலில் கூறினார். கூட்டத்தில் சிலர் அவர்மேல் கோபங் கொண்டார்கள். சிலர் அவருடைய வார்த் தையை நம்பாமல் சிரித்தார்கள்.

"நல்லது உங்களுக்கு என் பேச்சில் நம்பிக்கையில்லாவிட் டால் உங்களுடைய பிரதிநிதிகளாக இரண்டுபேரை நியமனம் செய்யுங்கள். அவர்களை நானே வீட்டுக்குள் அழைத்துப் போகிறேன். காந்தியை அவர்கள் கண்டுபிடித்துவிட்டால் உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். காந்தி இந்த வீட்டில் இல்லையென்று நிச்சயமானால் நீங்கள் எல்லோரும் திரும்பிப்

போய்விடவேண்டும். றஸ்டம்ஜியின் வீட்டுக்கோ காந்திஜியின் குடும்பத்தாருக்கோ நீங்கள் தீங்குசெய்ய விரும்பவில்லையல் லவா? அவர்கள்மீது நீங்கள் கோபங் கொள்ளக் காரணம் ஒன்றும் இல்லையே" என்று சொன்னார் மிஸ்டர் அலெக்சாண்டர்.

ஜனங்கள் அலெக்சாண்டர் கூறிய யோசனைக்கு இணங்கி னர். றஸ்டம்ஜியின் வீட்டைச் சோதனை போடப் பிரதிநிதி கள் பொறுக்கப்பட்டார்கள். மிஸ்டர் அலெக்சாண்டர் அவர் களை அழைத்துக்கொண்டு போனார். வீட்டின் மூலை முடுக் கெல்லாம் அவர்கள் சோதனைபோட்டுவிட்டு வந்து "காந்தி இல்லை!" என்று தெரிவித்தார்கள். கூட்டத்தில் பெரும்பா லோர் மிஸ்டர் அலெக்சாண்டரின் சாமர்த்தியத்தைப் பாராட் டிப் பேசிக்கொண்டு வீடு திரும்பினார்கள். ஒரு சிலர் கோபத் தினால் குமுறிக் கொண்டு திரும்பிச் சென்றார்கள்.

உலகத்தையும் மானிடரின் வாழ்க்கையையும் இயக்கி வரும் சக்தி ஒன்று இருப்பதாகப் பெரியோர் கூறுகிறார்கள். அதைத் தெய்வ சித்தம் என்றும், கடவுளின் கருணை என்றும் பெயர் கொடுத்து அழைக்கிறார்கள். அத்தகைய தெய்வசித் தத்தின் நியதியினாலேயே முதலில் மிஸ்ஸிஸ் அலெக் சாண்டரும் பின்னர் மிஸ்டர் அலெக்சாண்டரும் காந்திஜியைக் காப்பாற்றும் விஷயத்தில் அவ்வளவு சிரத்தை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் "நமக்கென்ன வந்தது" என்று அலட் சியமாக விட்டிருந்தால்—அன்றைய தினம் காந்தியின் உயி ருக்கு அபாயம் நேர்ந்திருந்தால்,—ஆகா! இந்த மாநிலமும் மன் னுயிரும் இந்தியாவும் இந்தியர்களும் எவ்வளவு மகத்தான நஷ்டத்தை அடைந்திருப்பார்கள்!

## II

சமீபத்தில் நடந்த மகா யுத்தத்தின் ஆரம்பத்தில் மிஸ் டர் நெவில்லி சேம்பர்லின் என்பவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி யாக இருந்தாரல்லவா. இவருடைய தந்தை மிஸ்டர் ஜோஸப் சேம்பர்லின் என்பவர் அப்போது பிரிட்டிஷ் மந்திரிசபையில் குடியேற்ற நாட்டு மந்திரியாகப் பதவி வகித்தார். டர்பனில்

காந்திஜி இறங்கிய அன்று நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்டதும் அவர், "காந்தியைத் தாக்கியவர்களைக் கைது செய்து அவர்கள்மீது வழக்கு நடத்தவும்" என்று நேட்டால் சர்க்காருக்குத் தந்தி அடித்தார்.

உடனே நேட்டால் சர்க்காரின் அட்டர்னி ஜெனரலான மிஸ்டர் எஸ்கோம்ப் காந்தியை அழைத்து, முதலில் காந்திஜிக்கு நேர்ந்த கஷ்டங்களுக்காகத் தமது வருத்தத்தையும் அநுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டார். பின்பு அவர் கூறியதாவது "கப்பலில் இருந்து இரவு நேரத்தில் இறங்கும்படி நான் சொல்லி அனுப்பினேன். அதைக் கேட்டு நடந்திருந்தால் இந்தக் கஷ்டங்கள் நேர்ந்திரா. ஆனால் மிஸ்டர் லாப்டனுடைய யோசனைப்படி நடந்து அதனால் நேரும் கஷ்டங்களை அநுபவிக்க உறுதிகொண்டிருந்ததை நான் பாராட்டுகிறேன். அம்மாதிரி நடந்துகொள்ள உங்களுக்கு உரிமை உண்டு என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். இப்போது உங்கள் விருப்பம் என்ன? உங்களைத் தாக்கியவர்களை அடையாளம் சொல்ல முடியுமானால் அவர்களைக் கைதுசெய்து வழக்கு நடத்தத் தயாராயிருக்கிறேன். வழக்கு நடத்தவேண்டுமென்று மிஸ்டர் சேம்பர்லினிடமிருந்து தந்தி வந்திருக்கிறது".

இதற்குக் காந்திஜி பின்வருமாறு பதில் அளித்தார்:- "யார் மீதும் வழக்கு நடத்த எனக்கு விருப்பம் இல்லை. இரண்டொரு மனிதர்களை நான் அடையாளங் கண்டு பிடித்துச் சொல்லமுடியும். ஆனால் பயன் என்ன? அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதில் எனக்குத் திருப்தி கிடையாது. என்னைத் தாக்கியவர்கள்மீது எனக்குக் கோபம் இல்லை; அவர்கள்மீது நான் குற்றம் சொல்லவும் மாட்டேன். குற்றம் உங்களைப் போன்ற சமூகத் தலைவர்களுடையது. நீங்கள் ஜனங்களுக்குச் சரியான வழிகாட்டியிருக்க வேண்டும். அப்படிச் செய்ய நீங்கள் தவறிவிட்டீர்கள். யாருக்கும் தண்டனை வாங்கிக் கொடுக்க நான் விரும்பவில்லை. இந்தியாவில் நான் இருந்த போது நேட்டால் வெள்ளைக்காரர்கள்மீது ஏதோ அவதூறுப் பிரசாரம் செய்ததாக நம்பி அவர்கள் இம்மாதிரி நடந்துகொண்

டிருக்கிறார்கள். உண்மையை உணரும்போது அவர்களே தங்களுடைய செயலுக்காக வருந்துவார்கள்."

இதைக் கேட்டதும் மிஸ்டர் எஸ்கோம்புக்கு ஒரே வியப்பாய்ப் போய்விட்டது. காந்திஜியிடம் அவருக்கு ஏற்கனவே இருந்த மதிப்பு இன்னும் உயர்ந்தது.

"இப்போது நீங்கள் சொன்னதை எழுத்துமூலமாக எழுதித் தருவீர்களா? ஏனெனில் தங்களுடைய விருப்பம் இது வென்று மிஸ்டர் சேம்பர்லினுக்கு நான் அறிவித்து விடவேண்டும். ஆனால் அவசரப்பட்டு நீங்கள் எழுதிக்கொடுக்க வேண்டா. திரும்பிச் சென்று மிஸ்டர் லாப்டனையும் இன்னும் உங்களுடைய நண்பர்களையும் கலந்துகொண்டு முடிவுசெய்யலாம். முடிவு செய்த பின்பு எனக்கு எழுதித் தெரிவித்தாற் போதும். ஆனால் ஒரு விஷயம் நிச்சயமாகச் சொல்வேன். இப்போது நீங்கள் சொன்னதுபோல் உங்களைத் தாக்கியவர்கள்மீது வழக்குத் தொடராமல் விட்டீர்களானால், நேட்டாலில் அமைதியை நிலைநாட்டுவதற்குப் பெரிதும் உதவியாயிருக்கும்!" என்று மிஸ்டர் எஸ்கோம்ப் சொன்னார்.

"வந்தனம்! ஆனால் இது விஷயமாக நான் யாரையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லை. தங்களிடம் வருவதற்கு முன்பே இதைப்பற்றி நன்றாக ஆலோசித்து முடிவுசெய்துவிட்டேன். இந்த நிமிஷமே தாங்கள் கேட்டபடி எழுதிக் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்" என்றார் காந்திஜி.

ஆம்; காந்திஜி கப்பலைவிட்டு இறங்குவதற்கு முன்பே கப்பல் உத்தியோகஸ்தர்களுடன் சம்பாஷிக்கும்போது "எனக்கு வெள்ளைக்காரர்கள்மீது தனிப்படக் கோபம் கிடையாது. அவர்கள் தீங்கு செய்தாலும் நான் அவர்களுக்குத் திருப்பித் தீங்கு செய்ய முயலமாட்டேன்" என்று சொல்லியிருந்தார் அல்லவா!

அந்த வார்த்தையை இப்போது நிறைவேற்றினார். மிஸ்டர் எஸ்கோம்ப் கேட்டபடி "வழக்குத் தொடர வேண்டியதில்லை" என்று எழுதிக் கொடுத்தார்.

காந்திஜி போலிஸ் ஸ்டேசனைவிட்டு வீட்டுக்குச் சென்ற போது மிஸ்டர் அலெக்சாண்டர் இரண்டு போலிஸ் சேவகர்களை அவருடைய பாதுகாப்புக்காக அனுப்பிவைத்தார். ஆனால் வெகு சீக்கிரத்திலேயே போலிஸ் பாதுகாப்புத் தேவையில்லாத நிலைமை ஏற்பட்டுவிட்டது.

'நேட்டால் அட்வர்டைஸர்' என்னும் பத்திரிகையின் பிரதிநிதி காந்திஜியைப் பார்க்க வந்தார். இந்தியாவில் காந்திஜி செய்த காரியங்களைப்பற்றியும் பேசிய பேச்சுக்களைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டார். ஸர் பிரோஸிஷா மேத்தாவின் யோசனைப்படி காந்திஜி இந்தியாவில் எல்லா இடங்களிலும் தம் பிரசங்கங்களை எழுதிப் படித்திருந்தார். அவ்விதம் செய்தது இப்போது மிகவும் உபயோகமாய் இருந்தது. தமது பேச்சின் நகல்களைக் காந்திஜி மேற்படி பத்திரிகைப் பிரதிநிதியிடம் கொடுத்து, "இந்தியாவில் என் பேச்சுக்களில் எதைப்பற்றியாவது மிகைப்படுத்திச் சொல்லியிருக்கிறேனா?—தென்னாபிரிக்காவில் பகிரங்கமாகச் சொல்லாத எந்த விஷயத்தையாவது இந்தியாவில் சொல்லியிருக்கிறேனா?—நீரே பார்த்துக்கொள்ளும்" என்றார். பிரசங்கங்களின் நகல்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகள் ஆகியவற்றையும் மேற்படி பத்திரிகைப் பிரதிநிதியிடம் கொடுத்தார். அவற்றில் தென்னாபிரிக்க வெள்ளைக்காரரைப்பற்றிக் கடுமையாகவோ அவதூறாகவோ ஒரு வார்த்தையும் இல்லை என்று பத்திரிகைப் பிரதிநிதி தெரிந்துகொண்டார். மற்றும் 'கோர்லாண்டு' 'நாடேரி' கப்பல்களில் வந்த பிரயாணிகளைத் தாம் திரட்டிச் சேர்த்துக்கொண்டு வரவில்லை யென்றும், கப்பல் ஏறுவதற்கு முன்பு அவர்களைத் தமக்குத் தெரியவே தெரியாது என்றும் ஆதாரங்களுடன் நிரூபித்தார். மேற்படி கப்பல்களில் வந்தவர்களில் பலர் ஏற்கனவே தென்னாபிரிக்காவில் குடியேறியவர்கள்—தாய் நாட்டுக்குச் சென்று திரும்புகிறவர்கள் என்றும், இன்னும் பலர் நேட்டாலில் குடியேறும் உத்தேசம் இல்லாதவர்கள்—டிரான்ஸ்வாலுக்குப் போகிறவர்கள் என்றும் எடுத்துக் காட்டினார்.

இந்த விபரங்களை யெல்லாம் மேற்படி பத்திரிகைப் பிரதிநிதி தம்முடைய பத்திரிகையில் வெளியிட்டார். இத்துடன்

காந்திஜி, தம்மைத் தாக்கியவர்கள்மீது வழக்குத் தொடர மறுத்துவிட்டார் என்னும் செய்தியும் பிரசுரமாயிற்று. இந்த விபரங்களினுல் டர்பன் ஐரோப்பியரின் மனோபாவம் மாறி விட்டது. அவர்கள் தங்களுடைய நடத்தையைக் குறித்து அவமானப்படலாயினர். பல பத்திரிகைகள் காந்திஜி குற்ற மற்றவர் என்று தீர்ப்புக்கூறி ஜனக்கூட்டத்தின் செயலைக் கண்டித்தன. இவ்வாறு டர்பன் வெள்ளைக்காரர்களின் பலாத் காரமும் காந்திஜியின் அஹிம்சையும் தென்னுபிரிக்க இந்திய சமூகத்துக்கு ஒரு புதிய கௌரவத்தை அளித்தன. இந்தியர்க ளின் உரிமைப் போராட்டத்துக்கும் அதனுல் சாதகம் ஏற்பட் டது. இந்தியர்களும் தன்மதிப்புணர்ச்சி பெற்றுர்கள்.

# குடிமக்கள் காப்பியம்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த என் இளமை வாழ்க்கையை, நினைக்க நினைக்க இனிக்கிறது. இளமையிற் கேட்ட கதைகளை நினைத்தாலும் இன்பமன்றோ பொங்குகிறது. மின்சார விளக்குக்கள் வருவதற்குமுன் மினுக்கு மினுக்கு என மின்னும் பூச்சிகளோடு தெரு விளக்குக்கள் போட்டியிடும் காலம் அது. அதிலும் ஓர் அழகு, ஓர் இன்பம், பொழுது சாய்ந்ததும் ஊர் அடங்கிவிடும். எங்கும் நிறைந்த பெரு மௌனம் ஒன்றே. அமைதி பொங்கும் இரவில் இன்பம் கூத்தாடும். மாலை ஆறு மணிக்கெல்லாம் சோறு முடிந்துவிடும். நடுவாயிலினை அடுத்துள்ள அறையில் குழந்தைகள் எல்லாரும் கூடிவிடுவோம். எங்கள் வீட்டின் பழைய வேலையாளைச் சுற்றி "நாயனு! நாயனு! ஒரு கதை! ஒரு கதை! என்று அன்பு கனியக் கூறிச் சூழ்ந்துகொள்வோம், கதை உலகிற் புகுந்து நகையாடுவோம். இருட்டினை மறப்போம், வீட்டினை மறப்போம், இந்த உலகினையே மறப்போம். அரசனும் அரசியும், வீரரும் சூரரும், பொன்னும் மணியும், அழகும் கடவுளும், பேசும் விலங்குகளும், பாடும் மரங்களும் எங்களைச் சுற்றிச் சுற்றிவர, அந்தச் சித்தருலகில் யாங்களும் ஒருவராய் வாழ்வோம். எப்போதும் "ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார்" என்றே அந்த வேலையாள் கதைகூறத் தொடங்குவது வழக்கம். ஆம், அரசர் தவிர வேறு எவரும் மனத்து எதிர்வரக் காணோம். என்ன என்ன கதைகள் என இப்போது எண்ணிப்பார்க்கிறேன்—விக்கிரமாதித்தன் கதை; மதனகாமராசன் கதை; திருவிளையாடல்கள்; நளன் கதை; அரிச்சந்திரன் கதை; துரியோதனன் கதை; இராமர் கதை எல்லாம் முடிமக்கள் கதைகளே. குடிமக்கள் கதை ஒன்றும் கேட்டதாக நினைவுக்கு வரவில்லை. குடிமக்களைப்பற்றி எண்ணுதற்கே இடம் இல்லாமற் போய்விட்டது. இன்று நினைத்தால் பெரிய வியப்பாகத் தோன்றுகிறது.

பின்பு பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகளும் முடிமக்கள் கதைகள் அல்லவா? இராமாய

ணம், பாரதம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, நைடதம் என்பவையே எப்போதும் பாடமாக வரும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் என்ருல் அரசர்களைப் பற்றிய நாடகங்களே பாடமாக வரும். வரலாறு என்ருலும் அரசர்கள் வரலாறன்றி வேருென்றும் வரலாருக அன்று தோன்றுவதே இல்லை. எங்களைக் கதை எழுதச் சொன்னபோதும் "ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான்" என்று எழுதத் தொடங்கியதாகவே நினைவிற்கு வருகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலை இது. இதன் பின்னரே பாட்டாளியுலகம் பிறந்து வளர்ந்துள்ளது. பாட்டாளி என்ற சொல்லே வழங்காத காலம் அது.

தமிழில் மட்டுமா இந்த நிலை இருந்து வந்தது? உலகம் தோன்றியதிலிருந்து உலகம் முழுதும் கதை என்ருலே முடிமக்கள் கதைதான். வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப் பெறுவது வான்மீகியின் இராமாயணமே. கிரேக்கர் பழங் காப்பியம் எனப் பாராட்டுவது ஹோமர் பாடிய இலியட் என்பதேயாம். மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினையே பாடுகிறது அந்தப் பழங்காப்பியம். வர்ஜில் என்ற பாவாணர் பாடிய ஈனிட் என்பதே இலத்தீன் மொழியின் பழங்காப்பியமாகும். உரோமப் பேரரசினைத் தோற்றுவித்த ஈனியஸ் என்ற அரசர் பெருமானது வரலாற்றினைக் கூறவே அக்காப்பியம் எழுந்தது. இவ்வாறு எந்த நாட்டுப் பழங் காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரினது வரலாற்றினையே பாடிப் புகழக் காண்கிரும்.

முடியரசர்கள் காலம் ஏறக் குறைய முடிந்துவிட்டது என்றே சொல்லிவிடலாம். இது குடியரசுக் காலம். அதுமட்டுமா? முதலாளி என்று புகழ்ந்ததெல்லாம் மலையேறிப்போய் விட்டதன்ருே? பாட்டாளி என்ற சொல்லே பாட்டைப்போல இனிக்கின்ற காலம் இது. இத்தகைய நாளில், முடிமக்களைப் பற்றிப் பாடிய நூல்களின் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முயல்வது வியப்பு அன்று. அண்மையில் தமிழ் இலக்

கியத்தினை ஆராய எண்ணிய இளைய அறிஞர் சிலர் 'முதலாளி இலக்கியமும் முடிமக்கள் இலக்கியமும் அன்றிக் குடிமக்கள் இலக்கியம் என ஏதேனும் உண்டா?' என்று நெஞ்சம் குமுறுகிறார். குறம் பாடினாலும், அது மீனாட்சி குறமாக முடிகிறது. குறவஞ்சி பாடினாலும், அது சரபேந்திரர் குறவஞ்சியாக நீண்டு ஓடுகிறது.

ஆனால் "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது. இப் பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடுகிறானா? உண்மையைத்தான் கூறுகிறானா? எண்ணித்தான் பார்ப்போமே! தமிழில் ஆதிகாவியம் எது? பாரதமா? அது பின்னாளில் எழுந்தது. இராமாயணமா? அது கம்பனால் ஒளிபெற்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் முதல் முதலாகத் தோன்றியது சிலப்பதிகாரமே ஆகும். அது யாருடைய கதை? அங்கே சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால் அவனுடைய கதையன்று. பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு கட்டிலில் வீற்றிருக்கிறான். கண்ணகி எதிரே உயிர் விடுகின்றான் ஆனால் அவன் கதையும் அன்று. சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகின்றான், கண்ணகிக்கும் கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால் அவன் கதையும் அன்று. முரசு முழங்குதானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை; குடிமக்களில் ஒருவர் கதைதான் அது. அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம்! கோவலன் குடிமக்களில் ஒருவன். மாதவி பரத்தையில் ஒருத்தி. இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம்.

இது நாம் வேறு எங்கும் காணாத ஒரு வியப்பு! முடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகப் பிறநாடுகளில் எல்லாம் அமைந்து விளங்க, குடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகத் தமிழ்நாட்டில் அமைந்து விளங்குகிறது. குடியரசு உலகிலும் இந்தக் காப்பியத்தைப் பாராட்ட இடம் உண்டு. பாட்டாளி உலகமும் இதனைப் பரிவுடன் வரவேற்கும். ஆய்ச்சியர் குரவை குன்றக்குரவை, வேட்டுவவரி என்று பாட்டாளிகளைப் பாடுவ

தில் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு களிப்பு! முரசு முழங்கு தானை முடிமக்கள் மூவரும் தமிழ் நாட்டின் ஒருமைப்பாட்டினைச் சிதைத்து வந்தனர். குடிமக்கள் வழியாகவே தமிழ் நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள். சோழநாட்டில் பிறக்கின்றாள் கண்ணகி. பாண்டிய நாட்டில் கணவனை இழக்கின்றாள். சேரநாட்டில் தெய்வம் ஆகின்றாள். மூவரசர் பேராசையால், முப்பெருந் துண்டாய் வெட்டுண்டு கிடக்கும் தமிழன்னை, கண்ணகியின் வாழ்க்கை வழியே ஓர் உருவாய் உயிர் பெற்று விளங்குகிறாள்.

என் வாழ்நாளுக்குள்ளேயே ஒரு புரட்சியைக் காண்கிறேன். முடிமக்களைப் பற்றியே கதையைக் கேட்டும் எழுதியும் வந்த நானே, இப்போது குடிமக்கள் கதையைக் கேட்டும் எழுதியும் வருகிறேன். என் இளமை நாட்களில் இதனை நான் நம்பியிருக்கமுடியாது. ஆனால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதனை நம்பினார் இளங்கோவடிகள். அரசர் குடியிற் பிறந்து அரச செல்வத்தில் வாழ்ந்தவர் நம்பினார். நம்பியது மட்டுமா? நம்பியபடி குடிமக்கள் கதையினைக் காப்பியமாக எழுதினார். எழுதியது மட்டுமா? தாம் எழுதியபடி தமிழ் நாடும் அந்தக் காப்பியத்தை அன்றுமுதல் இன்றுவரை பாடும்படியும் செய்துவிட்டார்.

இளங்கோவடிகள் செய்த புரட்சி பெரிதன்றோ? சங்க காலமே ஒரு புரட்சிக்காலம். அக்காலப் புலவர்கள் பழைமைக்கு அடிமையாகாது வெற்றி பெற முயன்றார்கள். அவர்கள் கூறியிருக்கும் உவமைகளைக் கண்டால் இந்த உண்மை விளங்கும். தாங்கள் நேரிற் கண்ட போர்களையும் ஊர்களையுமே உவமை கூறுகின்ற புதுமையை அங்குக் காணலாம். "வஞ்சிமாநகர் போல அழகிய தலைவி; வெண்ணிப் போர் ஆரவாரம் போலப் பழிச்சொல் அம்பலத்தில் ஆரவாரமாகிறது" என்றெல்லாம் பாடுகிற ஒரு புதுமரபினைச் சங்கப் புலவர்கள் நிலைநாட்டி விட்டதனை என் என்பது? இந்தப் புரட்சியின் பயனாக விளையும் புரட்சிகள் பல. முடிமக்கள் வாழ்வில் காணும்

சிறப்புக்கள் எல்லாம் குடிமக்கள் வாழ்விலும் கண்டாலன்றோ காப்பியம் இனிக்கும்! காதலும் அழுகையும் வீரமும் காப்பியப் பெருஞ்சுவைகள். மாதவியும் கோவலனும் ஓருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வே சிலப்பதிகாரப் புகார்க் காண்டம். கணவனை இழந்த கண்ணகியே அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டுகின்றாள். அந்தக் கதைதான் மதுரைக் காண்டம். கண்ணகிக்காக எடுத்த கல்லினை வடவரசர் தலை மீது ஏற்றிவந்த செங்குட்டுவனது வீரத்தைப் பாடுவதே வஞ்சிக் காண்டம். அரசனிடம் வீரம் கண்டால் குடிமக்கள் காப்பியம் எழுதற்கு இடமில்லை. கோவலனிடம் வீரம் காண்கிறார் இளங்கோவடிகள். இன்று உலகம் போற்றும் வீரம், காந்தியடிகள் காட்டிய வீரம், இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காண்கிறார் இளங்கோவடிகள். யானையைக் கொல்லாமலே யானைக் காலிலிருந்து முதியவனைக் காப்பாற்றுகின்றான் கோவலன். அவன் கருணை மறவனாகக் காட்சியளிக்கின்றான். கண்ணகி வீட்டை விட்டு வெளிவராத பெண்— வெளிநாட்டில் பாண்டியனை வெல்கிறாள்—கடவுளாக மாறுகிறாள். ஈதொரு புதுமை! பரத்தையரைப் பழிப்பதே அன்றும் இன்றும் வழக்கம். பரத்தையர் குடிப் பெண்ணான மாதவி, கற்பரசியாக ஓங்குகிறாள்; துறவறத்தின் முடிமணியாகச் சிறக்கின்றாள். அவள் மகள் உலக குருவாக விளங்குவதனை மணிமேகலை கூறுகின்றது. குடிமக்கள் சிறப்பினை இதற்குமேலும் எவ்வாறு கூறுவது? திருவள்ளுவர் தமது பொருட்பாலில் குடிகளது சிறப்பினைக் கடைசி பதின்மூன்று அதிகாரங்களில கூறுவதன் நுட்பம் இப்போது விளங்குகிறதன்றோ! குடிமக்கள் சிறப்பினை இடைக்காலத்தில் தமிழ்நாடு மறந்ததும் உண்டு. அப்போது திருவள்ளுவர் கூறிய குடியியலின் நுட்பத்தினை உணரமாட்டாது, அந்த அதிகாரங்களை ஒழிபியல் என்று ஒதுக்கி வைத்தது என்ன புதுமையோ? நாட்டின் உயிர்நிலையாய்ப் பொருட்பாலின் முடிமணியாக விளங்குவது ஒழிபியலாக ஒதுக்கப்படுவது காலத்தின் கோளாறன்றோ? இன்று குடிமக்கள் காப்பியத்தின் பெருமையை உணர்ந்து வருகிறோம். குடியரசிலன்றோ வாழ்கின்றோம்! பழைய நூல்களைப் புதிய கண்கொண்டு உண்மையை உணர இனி வழியேற்படும்.

# சோதிடம் பொய்யாகுமா?

திருவிடைமருதூர்ச் சாமிநாதையர் தொண்டைமண்டலம் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் பன்னிரண்டு வருஷங்களாகத் தலைமை உபாத்தியாயர். அவர் மனைவி அகிலாண்டம்மாளும் அவரும் மிகவும் சந்தோஷமாகக் குடும்பவாழ்வு நடாத்திவந்தார்கள். ஆனால் மனைவிக்குக் குழந்தையில்லாதது ஒரு பெருங்குறை.

"அதனாலென்ன அகிலம்! (இப்படித்தான் சாமிநாதையர் தன் மனைவியை அழைப்பது) பள்ளிக்கூடத்தில் இருநூறு குழந்தைகள் இருக்கிறார்கள். அத்தனைபேரும் எனக்குக் குழந்தைகள் தான்" என்பார்

"உங்களுக்கென்ன பள்ளிக்கூடத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் உங்கள் குழந்தைகளாக இருக்கலாம். நான் வீட்டில் தனியாகத்தானே இருக்கவேண்டும். என் வாழ்வைப் பாருங்கள்" என்று மனைவி சொல்லுவாள்.

இதைப்பற்றிய குறை வரவர அகிலாண்டம்மாளுக்கு அதிகமாவதைப் பார்த்துச், சாமிநாதையர் யாத்திரை போவதாகத் தீர்மானித்தார். பள்ளிக்கூட நிர்வாக அதிகாரியிடம் இரண்டுமாத விடுமுறை பெற்றுக்கொண்டு தெற்கே பழநி, இராமேசுவரம் முதலிய ஸ்தலங்கள் பார்த்துவிட்டு, மைசூர் தேசத்தில் புத்திர சம்பத்துத் தருவதிற் பெயர்போன ஓரிரண்டு அசுவத்த மரங்களைப் பிரதட்சணமும் செய்து ஊர் திரும்பினார். அவருடைய ஜாதகம் பார்த்து ஒரு தெலுங்கு சோதிடர் சொல்லியிருந்த வாயிதாவுக்குச் சரியாக அகிலாண்டம்மாள் கருத்தரித்தாள்.

"சோதிடம் பொய்யாகுமா" என்றார் சாமிநாதையர். ஆனால் அகிலாண்டம்மாள் அசுவத்தமரப் பூசைதான் இந்தப் பாக்கியம் தந்தது. என்று சொல்லுவாள். எப்படியிருந்தாலும் சரி, சுகப் பிரசவமாய் எல்லாம் சரியாக முடிந்தால் பழநிக்கு இன்

ஞெருமுறை போவதாக விரதம் எடுத்துக்கொண்டு நாட் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பல வருஷங்கள் கழித்துக் கருத்தரித்திருக்கிறபடியால் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டுமென்று சாமிநாதையருக்கு நண்பர்கள் சிலர் சொன்னார்கள். பிரசவத்திற்கு எழும்பூர் ஆஸ்பத்திரியிலேயே போயிருப்பதுதான் மேல் என்று அவர்கள் எல்லோரும் யோசனை சொன்னார்கள். அகிலாண்டம்மாளின் தாயார் வெகு நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டாள். அத்தை ஒருத்தி இருந்தாள். அவள் வரக்கூடுமென்று எதிர் பார்த்தார்கள். எதோ காரணத்தினால் அவள் வரமுடியவில்லை. சரியான சகாயமில்லாதபடியால் பிரசவத்திற்கு ஆஸ்பத்திரிக்குப் போவதே சரி என்று முடிவாயிற்று.

யாதொரு கஷ்டமும் இல்லாமல் சரியான பருவத்தில் பிரசவமும் ஆயிற்று. சாமிநாதையருடைய சந்தோஷத்தைச் சொல்லவேண்டியதில்லை. ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளுக்குப் பணத்தை வாரி இறைப்பதாக உத்தேசித்தார்.

குழந்தை இரவு ஒன்பது மணிக்குப் பிறந்தது. வழக்கப்படி உடனே அதைக் குளிப்பாட்டி எடை எடுத்துக் குறித்துக்கொள்வதற்காகப் பிரசவம் பார்த்த தாதி குழந்தையை எடுத்துக் கொண்டுபோனாள். அதற்காக ஆஸ்பத்திரியில் ஒரு தனி இடம். அதே சமயம் மொத்தம் மூன்று குழந்தைகள் ஆஸ்பத்திரியில் பிறந்தன. தாதிகளுக்கெல்லாம் பேருற்சாகம் தங்களுக்கே புத்திரோத்பவமான மாதிரி அவர்கள் களித்துக் கூத்தாடினார்கள்.

மூன்று குழந்தைகளுக்கும் செய்யவேண்டியன எல்லாம் செய்தார்கள்.

ஒவ்வொரு குழந்தையின் இடுப்பிலும் ஒரு எண்ணிக்கைச் சீட்டுக் கட்டுவது வழக்கம். அல்லாவிடில் ஆஸ்பத்திரிகளில் பிறந்த குழந்தைகள் மாறிப்போகுமல்லவா?

மூன்று குழந்தைகளில் ஒன்று கறுப்பு. மற்ற இரண்டு குழந்தைகளும் அநேகமாகச் சமநிறம்,சமநிறை.

அகிலாண்டம்மாளின் குழந்தையை எடுத்துவந்த தாதி அதை அங்கிருந்த மற்றத் தாதிகளிடம் ஒப்படைத்துவிட்டு ஏதோ வேலையாக வேறு இடத்திற்குப் போய்விட்டாள்.

முன்னதாகவே சீட்டுக் கட்டிவிடுவது வழக்கம். அப்படிச் செய்யாமல் வம்பு பேசிக்கொண்டு மறந்துவிட்டபடியால் அங்கிருந்த தாதிகளுக்கு எது அகிலாண்டம்மாள் குழந்தை, எது மற்றையது என்பதில் சந்தேகம் ஏற்பட்டது. கறுப்புக் குழந்தையைப் பற்றித் தகராறு இல்லை. மற்ற இரண்டு குழந்தைகளைப்பற்றி ஒருவாறு தீர்த்துக்கொண்டு, சீட்டுக்கள் கட்டிவிட்டார்கள். அகிலாண்டம்மாள் ஒரு மாற்று அதிக வெளுப்பு. எட்டாவது வார்டில் படுத்திருந்த முஸ்லிம் பெண் கொஞ்சம் கறுப்பு. குழந்தையும் அப்படித்தானிருக்கும் என்று தாதிகள் தீர்மானித்தார்கள். கொஞ்சம் அதிக வெளுப்பு என்று தோன்றிய குழந்தையை அகிலாண்டம்மாளிடம் கொண்டுபோய் ஒப்பித்துவிட்டார்கள். ஒரு தகராறும் ஏற்படவில்லை.

"எத்தனை அழகாக இருக்கிறது உங்கள் குழந்தை ஏழு இருத்தல் எடை. இது உங்கள் முதற் குழந்தையா?" என்றாள் தாதி. அவள் ஒரு பிரெஞ்சு வெள்ளைக்காரி.

"ஆமாம்" என்றார் சாமிநாதையர். அவரும் அங்கே அப்போது இருந்தார். சொல்லிவிட்டு மனைவியைப் பார்த்தார். அவள் சோர்ந்து படுத்திருந்தாள். அவளுடைய அகமகிழ்ச்சி முகத்தில் புன்முறுவலாக மலர்ந்தது. தன் வாழ்வு பயன் பெற்றதாயிற்று என்று அப்போது அவள் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் அளவேயில்லை.

"குழந்தை திடமாக இருக்கிறதா?" என்றார்.

"ஓ! இன்று பிறந்த மூன்று குழந்தைகளில் இதுதான் முதற்றரமானது" என்றாள் ஆங்கிலத்தில்.

இதைச் சாமிநாதையர் அகிலாண்டம்மாளுக்குத் தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னார்.

இதற்குள் குழந்தையை முதலில் எடுத்துப்போன தாதி வந்தாள். அவளும் குழந்தையை எடுத்துச் சீராட்டிவிட்டு இரண்டு தாதிகளும் வெளியே போனார்கள்.

"தொப்பூழுக்குப் பக்கத்தில் ஒரு மச்சம் இருந்ததே, அது எப்படி இவ்வளவு விரைவில் மறைந்துபோயிற்று?" என்றாள் முதல் தாதி.

"அதுவா இவள் குழந்தை? அது எட்டாவது வார்டுக்கு அல்லவோ போய்விட்டது! அது முஸ்லிம் பெண் குழந்தை என்று எண்ணிச் சீட்டுக் கட்டினோம்". என்றாள் இரண்டாம் தாதி.

முதல் தாதி "சரி இனிமேற்பேசாதே, சும்மா இரு" என்றாள்.

இரண்டாம் தாதி "சீ பாவம்! உனக்கு ஞாபகம் நிச்சயமாய் இருந்தால் மாற்றிக் கொடுத்துவிடலாமே" என்றாள்.

முதல் தாதி "பைத்தியக்காரி! அப்படியெல்லாம் செய்தால் வம்பு ஆகும். நம் வேலை போய்விடும். தாயார் இரண்டு பேருக்குமே சந்தேகமும் மனவருத்தமும் உண்டாகும். பேசாமலிரு" என்றாள்.

அப்படியே ஒரு கலவரமுமில்லாமல் பன்னிரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்துவிட்டு, ஆண்டர்ஸன் தெருவில் அப்துல் தையாப்ஜி சேட்டு மனைவியும், திருவல்லிக்கேணியில் அகிலாண்டம்மாளும் தத்தம் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இரண்டு குழந்தைகளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பெற்றன. சேட்டு வீட்டில் ஏராள மான செல்வமும் சௌகரியமும்; சாமிநாதையர் வீட்டிலோ கரைகடந்த அன்பும் சந்தோஷமும். சேட்டு வீட்டுக் குழந்தைக்கு எள்ளளவும் குறைவில்லாமல் உபாத்தியாயர் வீட்டுக் குழந்தையும் வளர்ந்து வந்தது.

குழந்தைக்கு ஒரு மாதம் ஆனபின் அகிலாண்டம்மாளின் அத்தை வந்தாள். குழந்தையின் கண்கள் தன் அண்ணன்

முத்துச்சாமியின் கண்ணேதான் என்பது பிரத்தியட்சம் என்றாள். மூக்குமட்டும் சாமிநாதையர் வீட்டு மூக்கு என்றாள். இதில் சாமிநாதையருக்குக் கொஞ்சம் திருப்தி. இரண்டிலும் அகிலாண்டம்மாளுக்குத் திருப்தி.

தையாப்ஜி சேட்டு விட்டிலும் இவ்வாறே. ஆனால் அங்கே நடந்த சம்பாஷணைகளை நான் நேரே கேட்கவில்லை.

இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு, இப்போது அப்துல் தையாப்ஜி சேட்டு இறந்துபோய் மகன் சுலைமான் சேட்டு சிறுவயதிலேயே மிகுந்த சாமர்த்தியசாலியாய்த் தகப்பனாரின் பெரிய இறக்குமதி வியாபாரத்தை நடத்திவருகிறார்.

சாமிநாதையர் மகன் பெயர் அசுவத்த நாராயணன். எஸ். எஸ். எல். ஸிக்கு மேல் என்ன கஷ்டப்பட்டும் அவன் படிப்பு ஏறமுடியவில்லை. பம்பாய்க்குப் போய் இரண்டுமாதம் அங்கே நண்பர்களுடன் இருந்துகொண்டு சிபார்சுகள் சம்பாதித்து எங்கெங்கேயோ தேடிப் பார்த்தும் வேலை ஒன்றும் கிடைக்காமல் திரும்பி வந்தான். அவனைப்பற்றிச் சாமிநாதையருக்கு எப்போதும் கவலை. தெலுங்குச் சோதிடன் எழுதிக் கொடுத்த குறிப்பில் "மகன் பெரிய வியாபாரியாவான், பாக்கிய சாலி, ஆனால் தாய் தகப்பனுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை" என்று எழுதியிருந்தது.

"எனக்கும் உனக்கும் ஒரு பிரயோசனம் இல்லாவிடினும் அவன் நன்றாய் இருந்தால் போதுமே? சோதிடம் எல்லாம் பொய்" என்றார் சாமிநாதையர்.

"பொய் என்று சொல்ல முடியுமா? எழுதியிருந்தபடி குழந்தை பிறக்கவில்லையா? பகவான் எழுத்துப் பொய்யாகுமா? இன்னும் என்ன வரும் என்ன வராது என்று யாருக்குத் தெரியும்? ஒரு செட்டியாரிடம் சேர்த்துப்பாருங்கள், வியாபாரத்தில் கெட்டிக்காரனாகத் தேர்ந்தாலும் தேறுவான்" என்றாள் அகிலாண்டம்மாள்.

சோதிடம் பொய்யாகுமா?

# வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்.

கடவுளின் சிருஷ்டியில் உபயோகமற்ற பொருள் என்று எதுவும் கிடையாது. சிலவற்றின் உபயோகத்தை எல்லோரும் எளிதாக அறியமுடிகிறது. இதனுல் அவற்றைத் தவிர மற்றப் பொருள்கள் உபயோகமற்றவை என்று அவசரப்பட்டுத் தீர்மானித்துவிடுகிறேம். அவ்வாறு கருதப்பட்டு வரும் பொருள்களில் ஒன்று தூசி.

தூசியினுல் ஏற்படக்கூடிய கெடுதல்கள்தாம் நமக்குத் தெரியும். அதனுல் சில நன்மைகளும் நமக்கு உண்டு என்ருல் அது ஆச்சரியமாகவே இருக்கும்.

தூசியினுல் ஏற்படும் முதல் நன்மை மழை. பூமியைச் சூழ்ந்திருக்கும் பவனத்தில் தூசி இல்லாவிட்டால் மழையே உண்டாகாது என்ருல் அது மிகவும் அதிசயமாகவே இருக்கும். அது மாத்திரமன்று. காலை மாலை நேரங்களில் சூரியனை அழகுபெறச் செய்வதும் தூசியேயாகும்.

"பாரடியோ! வானத்தின் புதுமை எல்லாம்
உவகையுற நவநவமாகத் தோன்றுங் காட்சி
கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்
என்னடீ இந்த வண்ணத்தியல்புகள்—எத்தனைகலவை!
ஆஹா! எங்கு நோக்கிடினும் ஒளித்திரள்! ஒளித்திரள்!
வண்ணக் களஞ்சியம்!"

என்று கவி சுப்பிரமணிய பாரதியார் வருணிக்கும் மாலையின் புதுமைகளுக்குக் காரணம் தூசிஎன்ருல் அதை நம்புவது சற்றுக் கடினமாகத் தோன்றலாம். இவை எல்லாம் விஞ்ஞானத்தினுல் நிரூபிக்கப்பட்ட உண்மைகள். இவ்விபரங்களை இக்கட்டுரையிற் காண்போம்.

பூமியைச் சுற்றிப் பல மைல்கள் உயரம்வரை காற்று வியாபித்திருக்கிறது. இக்காற்று மண்டலத்தையே பவனம்

என்று சொல்லுவார்கள். பவனத்தில் பல வாயுக்கள் இருக்கின்றன திடப்பொருள்களிலும் திரவப்பொருள்களிலும் பல வகை இருப்பதை நாம் எளிதாய்க் காண்கிறோம். அதைப்போலப் பவனத்தில் உள்ள பலவகை வாயுக்களை நாம் கண்ணுற் காணமுடியாது; சோதனையினால் அறியலாம். பவனத்தில் வளிரம் (Nitrogen), பிராணவாயு (Oxygen), நீரகம் (Hydrogen), கரியமில வாயு (Carbon-di-oxide) முதலிய வாயுக்கள் இருப்பது தெரிய வந்தது. இவ்வாயுக்களில் அதிகமாகத் தென்படுவது வளிரம்தான். பவனத்தில் முக்காற் பங்குக்குமேல் இது இருக்கிறது. இவ்வாயுக்களுடன் நீராவியும் தூசியும் சேர்ந்திருக்கின்றன. பவனத்திற்குத் தூசி எவ்வாறு வந்தது என்று நினைக்கலாம். இதற்குப் பல காரணங்கள் உண்டு.

நட்சத்திரங்களில் வால் நட்சத்திரம் என்று ஒருவகை உண்டு. இவற்றில் மிகப்பெரியதும் உண்டு, சிறியதும் உண்டு. பெரிய வால் நட்சத்திரங்களின் சிதைவினால் சிறிய வால்நட்சத்திரங்கள் ஏற்படுவதாக நினைக்கிறார்கள். ஒரு பெரிய வால் நட்சத்திரத்தின் தலை பூமியைவிடப் பலமடங்கு பெரியதாக இருக்கும். அதனுடைய வால் கோடிக்கணக்கான மைல்வரை நீண்டிருக்கும். அவை வெட்டவெளியிலிருந்து பவனத்திற்குள் நுழையும்போது பவனத்தின் வாயுக்களினால் எதிர்க்கப்படுகின்றன. இந்த எதிர்ப்பை மீறி வாயுக்களை உராய்ந்து செல்லும்போது அவை உஷ்ணமடைந்து எரிந்து போய்விடுகின்றன. எரிந்த சாம்பல் முழுவதும் பவனத்தில் தூசியாகிறதாம். இவ்வாறு ஒவ்வொரு வருஷமும் லக்ஷம் டன் எடை அளவுள்ள தூசி பவனத்திற் சேருவதாக மதிப்பிடுகிறார்கள். பூமி சூரியனிடமிருந்து பிரிந்த நாள்முதல் இன்றுவரை கோடிக்கணக்கான வருஷங்கள் ஆகி இருப்பதனால் இவ்வாறு சேர்ந்த தூசியின் அளவை மதிப்பிட முடியாது என்று விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள்.

கடலிலிருந்தும் தூசி பவனத்திற்குச் செல்லுகிறது. பூமியின் மேற் பகுதியில் தரையின் பரப்பைவிடக் கடலின் பரப்புத்தான் அதிகம்; கடலின் பரப்பு தரையின் பரப்பைவிட

இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. பூமி சூரியனிட மிருந்து பிரிந்து சற்றுக் குளிர்ந்தபோது, அதன் மேற்பரப்பில் இருந்த உப்புக்கள் மழை நீரால் அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் விழுந்தன. அதனால் கடல்நீர் முழுதும் உப்பாயிற்று காற்று கடலின்மீது வீசும்போது அதன் மேற்பரப்பிற் கரைந்துள்ள உப்பையும் இழுத்துச் செல்லுகிறது. இவ்வாறு இழுத்துச் செல்லப்படும் உப்பு பவனம் முழுவதும் சிறு துகள்களாக வியாபித்து விடுகிறது.

மற்றொரு வழியிலும் பூமியிலிருந்து பவனத்திற்குத் தூசி செல்லுகிறது. சூரியனிடமிருந்து தூசி பிரிந்த காலத்தில் அது ஒரு நெருப்புக் கோளமாக இருந்தது. காலப்போக்கில் அதன் மேலோடு மாத்திரம் குளிர்ந்ததே யொழிய உட்புறம் குளிரவில்லை. சுமார் இருபது முதல் நாற்பது மைல் ஆழம் வரைதான் பூமி குளிர்ந்திருக்கக்கூடும் என்று நினைக்கிறார்கள். அதன் கீழ் பூமியின் உட்பகுதி இன்னும் குழம்பு நிலையில் இருப்பது தெரியவந்தது. எரிமலைகள் உண்டாகும்போது இக்குழம்புப்பொருள் வெளிவருகிறது. எரிமலைகள் பூமிக்குள் ஆழமாய் இறக்கப்பட்ட பெருங் குழாய்கள் என்று சொல்லலாம். இக் குழம்புப் பொருளில் கற்கள், தவிடுபொடிகள், நீராவி முதலியவை காணப்படுகின்றன. கனம் அதிகமாயுள்ள கற்கள் எரிமலைகளின் அருகிலேயே தங்கிவிடுகின்றன. ஆனால் இலேசாக இருக்கும் தவிடுபொடிகள் காற்றினால் நெடுந்தூரம் வரை அடித்துச் செல்லப்படுகின்றன.

1883ம் ஆண்டில் கிராடடோ (Kratatoa) என்னும் இடத்தில் ஒரு பெரிய எரிமலை ஏற்பட்டதாம். அச்சமயம் அங்கிருந்து கிளம்பிய தூசித் துகள்கள் உலகம் முழுவதும் பரவிச் சென்றதாகக் கூறுகிறார்கள். இதன்பொருட்டு உலகெங்கும் இரண்டு வருஷம்வரை மாலை நேரத்தின் ஜோதி பிரமிக்கத் தக்கவகையில் இருந்து வந்ததாகவும் கூறுகிறார்கள். இதுபோலவே பாலைவனப் பிரதேசங்களிலிருந்தும் மணல் ஆயிரக்கணக்கான அடி தூரம் அடித்துக்கொண்டு வரப்படுகிறது. இதுவும் பவனத்தில் சேர்ந்துவிடுகிறது. பஞ்சு ஆலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள் முதலியவை உள்ள பெரிய நகரங்களில் நிலக்கரித்

தூசிக்குக் குறைவே இல்லை. இவ்வாருகப் பவனத்திற் சேரும் பலவிதமான தூசித்துகள்கள் பலமைல் உயரம்வரை எப்பொழுதும் மிதந்துகொண்டே இருக்கின்றன. தூசியினுல் ஏற்படும் நன்மைகளை இனிக் கவனிப்போம்.

கடல்களிலும் ஏரிகளிலும் உள்ள நீர் சூரிய வெப்பத்திஞற் சூடாகி ஒருபகுதி நீராவியாக மாறிப் பவனத்தை நோக்கிச் செல்லுகிறது. பவனம் ஒரு குறிப்பிட்ட அளவைவிட அதிகமான நீராவியை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த அளவும் அதன் வெப்ப நிலையைப் பொறுத்துள்ளது. சூரிய வெப்பபத்திஞல் பூமிக்கு அருகில் உள்ள காற்றும் சூடாகிறது. இதனுல் காற்றும் இலேசாகி நீராவியுடன் மேலே கிளம்புகிறது. காற்று உயரச் செல்லச் செல்லக் குளிர்ச்சி அடைகிறது. மேலெழும் காற்று குளிரும்போது அதன் அருகில் பவனத்திலுள்ள நீராவியும் குளிருகிறது. உடனே நீராவி நீர்த்துளிகளாகித் தூசித்துகள்களின்மீது படிகிறது. இந்நுண்ணிய நீர்த்திவலைகளே மேகங்கள்.

நெடுநாள் வரை நீர்த்துளிகள் தூசித்துகள்களின் உதவி இல்லாமல் தாமாகவே உண்டாகிவிடுவதாக நினைத்துவந்தார்கள். இது தவறு என்பதை ஐட்கின் (Aitken) என்ற விஞ்ஞானி காட்டினுர். இன்னும் ஒரு படி சென்றுவிட்டார் பான்கிராப்ட் (Bancroft) என்ற மற்ருெரு விஞ்ஞானி. தூசியைக் கொண்டு மூடுபனியின் உபத்திரவத்தை நிவிர்த்தி செய்ய அவர் ஓர் உபாயத்தைக் கண்டுபிடித்துவிட்டார். இவர் ஆகாயவிமானத்திலிருந்து பொடி மணற்றூசியைத் தூவி மூடுபனியை அவற்றின்மீது படியச் செய்து மழையாக மாற்றிவிட்டாராம்.

இனி, தூசிக்கும் இயற்கை எழிலுக்கும் உள்ள தொடர்பைக் கவனிப்போம். மேகங்கள் எல்லாம் தூசித் துகள்களின் மீது படிந்த நீர்த்துளிகள் என்று முன்பு படித்தோம். மேகங்களிற் பலவகையுண்டு. வெப்பம் மிகுந்த நாளில் வானத்தில் அவை அடுக்கடுக்காக நீண்டு வளர்ந்துகொண்டே போவதைக் கவனிக்கலாம். இவற்றைக் கூட்டு மேகங்கள் (Cumulus Clouds) என்று கூறுவார்கள். மலைச் சிகரங்கள் போல வளரும்

இம்மேகங்கள் சுமார் இரண்டு மைல் வரை உயருகின்றன. சூரியனின் ஒளி இந்நீர் படிந்த துகள்களின் மீது விழுவதனால் இவை விதம் விதமாகத் தோன்றுவதைக் காணலாம். சூரியனின் ஒளி நேராக விழும் இடங்களில் இம் மேகங்கள் பஞ்சையொத்த வெண்மை நிறத்துடன் தோன்றுவதைப் பார்க்கலாம். அவை நம் தலைக்கு நேராகப் போகும்போது மங்கலாகத் தோன்றும். அவை சூரியனை மறைக்கும் போது நடுவே கறுத்தும் விளிம்புகள் கண்ணைப் பறிக்கும்வண்ணம் வெண்மை நிறத்துடனும் தோன்றும். சூரியனின் ஒளியை ஒரு மேகம் தடுத்து அதன் நிழல் மற்றொரு மேகத்தின்மீது விழும்போது அதன் தோற்றம் அழகாக அமையும். காலை மாலை நேரங்களில் சூரியனைக் கணந்தோறும் புதிய வண்ணங்களுடன் தோன்றச் செய்வதும் தூசிதான். இது எப்படி என்பதைப் பார்க்குமுன் ஒளியைப்பற்றிய சில விபரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

வெண்ணிறமாகத் தோன்றும் சூரிய ஒளியில் பல நிற ஒளிகள் அடங்கி இருக்கின்றன. ஊதா, அவுரி, நீலம், மஞ்சள் பச்சை, 'ஒறேஞ்' சிவப்பு என்ற ஏழு நிறங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. ஒளி பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் விசும்பில் அலைகளாகப் பரவி நம்மை அடைகிறது. ஒவ்வொரு நிற ஒளிஅலைகளின் நீளமும் ஒவ்வொரு விதமாக இருக்கும். சிவப்புநிற ஒளிஅலைகளின் நீளம் மற்ற நிற ஒளிஅலைகளின் நீளங்களைவிடக் குறைவானது. ஒளி ஒரு பொருளின்மீது மோதும்போது அது குறிப்பிட்ட திசையில் பிரதிபலிக்கப்பட்டுச் (Reflection)செல்லும். பொருளின் மேற்பரப்பு மிருதுவாக இருந்தாற்றான் இவ்வாறு பிரதிபலிப்பு உண்டாகும். மிருதுவாக இராமல் பரப்பு கரடுமுரடாக இருக்குமானால் ஒளி எல்லாப் பக்கமும் சிதறி அடிக்கப்படும். இந்நிகழ்ச்சியை ஒளிச்சிதறல் (Scattering of Light) என்று கூறுவார்கள். சில சமயம் ஒளி பொருளின் மூலம் நுழைந்தும் செல்லலாம். அப்போது அதன் திசையில் ஒரு மாறுதல் உண்டாகிவிடுகிறது. இதை ஒளிக்கோட்டம் (Refraction)என்று சொல்லுவார்கள். நுழைந்த ஒளியில் அடங்கியிருக்கும் சில நிறங்களும் நீக்கப்படலாம். உதாரணமாக சிவப்புக் கண்ணாடியானது வெண்ணொளியில்

உள்ள சிவப்பு நிறம் நீங்கலாக மற்ற எல்லா நிறங்களையும் உறிஞ்சிவிடும். இவ்விதமாக ஒளி ஒரு பொருளைத் தாக்கும் போது அது சிதற அடிக்கப்படலாம் அல்லது உறிஞ்சப் படலாம்.

காலை மாலை நேரங்களில் சூரியன் வானத்தில் மிகத்தாழ்ந்த உயரத்தில் இருக்கிறது. அப்போது சூரியனுடைய ஒளி நம்மை வந்தடைவதற்குள் பவனத்தின் மூலம் நெடுந்தூரம் வர வேண்டி யிருப்பதுடன் அதிகமான தூசித் துகள்களையும் தாண்டி வரவேண்டியிருக்கிறது. தூசித் துகள்கள் சூரியனின் வெண்ணொளியில் உள்ள பலநிற ஒளிகளைப் பலவாருகச் சிதற அடிக்கின்றன. இதைவிடச் சற்றுக் குறைவாகச் சிதறி அடிக்கப்படும் 'ஒறேஞ்' மஞ்சள் நிறப் பகுதிகள் பவனத்தி லுள்ள நீர்த்துளிகளினுல் உறிஞ்சிவிடப்படுகின்றன. இவ்வாருகச் சிவப்பு நிறம் நீங்கலாக மற்ற எல்லா நிறங்களும் அநேகமாக நீக்கப்படுகின்றன. சிறிதளவுக்குச் சிவப்புடன் பச்சை நிற ஒளியும் சேர்ந்து வருகிறது. ஒளிக் கோட்டத்திஞல் பச்சை நிற ஒளிக்குச் சிவப்பு நிற ஒளியைக் காட்டிலும் அதிக திசைமாற்றம் ஏற்படுகிறது. இதன் பயனுகச் சூரியனில் சிவப்பு பச்சை நிறமுள்ள இரண்டு தகடுகள் சுழலுவதைக் காணலாம். இதைக் கவி சுப்பிரமணி பாரதியார் "தரணியில் இங்கிது போலோர் புதுமை உண்டோ?" என்று மிக அழகாகவும் அற்புதமாகவும் வருணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சூரியன் உதயமாக முன்பும் அஸ்தமனமாகிய பின்பும் வானத்தில் ஒளி இருப்பதை நாம் காண்கிறோம். பவனத்தில் தூசி இல்லாவிட்டால் சூரியன் மறைந்ததுதான் தாமதம் உடனேயே இருள் சூழ்ந்துவிடும். அப்போது நாம் சூரியன் உதிப்பதையோ அல்லது மறைவதையோ பொருட்படுத்தமாட்டோம். உஷாக் காலத்தைப்பற்றிப் பாடுவதற்குக் கவிகளும் முன்வர மாட்டார்கள். இந்தக் காலைச்சந்தி மாலைச்சந்திகள் நீடித்திருப்பதைக்கொண்டு தூசித் துகள்கள் எவ்வளவு உயரம்வரை பவனத்தில் மிதந்துகொண்டிருக்க வேண்டும் என்று கணக்கிட்டு விடலாம். மேலும் இக்காலங்களில் ஒளியின் நிறம் விதம்விதமாக மாறிவருவதைக் காணலாம். சூரியன் மேல் நோக்கிச்

சென்று மறைந்தவுடன் அதன் கிரணங்கள் தலைக்கு மேலே யுள்ள தூசித் துகள்களைத் தாக்குகின்றன. பவனத்தின் அடிப்பாகத்தில் துகள்கள் அதிகமாக இருக்கும். மேலே செல்லச் செல்லக் குறைந்துகொண்டே போகும். அடிப்பாகத்திலுள்ள துகள்கள் சூரியனுடைய ஒளியை அதிகமாகச் சிதற அடிக்கின்றன. மேலே செல்லச் செல்ல ஒளிச் சிதறலும் குறைந்துகொண்டே போகும். இதனால் சூரியன் மறைந்த பின்பும் வானத்தில் பல நிறங்கள் தென்படும். சிறிது சிறிதாக நீலம் பச்சையாகவும், மஞ்சள் சிவப்பாகவும் மாறுவதைக் கவனிக்கலாம். வானத்தின் கிழக்கே பூமியின் நிழல் மெதுவாக மேலே ஏறி இருட்டிக்கொண்டே வரும். இருள் வானம் முழுவதும் பரவி வருவதற்குள் ஒளியும் கணந்தோறும் புதிய வண்ணங்கள் காட்டி மறைந்துகொண்டே போகும்.

இதைக் கண்டுகளித்த கவி ஒருவர் "**வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்**" என்று பாடுகிறார். மயிலின் தோகை விரியாமல் சேர்ந்திருக்கும்போதும் அதன் வண்ணங்கள் நம் மனத்தைக் கவரும். உற்சாகம் மேலிட்டு அது தோகையை விரித்தாடினால் அதன் நிறச் சோபை நம்மை இன்னும் அதிகமாகப் பிரமிக்கச் செய்யும். இதைப்போலவே சூரியன் மறையும் நேரங்களிற்றான் வானம் விதம் விதமான வண்ணங்கள் காட்டுகிறது. இவை எல்லாம் தூசியினால் ஏற்படும் விந்தை ஆகும்!

# பிரதாப முதலியார் சரித்திரம்.

## இளமை விளையாட்டு

நானும் கனகசபையும் எங்கள் நண்பர்கள் சிலரும் உடற் பலம் உண்டாவதற்காகச் சில நாட்களாய்ச் சிலம்பம் பழகிக் கொண்டு வந்தோம். ஒருநாள் இரவு வெகு நேரம் வரையிற் சிலம்பம் விளையாடிக்கொண்டு இருந்துவிட்டு வீட்டுக்கு வந்த போது, எங்கள் வீட்டுக்கு எதிரேயிருக்கிற மைதானத்திற் கூத்தாடிகள் கோலம் போட்டுக்கொண்டு இராம நாடகம் ஆடிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் வந்தபோது இராமரும் சீதையும், இலக்குமணரும் காட்டுக்குப் போகிற சமயமாய் இருந்தது. அப்போது தசரதர் கௌசலை முதலான எல்லா மக்களும் அழுது புலம்பிக்கொண் டிருந்தார்கள். அதனைக் கண்டவுடனே நான் கனகசபையைப் பார்த்து, "அந்தப் பொல் லாத கைகேயியினுலே இராமர் பட்டத்தை இழந்து காடு போக வும், அதனுல் எல்லா மக்களும் மனமுருகி வாடவும் நேரிட் டிருக்கின்றதே! இந்த ஒழுங்கற்ற போக்கைப் பார்த்துக் கொண்டு நாம் சும்மா இருப்பது அறமா?" என்று கேட்க, அவ னும் "இந்த நேர்மையற்ற போக்கைத் தடுக்க முயற்சி செய்யா மல் நாம் சும்மா இருப்பது அழகன்று" என்ருன்.

நானும் அவனும் மற்றப் பிள்ளைகளும் எங்கள் கைகளி லிருந்த சிலம்பங் கழிகளுடனே வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்த மக்களின் தலைமேல் ஏறி மிதித்துக்கொண்டு போய் நாடகசாலைக்குள் நுழைந்து விட்டோம். அங்கே தன் பிள் ளைக்கு முடி சூட்டுதல் ஆகுமென்று அகக்களிப்புடன் இருந்த கைகேயியை வளைத்துக்கொண்டு எங்கள் கை சலிக்கிறவரை யில் அடித்தோம். அவள், "பரதனுக்குப் பட்டம் வேண்டாம்! வேண்டாம்!!" என்று சொல்லிக்கொண்டு ஓட்டம் பிடித்தாள் அப்போது கூனி அகப்பட்டிருந்தால் அவளை எமலோகத்துக்கு அனுப்பியிருப்போம். அவளுடைய நல்வினைப் பயனுல் அகப் படாமல் தப்பித்துக்கொண்டாள். காட்டுக்குப் போகிற இராம ரிடம் போய் நகரத்துக்குத் திரும்பும்படி சொன்னோம்.

அவர், "தந்தை மொழியைக் காப்பாற்றுவதற்காக நான் காட்டுக்குப் போகவேண்டியது கடமை" என்றார். நீர் போனால் காலை ஒடித்துவிடுவோமென்று வழிமறித்துக்கொண்டு அவருக்கு அறநெறியை எடுத்துக்காட்டி மெய்ப்பித்தோம். எப்படி என்றால், "சும்மா இருந்த உம்மை உம்முடைய தகப்பனார் அழைத்து, உம்மைப் பட்டங்கட்டிக் கொள்ளும்படி சொல்லி, நீரும் அதற்கு உடன்பட்டு, ஊரெங்கும் முரசறைவித்த பிற்பாடு உமக்குக் கொடுத்த நாட்டைப் பரதனுக்குக் கொடுக்க அவருக்கு அதிகாரம் உண்டா? அப்படி அவர் கொடுத்திருந்தால் அது பொய்யல்லவா? உமக்கு முடி சூட்டுதல் நிகழ்ந்தாற்றான் நும் தந்தையாருடைய உண்மை நிலைக்கும்.

'என்னே அரச ரியற்கை இருந்தவா
தன்னே ரிலாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தாற் பிழையாதோ மெய்யேன்பார்?'

என்று கம்பரும் சொல்லியிருக்கிறபடியால் ஊருக்குத் திரும்பும்" என்றேன். இராமர் நான் சொன்ன வாய் நியாயத்தைப் பார்க்கிலும் தடியடி நியாயத்துக்கு அஞ்சி உடனே நகரத்திற்குத் திரும்பினார். நான் வசிட்டர் முதலானவர்களை அழைத்து இராமருக்கு முடி சூட்டுவித்தேன். இவ்வாறு இராமாயணம் ஏழு காண்டத்தையும் ஒன்றரைக் காண்டத்துள் அடக்கி, இராமரும் அவருடைய தம்பியும் சீதையும் காட்டுக்குப் போகாமலும், தசரதர் இறவாமலும், இராவணன் சீதையைச் சிறையெடுத்தான் என்னும் பழிச்சொல் இல்லாமலும், இராமர் இராவணாதிகளைக் கொன்றார் என்ற பழிச்சொல் இல்லாமலும், சிறுபிள்ளையாகிய பரதன் அரசாட்சிச் சுமையைத் தாங்கி வருந்தாமலும் செய்து, பிரதாப முதலி என்னும் பெயரை நிலை நிறுத்தினேன்.

# கோயில் இல்லா ஊர்.

"கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டா" என்ருள் ஔவை மூதாட்டி. "அடடா, இப்படியும் சொல்லி மூட நம்பிக்கையை வளர்க்கலாமா?"

"ஆஸ்பத்திரி இல்லா ஊரில்...பள்ளியில்லா ஊரில்...ஆறு இல்லா ஊரில் குடியிருக்கவேண்டா என்றல்லவோ ஔவை மூதாட்டி சொல்லியிருக்கவேண்டும்" என்று கூறி, தீட்டிய மரத்திலேயே கூர் பார்ப்பது போல் ஔவையாருக்கே அறிவு போதிக்கின்றனர் சில அன்பர்கள்.

கவிதையின் குறிக்கோளை அது தோன்றிய காலத்தின் சூழ்நிலையில் வைத்தே நிச்சயிக்கவேண்டும். அப்படியின்றிப் படிப்போரின் காலத்துச் சூழ்நிலைக்குச் சாதகமாகப் படிக்கப் படும் பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று வாதாடுவதும், அப்படி எழுதப்படவில்லை என்பதற்காகப் பண்டைக் கவிஞரை வசைபாடுவதும் மூடத்தனமல்லாமல் முரட்டுத்தனமுமாகும்.

பண்டைநாளில் கோயில்கள் மக்களின் அகத்தூய்மைக்கே யன்றிப் புறத்தூய்மைக்கும் பெரிதும் பயன்பட்டன. தமிழ் நாட்டிலுள்ள மிகப்பழைய காலத்துக் கோயில்களெல்லாம் ஆற்ருேரங்களிலும் மலைகளிலும் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிருேம். இறை வழிபாட்டில் நம்பிக்கையுடையோர் விடியற்காலையிற் படுக்கை விட்டெழுந்து ஆற்று நீரில் மூழ்கிக் குளித்து உடலையும் உடையையும் தூய்மையாக்கிக் கொள்வர். புறத்தூய்மை பெற்றபின்னர் அகத்தூய்மை பெறுவதற்காக நல்ல நல்ல எண்ணங்களை எழுப்புகின்ற ஞான மார்க்கப் பாடல்களைத் தமிழ்ப் பண்ணேடு பொருந்தப் பாடிக் கொண்டு ஆலயங்களைச் சுற்றி வருவர். இது ஆற்ருேரத்தில் வாழ்ந்த மக்களின் ஆலய வழிபாட்டு முறையாகும்.

அப்படியே, மலைக்கோயில் உள்ள ஊர்களில் தெய்வபக்தி உள்ளவர்கள் விடியற்காலையில் ஆற்று நீரிலோ மலை அருவி

யிலோ இரண்டுமில்லா ஊராயின் வீட்டிலோ குளித்துவிட்டு அழுக்கற்ற ஆடை அணிந்து, பாவம்—பழுதற்ற சிந்தனைகளை எழுப்பும் பாடல்களைப் பாடிக்கொண்டு இறைவழிபாட்டுக்கென மலைமேல் ஏறுவர்; அல்லது பலமைல் சுற்றளவிற்குப் பரந்து கிடக்கும் மலையடிவாரத்தைச் சுற்றிவருவர்.

பாடுவோர் வாயினிக்கும் கேட்போர் செவியினிக்கும் தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு, விடியற் காலையில் இளங் குளிர்காற்று உடலுக்கு இன்பந்தர அணியணியாக மலையிலேறும் அல்லது மலையடிவாரத்தைச் சுற்றிவரும் பழங்காலப் பக்தர்களை அழுக்கு நெஞ்சற்ற மக்கள் இன்றும் அகக் கண்களாற் காணலாம்.

கோயிலைப் பன்முறை சுற்றிவருவதும் இறைவன் முன்பு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுவதும் தெய்வ பக்திக்காக மட்டுமல்ல, தேகப்பயிற்சிக்காகவும் வகுக்கப்பட்ட திட்டங்களாகும்

ஔவை மூதாட்டி 'கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டா' என்ற பாடல் எழுதிய காலத்தில் ஸ்தல யாத்திரைகள் காரணமாக அன்றி, ஓர் ஊர் மக்கள் மிகத் தொலைவிலுள்ள மற்றோர் ஊருக்குச் செல்லும் வழக்கம் இருக்கவில்லை.

அந்தக்காலத்தில் மாட்டு வண்டியும் குதிரையுமே போக்கு வரத்துச் சாதனங்கள். ஆனால் அந்தச் சாதனங்களை உல்லாசச் சவாரிக்கும் ஊர் சுற்றிப் பார்ப்பதற்குமன்றி, ஸ்தல யாத்திரைக்காக உபயோகிக்கக் கூடாதென்பது சமய சம்பிரதாயம். ஆகவே, யாத்திரீகர்கள் காணவிரும்பும் ஸ்தலம் பல நூறுமைல் தொலைவில் இருப்பினும், பாதசாரிகளாகவே பலவாரங்கள் அல்லது பலமாதங்கள் நடந்து செல்வது வழக்கம். அந்நாளில் ஸ்தல யாத்திரீகர்கள் தனியே செல்வதில்லை; பலபேராகக் கூடிச் சேர்ந்து சென்றனர். அப்படிச் செல்வதால் வழி நடக்கும் களைப்புத் தெரியாது; வழிபறிக் கள்வரின் பயம் இருக்காது. யாத்திரீகர்கள் வழியிலுள்ள ஊர்கள்தோறும் தங்கித் தங்கிச் செல்வர். அதனால், தங்கும் ஊரில் உள்ள தமிழ் மக்களோடு யாத்திரீகத் தமிழர்கள் உரையாடவும்

உறவுகொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தமிழகத்தின் வட கோடியிலுள்ள தமிழர்கள் தென்கோடியிலுள்ள குமரியில் தீர்த்தமாடச் செல்வதும், தெற்கெல்லையிலுள்ள தமிழர்கள் வடகோடியில் வேங்கட மலைமீதுள்ள நெடுமாலைத் தரிசிக்கப் போவதும் வழக்கம். அதனால், வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழ் நிலம் முழுவதும் தமிழ்மொழி தழைக்கவும் தமிழர்கள் அடிக்கடி சந்தித்துத் தொடர்பு கொள்ளவும் ஸ்தல யாத்திரை பெரிதும் துணை புரிந்தது.

இந்நாளில். பணம் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்காமல் நாடு முழுவதும் சுற்றுவதற்கும் தொழில் வளர்ச்சிக்குப் பயன் படுவதற்கும் வங்கிகள் துணைபுரிந்து வருகின்றன. ஆனால், ஔவை மூதாட்டி "கோயிலில்லா ஊரில்......" என்ற பாட்டெழுதிய காலத்தில் நாட்டில் வங்கிகள் கிடையா. ஆகவே, பணம் ஒரேயிடத்தில் தங்கியிராமல் தமிழகம் முழுவதும் பரவுவதற்கும், அதன் மூலம் வாணிபம் வளருவதற்கும் பக்தி காரணமாக நிகழ்ந்த ஸ்தல யாத்திரைகளே பெரிதும் பயன் பட்டன.

தமிழ் மக்களிடையே ஒரேவிதமான பண்பாடும் பழக்க வழக்கங்களும் நிலவுவதற்கு ஸ்தல யாத்திரை நன்கு பயன்பட்டது.

இந்த ஸ்தல யாத்திரைக்கு மக்களை ஊக்கப்படுத்தி உற்சாகமூட்டும் சாதனங்களாகவே இருந்தன ஸ்தல புராணங்கள்.

கோயில்கள் தோன்றியிராவிடில், ஸ்தல புராணங்கள் எழுதப்பட்டு ஸ்தல யாத்திரைகள் நிகழ்ந்திராவிடில், இன்று நாம் காணும் சிறந்த நகரங்களை இழந்திருப்போம். திருத்தணி, திருப்பதி, திருக்காளத்தி, பழநி, திருவரங்கம், காஞ்சி, திருவண்ணமலை, திருவாரூர் போன்ற நூற்றுக்கணக்கான நகரங்கள் அங்குள்ள கோயில்களை யொட்டியே உருவாயின என்பதை மறக்கக்கூடாது.

ஏனைய மாகாண மக்களிலும் தமிழ் மக்கள் அதிக நாகரிக முள்ளவர்களாகவும் கலையறிவுடையவர்களாகவும் இருப்பதற்

குக் காரணம் இந்நாட்டுக் கோயில்கள் பயன்படுத்தப்பட்ட முறையே ஆகும்.

கோயிற் சுவர்களிற் கல்வெட்டுச் செய்திகள் இருப்பதைக் காணலாம். புலவர்களின் தொண்டு, அரசர்களின் வீரம், வள்ளல்களின் கொடை ஆகிய சிறப்புக்குரிய செய்திகள் எல்லாம் அந்தக் கல்வெட்டுக்களிற் பொறிக்கப்பட்டிருப்பதை நாம் படிக்கலாம். வரலாற்றுச் செய்திகளை அறியக் 'கேள்வி'யும் ஒரு சாதனமாகும். அதாவது, வாய்வழியாகச் சொல்லிச் செவி வழியாகக் கேட்பது. ஆனால் அதில் உண்மையை மறைப்பதற்கும் பொய்யைப் புகுத்துவதற்கும் இடமுண்டு. வரலாற்றுச் செய்திகளை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தாலும் அதில் இடைச் செருகல் ஏற்படச் சந்தர்ப்பமுண்டு. ஆனால் கல்வெட்டுச் செய்திகளில் இந்தத் தவறுகள் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லையல்லவா?

மற்றும் வரலாற்றுச் செய்திகள் ஓலைச் சுவடிகளில் இருந்தால், அந்தச் சுவடிகள் இருக்கும் இடத்தைத் தேடிப் பிடித்து வாங்கிப் படிக்கவேண்டிய கஷ்டமிருக்கும். கோயிற் சுவர்களிலுள்ள கல்வெட்டுச் செய்திகள் யாரும் எந்த நேரத்திலும் எவருடைய தயவுமின்றிப் படித்துத் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

ஆம்; தமிழ் நாட்டுக் கோயில்கள் ஆசிரியர் இல்லாமலே பொய் கலவாத வரலாற்றுச் செய்திகளைக் கற்பிக்கக்கூடிய சரித்திரப் பள்ளிகளாகவும் திகழ்ந்தன.

நீதி நூல்கள் எழுதிய ஔவையின் காலத்தில் ஸ்தல யாத்திரீகர்கள்—நாடுவிட்டு நாடு செல்லும் அகதிகள்—தூரதேசங்களுக்குச் செய்தி கொண்டு செல்லும் தூதர்கள்—ஆதரிப்பாரற்ற அங்கவீனர்கள் ஆகியோருக்கு இலவசமாக உணவளிக்கும் அன்ன சத்திரமாகவும் கோயில்கள் பயன்பட்டு வந்தன.

ஊர்ப் பஞ்சாயத்து சபைக்கூட்டம், கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடம், இசையரங்கு, நடன அரங்கு ஆகிய ஊருக்குப்

பொதுவான நிகழ்ச்சிகள் எல்லாம் ஆலய மண்டபங்களிலே நடைபெற்றன.

அந்நியர் படையெடுக்குங் காலத்தில் போர்முனை புகச் சக்தியற்ற முதியோர்—பெண்டிர்—குழவிகள் ஆகியோர் அடைக்கலம் புகும் பாதுகாப்பு ஸ்தலங்களாகவும் ஆலயங்கள் பயன்பட்டன.

அந்நாளில் இவ்வளவு நலன்களும் கோயில்களின் மூலம் கிடைத்ததாற்றான் "கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டா" என்று ஔவையார் கூறினர்.

# ஜப்பானியர் முத்து வளர்த்தல்.

முத்துக் குளித்தலைச் சிறப்புற நடத்தி உலகிற்கு முத்துக்களை வாணிபம் செய்தவர்கள் பண்டைத் தமிழ் மக்கள் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுபட எடுத்துக் காட்டுகின்றன. பாண்டிய நாடு முத்து வாணிபத்தைச் சிறப்பாக நடத்தியது. இன்றும் பாண்டிய நாட்டு மக்கள் முத்தெடுக்கும் தொழிலைக் கைவிட்டிலர்.

ஆனல், தமிழகத்தாரும் முத்தெடுக்கும் தொழிலில் ஈடுபட்ட பின்பும், இயற்கையாகக் கடலில் சிப்பிகளின் வயிற்றில் பிறந்த முத்துக்களையே எடுப்பர். இவர்கள் கடலில் மூழ்கி முத்துச் சிப்பிகளை வெளிக்கொணர்ந்து, அவற்றினைப் பிளந்து உள்ளிருக்கும் முத்துக்களை எடுத்துக்கொள்வர். இவ்வாறு செய்வதால் முத்திருப்பவை இல்லாதவை எனப் பாகுபடுத்தப் பட்டுப் பல முத்துச்சிப்பிகள் பாழாகிப் போகின்றன. முத்தும் தேவையான அளவு கிடைப்பதில்லை. அதனல் முத்துக்களின் விலை அளவுகடந்ததாகிறது.

ஆனல் ஜப்பானிய அறிஞர்கள் சிப்பிகளுக்குச் சேதமின்றி முத்து நிறையக் கிடைக்குமாறு முத்தெடுக்கும் தொழிலை வளர்த்திருக்கின்றனர்.

முத்தை விரும்பாத மக்கள் உண்டா? நம் நாட்டில் இது நவமணிகளுள் ஒன்ருகப் பெருமை பெற்றுள்ளது. விலை உயர்வினல் செல்வர் மட்டும் இதனைப் பெற முடிகிறது. செல்வ மகளிர் முத்தைப் பொன்னுடனும் பிறமணிகளுடனும் சேர்த்து மாலையாகவும் பிற அணிகளாகவும் செய்து அணிதலைத் தமிழகத்தில் இன்றும் காணலாம். மேலும் தமிழ் மருத்துவர் முத்தை நீருக்கிப் பெரும் பிணிகள் பலவற்றைப் போக்குதற்குரிய மருந்தாகப் பயன்படுத்துதல் தொன்றுதொட்டு நம்நாட்டின் வழக்கமாகும். முத்து தமிழகத்துச் செல்வ மகளிரது அழகுமிக்க அணியாகத் திகழ்வது மட்டுமன்றித் தமிழ் இலக்

கியங்களில் இடம்பெறும் பெருமையையும் அடைந்திருக்கிறது.

முத்து பெண்ணுலகம் பெரிதும் உவக்கும் சிறப்புடைய பொருள் என்பதை அறிந்த ஜப்பானியர், இயற்கையாகக் கடல் தரும் அளவுடன் மனம் நிறைவுருமல், வேண்டும் அளவு முத்தை உற்பத்தி செய்ய விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி, இன்று முத்து உற்பத்தி செய்தலை மிகப் பெருந் தொழிலாக ஆக்கி வைத்திருக்கின்றனர். அவர்கள் கண்ணுடி மெழுகு முதலியவற்றைக்கொண்டு செயற்கை முத்துக்கள் உற்பத்தி செய்வதில் முதல் ஈடுபட்டிருந்தனர். எனினும் கடலில் உறையும் சிப்பிகளிடம் வேலை வாங்குவதன் மூலம் இயற்கை முத்துக்களையே செயற்கை முறைகொண்டு மிகுதியாக உற்பத்தி செய்யும் வழியினைக் கண்டனர். அது இன்று ஜப்பானியருக்குப் பெரும் செல்வம் ஈட்டித்தரும் தொழிலாக வளர்ந்திருக்கிறது.

மீ தீவில் டோபா பிரதேசத்துக்கு அருகிற்றுன் முத்துத் தொழில் மிகுதியாக நடைபெறுகிறது. வேனிற் காலத்தில் அங்குள்ள கடற்கரையில் உலாவச் செல்பவர்கள் கடலிலிருந்து ஒருவகைப் பெருமூச்சொலி கேட்டுக்கொண்டிருப்பதை உணரலாம். அது முத்துக்குளிக்கும் பெண்கள் கடல்மட்டத்துக்கு வந்து மூச்சு வாங்குவதால் ஏற்படும் ஒலியேயாகும்.

உலகின் மற்றைய பகுதிகளில் கடலில் மூழ்கும் தொழில்களை ஆண்கள் மேற்கொண்டிருக்க, ஜப்பானில் இதனைப் பெண்களே செய்கின்றனர். ஆண்களுக்கு இருக்கும் ஈரல்களிலும் பெண்களின் ஈரல்கள் குளிரை மிகுதியாகத் தாங்கும் வன்மையுடையனவாதலால் ஜப்பான் நாட்டினர் கடலில் மூழ்கும் வேலையைப் பெண்களுக்கென்றே ஒதுக்கிவிட்டனர்.

ஜப்பானியர் செயற்கை முறையில் இயற்கை முத்துக்களை மிகுதியாக உற்பத்தி செய்யும் முறையைப் பார்ப்போம். பாய் போன்ற தட்டையாகச் செய்யப்பட்ட படகுகளையே ஜப்பானியர் மீன்பிடிக்கவும் முத்தெடுக்கவும் பயன்படுத்துகின்றனர்.

ஒவ்வொரு தட்டைப் படகின் நடுவிலும் குடிசை ஒன்று இருக்கும். படகு கடலில் குறிப்பிட்ட இடம்வரை சென்றபின்பு முத்தெடுக்கும் பெண்கள் கடலிற் குதித்து மூழ்குவர். இப்பெண்கள் மூழ்கும்போது வெள்ளைப் பருத்தியாலான அரையாடை உடுத்திக்கொள்வர். அதாவது இடுப்பில் ஒரு சல்லடம், மணிக்கட்டுவரை கையுள்ள ஒரு சட்டை, தலையில் காதுகளை மூடும்வண்ணம் ஒரு குல்லாய், காலடியில் நன்கு பார்க்கும்படி கண்களைத் தண்ணீரினின்று காக்கும்வகையில் அமைந்துள்ள ஒரு பெரிய கண்ணாடி ஆகிய இவைகளே கடலில் மூழ்கும் பெண்களின் அணிவகை. அவர்கள் வெள்ளைப் பருத்தி உடுப்பு அணிவது சுறுக்களின் தாக்குதலினின்றும் தப்புவதற்கும் சுறுக்கள் வெள்ளை நிறத்தைக் கண்டு அஞ்சுவதற்குமாம்.

இவ்வாறு கடலில் மூழ்கும் பெண்ணை ஜப்பானியர் அமா [Ama] என்று அழைக்கின்றனர். அமாப் பெண்களே கடலில் மூழ்கி முத்துச் சிப்பிகளைத் திரட்டுகின்றனர். அப்பெண்கள் பெரும்பாலும் இருபது ஆண்டினராகவே காணப்படுகின்றனர். அவர்களுள் மிகச்சிலரே இருபதாண்டுக்குக் குறைந்தவராகவும், நாற்பதாண்டுக்கு மேற்பட்டவராகவும் இருக்கின்றனர்.

கடலில் மூழ்கும் பெண்கள் தங்களுடன் ஒரு மரத்தொட்டியையும் எடுத்துச் செல்வர். இத்தொட்டி கயிற்றால் கட்டப்பட்டு கடல் மட்டத்திலுள்ள படகுடன் பிணைக்கப்பட்டிருக்கும். இத்தொட்டியுடன் மூழ்கிக் கடலின்கீழ்ச் செல்லும் பெண்கள் ஐந்து நிமிஷம் வரை கடலின் அடிப்பாகத்திற் கிடக்கும் முத்துச் சிப்பிகளைப் பொறுக்கி எடுத்து மரத் தொட்டியிற் சேர்ப்பர். இவர்கள் முத்தில்லாத சிப்பிகளையேபொறுக்கி எடுப்பர். பழக்கத்தினால் பெண்கள் சிலர் பத்து நிமிஷ நேரம் கடலடியில் இருப்பர். பின்பு கடல் மட்டத்துக்கு மேலே வந்து மூச்சு விடுவர். இவ்வாறு பலமுறை கடலுள் மூழ்குவதும் மேலே வந்து மூச்சு வாங்குவதுமாக அப்பெண்கள் முத்துச் சிப்பிகளை மிகுதியாகத் திரட்டி வருவர்.

முத்துச் சிப்பிகள் பொதுவாகப் பத்தாண்டுகள் உயிருடன் இருக்கும்; மூன்று நான்கு ஆண்டுகள் வளர்ந்துள்ள சிப்

பிகளையே முத்துக் குளிக்கும் பெண்கள் பொறுக்கிக்கொண்டு வருவர். முத்துத்தொழில் அலுவலகத்தார் அம்மகளிரால் கொண்டுவரப்பட்ட முத்துச் சிப்பிகளைப் பழுதுபடாமல் மெல் லத் திறந்து, முத்துச்சிப்பி ஓட்டினுற் செய்யப்பட்ட சிறிய மணிகளை ஒரு சிப்பிக்கு ஒன்று வீதம், சிப்பியின் தசைநடுவே வைப்பர். இத்தொழிலில் இதுதான் மிகக்கடினமான வேலை யாகும். சிறிது தவறினுலும் அச்சிற்றுயிர் மாண்டுபோகும். எனவே, மிகுந்த திறமையும் பழக்கமும் உடையவர்களே இவ் வேலையைச் செய்கின்றனர். இவ்வாறு சிறுமணி புகுத்தப் பட்ட சிப்பிகள் மீண்டும் கடலுக்குள் அனுப்பப்படுகின் றன. அதாவது, இரும்புக் கம்பி வலையாற் செய்யப்பட்ட கூடு ஒன்றில் இச்சிப்பிகளை இட்டு, ஒரு மூங்கிற் கழியில் அந்த இரும்புக் கம்பி வலைக் கூட்டைப் பிணைத்துக் கடலில் சில அடிகள் ஆழத்திற் கிடக்குமாறு தொங்க விடுவர். ஒரே மூங்கிற் கழியில் பல கம்பிவலைக் கூடுகள் கட் டித் தொங்கவிடப்படும். இங்ஙனம் அப்பகுதிக் கடலோரத் தில் வரிசையாக நீள மூங்கிற் கழிகள் மிதந்துகொண்டிருக்கக் காணலாம்.

இவ்வண்ணம் கடலாழத்தில் விடப்படும் முத்துச் சிப்பி கள் இரண்டு முதல் நான்காண்டுகள் வரை கடல் நீரிலே இருக் கும். நான்காண்டு காலத்தில் சிப்பிக்குள் வைக்கப் பட்ட சிறுமணி நல்ல முத்தாக மாறிவிடும். சிப்பிக்குள் இந்தச் சிறுமணி வைக்கப்பட்ட பின்பு அதன் தசை யிலிருந்து ஒருவகையான பால் கசிந்து அந்த மணியில் ஒட் டிக்கொள்ளும். இவ்வாறு நான்காண்டுகள் வரை கசியும் பால் அந்த மணிமீது ஒட்டிக்கொள்வதால் அம்மணி நல்ல ஒளி பொருந்திய முத்தாக மாறிவிடும். இரண்டாண்டுக ளில் சிப்பியைத் திறந்தால் முன்பு வைக்கப்பட்ட மணி சிறு முத்தாக மாறியிருப்பதைக் காணலாம். நான்காண்டுகளில் முதிர்ந்த முத்துக்கள் கிடைக்கும். முத்துக்கள் எடுக்கப்பட்ட பின்பு அச்சிப்பிகள் குறித்த காலம் வரை கடல் நீரிலிட்டு வளர்க்கப்படும்.

சிப்பிகளிலிருந்து முத்துக்களைப் பெயர்த்தெடுப்பது மிக நுண்ணிய வேலையாகும். சிறிது தவறினாலும் சிப்பி உயிர் இழக்கும். எனவே, அந்த வேலையையும் பழக்கப்பட்டவர்களே செய்வர். பின்பு முத்துக்களை வகை பிரிக்கும் வேலை நடைபெறும். நல்ல ஒளியும் நிறமும் முதலில் கவனிக்கப்படும். உருவம் இரண்டாவதாகக் கவனிக்கப்படும். நல்ல உருண்டை உருவம் உடையனவே சிறப்புடையனவாக மதிக்கப்படும். பெரியவை சிறியவை என்னும் உருவ வேறுபாடு ஈற்றில் கவனிக்கப்படுவதாகும். நிறத்தில் சிறிது செம்மை கலந்த வெண்மை முதலாவதாகவும், வெள்ளி போன்ற நிறம் இரண்டாவதாகவும், வெண்மை நிறம் மூன்றாவதாகவும், பழுப்பு நிறம் இறுதியானதாகவும் கருதப்படும்.

முத்துச் சிப்பிகள் மிகவும் மென்மை வாய்ந்தவை. கடல் நீரினின்று வெளியே எடுக்கப்படும் முத்துச் சிப்பிகள் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் மீண்டும் கடல் நீருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இல்லையெனின் அவை அனைத்தும் மாண்டுவிடக் கூடும். அந்த இருபத்து நான்கு மணி நேரத்திலும் அவற்றுள் நூற்றுக்கு இருபது வீதம் மாண்டுபோகுமாம். இதனை யுணர்ந்த ஜப்பானியர் முத்துச் சிப்பிகளைத் திரட்டி வந்து உடனே அவற்றின் தசையில் சிப்பி மணியைச் செருகிவைப்பர். இவ்வாறு செருகி வைத்தல் முத்துச் சிப்பிக்குப் பெரிய துன்பம் தருவதன்று; எனினும் மிகுதியாக முத்துச் சிப்பிகளைத் திரட்டிவந்து அவற்றின் தசையில் சிறு மணிகளைச் செருகும் வேலை விரைந்து நடைபெருவிடின் அவற்றுள் பல சிப்பிகள் மாண்டுவிடும்.

முத்துச் சிப்பிகள் கடல் நீரில் இருக்கும் போதும் நீரின் தட்பநிலை 44 டிகிரி அளவுக்குக் குறைந்துவிடுமாயின் அவை மாண்டுபோகும். இவ்வாறு கடல்நீர் பெரும்பாலும் டிசம்பர் முதல் பிப்ரவரித் திங்கள் வரை குளிர்ந்துவிடுதல் இயற்கை. இந்தக்காலத்தில் முத்துத் தயாரிக்கும் அலுவலாளர் வெப்ப நீரோட்டம் இருக்கும் இடமாகத் தேடிப்பார்த்து அவ்விடங்களுக்கு இவற்றை இழுத்துச் செல்வர். சில ஆண்டுகளில் மிக வெப்ப நீரோட்டம் ஏற்படுதலும் உண்டு. இந்த நீரோட்டம்

கடலில் எங்கேனும் ஓரிடத்தில் நிலைத்து நிற்குமாயின், அங்குக் கடலடியிலுள்ள முத்துச் சிப்பிகளுட்படக் கடல்வாழ் உயிரினங்கள் அனைத்தும் மாண்டுபோகும். இந்த வெப்ப நீரோட்டம் ஏற்பட்டால் கம்பிவலைக் கூடுகள் இந்நீரோட்டம் இல்லாத இடத்துக்கு இழுத்துச் செல்லப்படும். எனவே, இந்தக் கம்பிவலைக் கூடுகளைப் பயன்படுத்துவதால் குளிர் காலத்தில் வெம்மைப் பகுதிக்கும், வேனிற் காலத்தில் குளிருள்ள பகுதிக்குமாக இவற்றை இழுத்துச் செல்வதன்மூலம் முத்துச் சிப்பிகள் மாண்டுபோகாமல் காக்கப்படுகின்றன. இவைதவிர, நல்லநீரும் முத்துச் சிப்பிகளின் உயிருக்கு இறுதி உண்டாக்குவதாகும். மழைக் காலத்தில் பெருமழை பெய்து கடலில் முத்துச்சிப்பிகள் உள்ள பகுதிகளில் நன்னீர் வெள்ளம் போய்ச் சேர்ந்தால் முத்துச் சிப்பிகளின் உயிர்களுக்கு இன்னல் விளையுமாதலால் உடனே கம்பிவலைக் கூடுகள் கடலில் அதிக ஆழத்தில் இறக்கி விடப்படும். இம்முறையாலும் பயனின்றி முத்துச் சிப்பிகள் சோர்ந்து காணப்படுமாயின் அவையுள்ள கம்பிவலைக் கூடுகளை மூங்கிற் கழிகளிலிருந்து வெட்டிக் கடலடிக்குப் போய்ச்......சேருமாறு செய்யப்படும். கடலடியிலும் பெரிய மீன்கள் நண்டுகள் போன்றவை முத்துச் சிப்பிகளை உண்ணுமாயினும் கம்பிவலைக் கூடுகளில் உள்ளவற்றை அவை நெருங்க முடியாதன்றோ? கம்பிவலைக் கூடுகள் திங்களுக்கு இருமுறை கவனித்துச் செப்பம் செய்யப்படுகின்றன. எனினும், இவற்றாலும் சில சமயங்களில் முத்துச் சிப்பிகளுக்கு இடையூறு நேரிடுவதும் உண்டு.

இவ்வாறு பலவகை இடுக்கண்களுக்கிடையே இத்தொழில் நடைபெறுவதாலும் சில சமயங்களில் பல முத்துச் சிப்பிகள் மாண்டு போவதாலுமே செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் இந்த இயற்கை முத்துக்களும் உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. ஏழைமக்கள் பயன்படுத்தக் கூடியவாறு இந்த முத்துக்கள் கிடைப்பதில்லை.

ஆண்டுதோறும் ஜூன் முதல் ஆகஸ்ட் திங்கள்வரை முத்துச் சிப்பிகள் திரட்டிச் சிறுமணி புகுத்தும் வேலை செய்யப்படுகிறது. இவ்வாறு முத்துச் சிப்பியைப் பிடித்து அதன் தசை

யில் மணி செருகி முத்தாக்கும் கலையைச் சீனரே முதலிற் கண்டறிந்தனர். பழங்காலத்தில் ஒரு சீனர் முத்துச்சிப்பி ஒன்றைப் பிடித்து வந்து அதன் தசையில் புத்தரின் சிறிய உருவம் ஒன்றை வைத்து வளர்த்தனராம். சிறிது காலம் கழிந்த பின்பு அந்தப் புத்தர் உருவம் முத்தாக மாறியிருந்தது. அதனை அறிந்த மிக்கி மோட்டோ என்னும் பெயருடைய ஜப்பானியர் இருபத்து மூன்று ஆண்டுகள்வரை இடைவிடாமல் முத்துச் சிப்பிகளின் வாழ்க்கைபற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்து 1894இல் செயற்கை முறையில் இயற்கை முத்துக்களை உற்பத்தி செய்வதைக் கண்டறிந்தார். ஆனால், சரியான உருண்டை வடிவத்தில் உற்பத்தி செய்ய அவரால் முடியவில்லை. அதன் பின்பு மிக்கி மோட் டோவின் முறையைப் பின்பற்றி முத்து உற்பத்தி செய்யும் தொழிலை ஜப்பானியர் மிகுதியாக வளர்த்தனர். 1916ம் ஆண்டில் உருண்டை வடிவத்தில் முத்துக்கள் உற்பத்தி செய்வ...தையும் அறிந்தனர். 1932-33ல் நானூற்றுவர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தத் தொகை அரை மடங்காகக் குறைந்துவிட்டது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் முத்துக்கள் பலவகை உருவங்களுடனும் நல்ல ஒளியுடனும் காணப்படுகின்றன. சிப்பி எடுத்தல் முதல் முத்துத் தொடர்பான மென்மை வாய்ந்த எல்லா வேலைகளையும் பெரும்பாலும் ஜப்பானிய மெல்லியலாரே செய்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

# மகாகவி பாரதியார்.

பாரதியார் சுந்தர ரூபன்; மாநிறம்; ஐந்தரை அடிக்குக் கொஞ்சம் அதிகமான உயரம் அவருடைய மூக்கு மிகவும் அழகானது. அவருடைய கம்பீரமான முகத்துக்கு அளந்து அமைக்கப்பட்டதைப்போலிருக்கும் அந்த அழகிய நாசி. ஸீஸர், இராசகோபாலாச்சாரியா ருடையவைபோலக் கருட மூக்கன்று. ஸீஸரின் மூக்கு நடுவில் உயர்ந்து, நுனியில் கூர்மையாகி, கண்டவர்களைக் கொத்துவது போலத் தோன்றும். பாரதியாரின் மூக்கு கடைசல் பிடித்ததுபோல இருக்கும். நீண்ட நாசி. அந்த நீளத்தில் அவலட்சணம் துளிகூட இருக்காது.

பாரதியாரின் கண்கள் செவ்வரி படர்ந்த செந்தாமரைக் கண்கள். இமைகளின் நடுவே அக்கினிப்பந்துகள் ஜ்வாலிப்பது போலப் பிரகாசத்துடன் விளங்கும். அந்தக் கண்களை எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தாலும் தெவிட்டாது.

அவருடைய நெற்றி பரந்த நெற்றி. நெற்றியின் இரண்டு கங்குகளிலும் நிலத்தைக் குடைந்துகொண்டு போயிருக்கும் கடலைப்போல முகம் தலைமயிரைத் தள்ளிக் குடைந்துகொண்டு போயிருக்கும். கங்குகளின் மத்தியில், முகத்தின் நடு உச்சியில். மயிர் கொஞ்சம் நிமிர்ந்து நிற்கும். நெற்றியிலே இந்தச் சேர்மானம் அவருக்கு வர்ணிக்கமுடியாத அழகைக் கொடுத்தது. பாதிக்கு அதிகமாக அவர் தலை வழுக்கை.

இந்த வழுக்கையை மறைத்து மூடுவதற்காக கங்குக் கேசத்தை இரண்டு பக்கங்களிலுமிருந்து உச்சித் தலைக்குக் கொண்டுபோய் அதைப் படியச்செய்யும் பாரதியாரின் கவலை நிரம்பிய முயற்சி சிறு பிள்ளைகளுக்குச் சிரிப்பை உண்டாக்கலாம். தலை மயிரைச் சிங்காரிப்பதில். அவர் அரைமணி நேரத்திற்குமேற் செலவழிப்பார். நாளுக்கு ஒரு மாதிரியாகத் தலை மயிர் அணிவகுப்பு.

பாரதியாருக்கு மீசையுண்டு. அது பார்க்க மிகவும் அழகாக இருக்கும். கண்ணைக் குத்தும் கெய்ஸர் மீசையன்று; கத்தரிக்கோல் பட்ட தருக்குமீசையுமன்று; தானாக வளர்ந்து பக்குவப்பட்டு அழகும் அட்டஹாசமும் செய்த மீசை. அவரது வலக் கை எழுதாத நேரங்களில் அநேகமாய் மீசையிலிருக்கும். மீசையை முறுக்குவதாகத் தோன்றாது, மீசைக்கு "டிரில்" பழக்கிக் கொடுப்பதுபோலத் தோன்றும்.

சில சமயங்களில் தாடி வைத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவருடைய வாழ்க்கையில், பெரும்பகுதி மீசைமட்டுந்தானிருந்தது. ஒரே ஒரு சமயந்தான் மீசையில்லாமலிருந்தார் என்பது என் நினைவு. அவருடைய நடுநெற்றியில் சந்திரவட்டத்தைப்போலக் குங்குமப்பொட்டு எப்பொழுதும் இருக்கும். குங்குமப்பொட்டு இருப்பதில் அவருக்கு மிகக் கவனம்.

இடுப்பிலே "தட்டுச் சுற்று" வேஷ்டி. சாதாரணமாய்ச் சொல்லப்படும் "சோமன்கட்டு" அவர் கட்டிக்கொள்வதில்லை. சில சமயங்களில் "சோமன் கட்டு" கட்டிக்கொண்டிருந்து அலுத்துப்போய் அதை விட்டுவிட்டார்.

உடம்பிலே எப்பொழுதும் ஒரு பனியன் சட்டை இருக்கும். வேஷ்டிகளையோ சட்டைகளையோ அவர் சலவைக்குப் போட்டதைநான் பார்க்கவில்லை. யாராவது ஒரு பக்தனோ வீட்டு வேலைக்காரியோ துவைத்துக் காயவைத்திருப்பார்கள். பனியனுக்கு மேலே ஒரு சட்டை; அது கிழிந்துமிருக்கலாம். அநேகமாய் 'பித்தான்' இருக்காது. அதற்குமேல் ஒரு கோட்டு. அதற்கு மரியாதைக்காக ஒரு பித்தான் போட்டுக் கொள்வார்.

சட்டையின் இடப் பக்கப் பித்தான் துவாரத்தில் ஏதாவது ஒரு புதிய மலர் செருகி வைத்துக்கொள்ளுவார். ரோஜா, மல்லிகைக் கொத்து முதலிய மணங்கமழும் பூக்கள் அகப்பட்டால் நல்லதுதான். இல்லாவிட்டால் வாசனையில்லாத புதுப்பூ எது அகப்பட்டாலும் போதும். வேப்பம் பூவாயிருந்தாலும்

பரவாயில்லே. "நாள் மலர்" ஒன்று அந்தப் பித்தான் துவாரத்தில் கட்டாயமாக இருந்துதான் ஆகவேண்டும்.

இடக் கையில் ஒரு நோட்டுப் புத்தகம், சில காகிதங்கள் ஒரு புத்தகம்---இவை கண்டிப்பாக இருக்கும். கோட்டுப் பையில் ஒரு பென்சில் இருக்கும். பவுண்டன் பேஞ அவரிடம் தரிப்பது இல்லேயோ என்னவோ, பவுண்டன் பேஞவிஞல் அவர் எழுதியதை நான் பார்க்கவில்லே, எப்பொழுதும் பென்சில் எழுத்துத்தான்.

எழுத்து குண்டு குண்டாக இருக்கும். ஒரு எழுத்தின் மேல் இன்ஞெரு எழுத்துப் படாது; உராயவும் மாட்டாது. க வுக்கும் ச வுக்கும் வித்தியாசமில்லாமல் நம்மில் பலர் எழுதுகிருர்களே அத்தகைய அலட்சிய புத்தியைப் பாரதியாரின் எழுத்திற் காணமுடியாது. ஒற்று எழுத்துக்குமேல் நேர்த்தியான சந்தனப் பொட்டைப்போலப் புள்ளி வைப்பார். அவர் எழுத்தை அட்சராப்பியாசம் ஆரம்பிக்கும் குழந்தைகள் கூடப்படிக்கலாம். ஒரு வரிக்கும் மற்ஞெரு வரிக்குமிடையே தாராளமாக இடம்விட்டு எழுதுவார். காகிதத்தின் இரண்டு கங்குகளிலும் போதிய இடம் விட்டு எழுதுவார்.

உடை விஷயத்தில் ஒன்று பாக்கி. வடநாட்டுச் சீக்கியர்களேப்போல முண்டாசு கட்டிக்கொள்வதில் அவருக்கு ஆசை அதிகம். அந்தத் தலேப்பாகையுடன் அவர் ஹிந்துஸ்தானி பேசிஞல் அவரைத் தமிழன் என்று யாருமே சொல்ல முடியாது. அவ்வளவு தெளிவான உச்சரிப்பு.

பாரதியாரின் வெளிப்புறப்பாட்டுக்கு இத்தனே அங்கங்களும் தேவை. இவ்வளவோடும் சேர்ந்த குதூகலமான குமரிச் சிரிப்பு. சங்கீத வித்துவான்கள் ரவை புரட்டுவது போலப் பாரதியாரின் சிரிப்பில் அபரிதமாக ரவை புரளும்.

பாரதியார் இடக் காலேக் கூசாமல் தரையில் வைக்கமாட்டார். இடக் கால் பாதத்தில் அவருக்கு முக்கால் பைசா அக

லத்தில் ஆணி விழுந்திருந்தது. சில சமயங்களில் கவனக் குறைவால் அவரின் இடக்கால் கல்லிலோ வேறு கடினமான பொருளிலோ பட்டுவிட்டால் அவர் துடிதுடித்து அந்த இடத் திலேயே சிறிது நேரம் உட்கார்ந்துவிடுவார்.

பாரதியார் குனிந்து நடந்ததே கிடையாது. 'கூனாதே கூனாதே' என்று அடிக்கடி இளைஞர்களிடம் சொல்லுவார். கொஞ்சம் கூடத் தசையே இல்லாத மார்பைப் பட்டாளத்துச் சிப்பாய்போல முன்னே தள்ளிக்கொண்டு தலைநிமிர்ந்து பாடிக் கொண்டே நடப்பதிற் பாரதியாருக்கு மிகப் பிரியம்.

"லா மாஸேய்ஸ், லா ஸாமபர்தே மியூஸ்" என்ற பிரெஞ்சுப்படைப் பெயர்ப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு, அவைகளின் தாளத்திற்கேற்ப நடப்பதிற் பாரதியாருக்குப் பரமஆனந்தம் இந்தப் பாட்டுக்களின் மெட்டுகளைத் தழுவித் தமிழிற் பல பாட்டுக்கள் பாடவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருப் பார். இரண்டொரு பாட்டுக்கள் பாடியுமிருக்கிறார்.

பாரதியார் இருக்கிற இடத்தில் கூட்டத்துக்கு ஒருநாளும் குறைவிருக்காது. கந்துவட்டிக் கடையிற்கூட அவ்வளவு கூட்டம் இருக்காது. குறைந்தது நாலு ஐந்து பேர்களாவது இருப்பார்கள்.

வெளியே புறப்பட்டால் இரண்டொருவரேனும் அவரைப் பின்தொடர்ந்து செல்லாமலிருப்பதில்லை. ஆனால் எட் டத்திலேயே போய்க்கொண்டிருக்கும் இரகசியப் போலிஸாரைப்பற்றிக் குறிப்பிடத் தேவையா?

புதுச்சேரி வீதியிற் பாரதியார் நடக்கும்பொழுது திண்ணையில் உட்கார்ந்திருப்பவர்கள் அநேகமாய் எழுந்து நின்று கும்பிடு போடுவார்கள். அவரும் நின்று பதில் கும்பிடு போட்டு விட்டுச் சிறிதுநேரம் க்ஷேம சமாசாரம் விசாரித்த பின்னர்தான் அந்த இடத்தைவிட்டு நகர்வார்.

புதுச்சேரிக்குப் போயிருக்கிறவர்களுக்குப் "புஸ்" வண்டியைப் பற்றித் தெரிந்திருக்கும். அது ரிக்ஷா வண்டியன்று. சில புஸ் வண்டிகளுக்கு நான்கு சக்கரங்கள் இருக்கும்

அதாவது வண்டியின் முன்புறத்தில் ஒரு சக்கரம் அல்லது இரண்டு சக்கரம் இருக்கும். வண்டியைப் பின்னே இருந்து ஒருவன் தள்ளுவான். புதுச்சேரியில் புஸ் வண்டியைத் தள்ளுப வர்கள் பெரும்பாலும் ஹரிசனங்கள்.

பாரதியார் வெளியே புறப்பட்டுவிட்டால் இந்தப் புஸ் வண டிக்காரருக்கு ஆனந்தம்; பாரதியாருக்கு முன்னே வண்டியைக் கொண்டுவந்து நிறுத்திவிடுவார்கள்; கூலி பேசவும் மாட்டார் கள்; கேட்கவும் மாட்டார்கள். பாரதியாரை நடக்கவும் விட மாட்டார்கள். போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் போனதும் பாரதியார் வாடகைப்பணம் கொடுப்பார்; வாங்கமாட்டார்கள்

"என்னுத்துக்குங்க எனக்குக் காசு" என்பான். "ரூபாய் வேண்டுமோ" என்று சொல்லிப் பாரதியார் சிரிப்பார். "எதுக் குங்க ரூபாய்" என்பான். புஸ் வண்டிக்காரனுக்குக் கட்டிக் கொள்ளத் துணி வேண்டும். வண்டிக்காரனுடைய நெளிவு பாரதியாருக்குத் தெரியும். சிறிது நேரம் சம்பாஷணைச் சல்லா பம் செய்வார். தாம் மேலே போட்டுக்கொண்டிருப்பது பட்டா டையாயிருந்தாலும் சரி, கிழிந்த அங்கவஸ்திரமாயிருந்தாலும் சரி, சரிகைத் துப்பட்டாவாயிருந்தாலும் சரி, அது அன்றைக்கு புஸ் வண்டிக்காரனுக்குப் "பிராப்தி".

பாரதியாருக்கு அங்க வஸ்திரமில்லையே என்று பரிவு கூர்ந்து யாரேனும் நண்பர் அவருக்குப் புதிய அங்கவஸ்திரம் கொடுத்தால் அதற்கும் மேற்சொன்ன கதிதான். புதுச் சேரி புஸ்வண்டிக்காரர்கள், அதிலும் பாரதியார் குடி யிருந்த வட்டாரத்திலிருந்த புஸ்வண்டிக்காரர்கள் கொடுத்து வைத்தவர்களாகத்தான் இருக்கவேண்டும். பாரதியாருக்குத் துணிப்பஞ்சம் சட்டைப்பஞ்சம் ஏற்படலாம், அவர்களுக்கு ஏற்படாது. ஏழை ஹரிசனங்கள் என்ற காரணத்தால் அவர்களிடம் பாரதியாருக்கு அளவுகடந்த அன்பு.

வீதியில் நடந்துகொண்டிருக்கும் போதும் பாரதியா ரின் மனம் அருமையான விஷயங்களில் சஞ்சரித்துக்கொண்

டிருக்கும். திடீர் திடீரென்று நெருப்புப்பொறி பறப்பதுபோல் அவரது மூளையிலிருந்து அற்புதமான கருத்துக்கள் தெறித்துவரும்.

ஒரு சமயம் அவரும் நானும் காலை வேளையிலே சீனிவாசாச் சாரியாரின் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தோம். வழியிலே பிரெஞ்சு இலக்கியத்தின் பெருமையையும் விக்டர் ஹ்யூகோ அவர்களின் மேதையையும் பற்றி வெகு நேர்த்தியாக எனக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டே போனார். திடீரென்று திண்ணையிலிருந்த ஒரு பையன் "இளமையிற் கல்" என்று படித்த குரல் கேட்டது. உடனே பாரதியார் "முதுமையில் மண்" என்றார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. மேதையென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்று எண்ணித் திகைத்துப்போனேன்.

பாரதியார் சொல்லுகிறார் "ஓய் உமக்குத் தருக்க சாஸ்திரப் பயிற்சி இல்லைப் போலிருக்கிறது! இளமையில் கல்லாயிருப்பவன் முதுமையிற் கவனிப்பாரற்று மண்ணாவது நிச்சயம். இதைப்பற்றி நீர் ஏன் அதிசயப்படுகிறீர். இரண்டாயிரம் வருஷங்களாக நமது மூதாதைகள் இளமையில் கல்லாகவும் முதுமையில் மண்ணாகவும் இருந்திருந்து போய்விட்டார்கள். நம் காலத்திலே நமக்கு எதை எடுத்தாலும் திகைப்பும் திண்டாட்டமுமாக இருக்கிறது. இளமையில் தக தகவென்று மின்னும் கோடி சூரியப் பிரகாசத்துடன் நமது குழந்தைகள் ஜ்வலிக்கவேண்டும். அப்படி ஜ்வலித்தால் அவர்கள் முதுமையில் மண்ணாக மாட்டார்கள்; உலகத்தார் அவர்களை மதிப்பார்கள்; பிற் சந்ததியார்கள் போற்றுவார்கள். இல்லாவிட்டால், நாம் இப்பொழுது பழி சுமத்துவதுபோல, நம்மை நம் பிற்சந்ததியார்கள் தூற்றுவார்கள்."

# அஞ்சலி.

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை தென்னிந்தியாவில் நாகர்கோவிலுக்கு அருகிலுள்ள தேரூரில் 1876ம் ஆண்டில் பிறந்தார்.

இவரியற்றிய பாடல்கள் எளிமையும் இனிமையும் மிகுந்தன. "ஆசிய சோதி", "மலரும் மாலையும்", "இளந்தென்றல்", "மருமக்கள் வழி மான்மியம்" முதலியன இவர் செய்த நூல்கள்.

"அஞ்சலி"ப் பாடல்கள் "மலரும் மாலையும்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டன.

1. **நெஞ்சம் தடுமாறி அழியும்** – மனம்செய்வது எது என்று அறியாது மயங்கி வருந்தும். **நேர்ந்துகொள் பணி** – ஏற்றுக் கொண்ட வேலைகள். **ஆழி** – கடல். **மதுரகீதம்** – இனிமையான இசை. **மந்தமாருதம்** – மெல்லிய தென்றற் காற்று. **வேனில்** – கோடைக்காலம்; இங்கே வசந்த காலத்தைக் குறித்து நின்றது.

2. **பன்னரிய** – (விளக்கிக்) கூறமுடியாத. **அதனோடு என்னிசையும் கலந்து ஒழுக** – அந்தப் பாட்டோடு நானும் சேர்ந்து பாட; சேர்ந்து பாடுவோர் குரலொற்றுமை உடையவராய் இருத்தல்வேண்டும்; இல்லையேல் இசை கெட்டுவிடும். அதுபோல நாமும், இறைவன் திருவுள்ளத்தை அறிந்து அதற்கு மாறுபடாதவாறு ஒவ்வொரு செயலையும் செய்தல்வேண்டும். இவ்வல்லமை ஞானியர்க்குத் தான் உண்டு.

# குசேலோபாக்கியாநம்.

## குசேல உபாக்கியாநம் - குசேலரது கதை.

இந்நூல் வல்லூர் தேவராஜபிள்ளை இயற்றியதாக அச்சிட்ட பிரதிகளிற் காணப்படுகிறது. இதனை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இயற்றினாரென்று உ. வே. சாமிநாதையர் கூறுவர். அவர் கூறுவதாவது:- தேவராஜபிள்ளை குசேலோபாக்கியாநத்தைப் பாடி வருவதையும் அதனைச் செய்ய முடியாமையினால் வருந்துவதையும் சிலரால் அறிந்த பிள்ளையவர்கள், "உங்களுக்குக் குசேலோபாக்கியாநத்தைச் செய்யுளுருவிற் பார்க்க எண்ணமிருந்தால் ஓய்வு நேரங்களில் நானே பாடிமுடித்துவிடுகிறேன்." என்று சொல்லிப் பின்னர், தேவராஜபிள்ளை பாடியிருந்த செய்யுள்களைத் திருத்தி அவருக்குக் காட்டிவிட்டு, மேலே உள்ள பாகத்தையும் அவர் முன்பாகவே நாளொன்றுக்கு ஐம்பது செய்யுள்களுக்குக் குறையாமல் பாடிக்கொண்டே வந்து சில தினங்களில் முடித்தனர்.

1. **உந்தி** – வயிறு. **பொருமி** – விம்மி.

2. **மிடி** – வறுமை. **தற்கு இனிமைசான்ற செவ்வாய்மை அந்தணன்** – தனக்கு அன்பு மிகுந்த (நாயகனாகிய) செவ்விய மெய்ந்நெறியை யுடைய பிராமண குலத்துக் குசேலன். **அலர்மொழிகள்** – நிந்தனைச் சொற்கள். **துவ்வாமை மைந்தர்கள்பால் மறந்தும் இயற்றுள்** – வெறுப்பினை மைந்தரிடத்து மறந்தும் செய்யாள். **சுகுணம்** – நற்குணம். **ஆல்** – அசை.

3. **வகுத்த** – படைக்கப்பட்ட. **மாற்றலர்** – பகைவர். **கூற்றூர்** – யமலோகம். **மேவ** – அடைய. **செகுத்து** – கொன்று. **செம்மல்** – பெருமையிற் சிறந்தோன். **இகுத்த** – இழிவான. **பல் + துவாரம்** = பஃறுவாரம்.

4. **போதவும்** – மிகவும். **மேதக** – சிறப்பாக. **நீரான்** – தன்மையுடையோன். **கோதறு** – குற்றமற்ற.

5. **உவகை விம்ம** – சந்தோஷம் பூரிக்க. **எழில்** – அழகு. **பொன்றலில்** – அழிதலில்லாத. **மன்ற** – நிச்சயமாக.

6. **இன்னே** – இப்பொழுதே. விரைவு நோக்கி மும்முறை அடுக்

கிக் கூறினான். **சொற்றன்** – சொன்னான்.

7. **எண்ணனை** = எண் + அ(ன்)னை: (யாவரும்) நினைக்கும் அன்னையாகிய இலக்குமி தேவி. **இலங்கும்** – விளங்கும். **ஈத்தருள் பிரான்** – கொடுத்தருளிய பெருமான். திருமாலின் மார்பில் இலக்குமி தேவி வீற்றிருக்கின்றாள் என்று கூறுதல் மரபு. **திகிரி** – சக்கராயுதம். **சங்கம்** – சங்கு. **புரக்கும்** – காக்கும். **கண்ணனை** = கள் + நனை: தேனினால் நனைந்துள்ள. **துளவத்தாமம்** – துளசிமாலை.

8. **கழி** – மிக. **வருடினான்** – தடவினான். **கமலக்கண்ணன்** – தாமரை மலர்போலும் கண்களையுடைய கிருஷ்ணன். **பழியில்** – குற்றமற்ற. **ஒழிவறு** – முடிவில்லாத.

9. 'முழுதுணர்ந்தோர் பெருநட்பே' என்றதனை முதலிற் கூட்டிப் பொருளுரைக்க. **முத்தி** – பந்தங்களினின்றும் நீங்கிய ஆன்மா அடையும் அழிவில்லாப் பேரின்பம். **தித்திக்கும்** – இன்பத்தையே நல்கும். **திரு** – செல்வம். **எத்திக்கும் புகழு நினக்கு** – எல்லாத் திசைகளிலும் புகழப்படுகின்ற உனக்கு. பாட்டின் இறுதி ஏகாரம் வினாப் பொருளில் வந்தது.

10 **மனைக்கிழத்தி** – மனைக்கு உரிமை பூண்டவளாகிய மனைவி. **நீர்மை** – குணம். **மாண்பு** – நற்குண நற்செய்கை. **செலவுஞற்றுவள்** – செலவு செய்வாள். ஏகாரம் அனைத்தும் வினாப்பொருளில் வந்தன.

11. **காமர்** – அழகிய. **ஆர்வம்** – மிக்க விருப்பம். **திருகு ஆரா** – மாறில்லாத.

12. **கொள்ளை** – மிகுதி. **மறை** – வேதம். **தள்ளை** – தாய். **இந்தனம்** – விறகு. **எள்ளரும்** = இகழ்தலில்லாத. **விள்ளரும்** – சொல்லுதற்கரிய. **இன்று இன்று** – இன்றைக்கு இல்லை.

13. **பந்தனை** – உலக பந்தம். இல்லறத்தானாய்க் காணப்படினும் அகத்துறவு பூண்டோனாதலின் 'பந்தனை யகன்ற மேலோய்' என்றார். **பக்கணம்** – பட்சணம், சிற்றுண்டி.

14. **வாளா** – சும்மா (வெறுங்கையுடன்). **இனிய எற்கு அன்றி** – இனிய சிற்றுண்டிகளை எனக்கு அல்லாமல்.

15. **நடலை** – கபடம், பொய். **பாங்கு** – பக்கம். **படர்தல்** – போர்த்திருந்த ஆடை. **தெய்வம்** – குசேலரின் மனைவி. **திடமுற** – உறுதியாக.

16. **முன்னும்** – நினைக்கத்தக்க. **முனைமுறிந் ததுவுமின்று** – ஒன்றுவது முரியாது எல்லாம் முழு முழு அவலாகக் காணப்பட்டன. **முட்டை** – தவிடு. **அங்கை** – உள்ளங்கை. **கொன்னும்** – குழறும். **குளம்** – வெல்லம். **உன்னு பல்லுலகு முண்டோன்** – எண்ணப்படும் சகல உலகங்களையும் தன்னுள்ளே அடக்கிய கிருஷ்ணன்.

17. **இழை** – ஆபரணம். **முத்தமூரல்** – முத்துப்போன்ற பற்கள். **கேள்வன்** – கணவனாகிய கிருஷ்ணன்.

18. **கதிர்** – சூரியன். **எழீஇ** – எழுந்து. **கடன் பலவும் முற்றி** – நித்திய கடன்களைச் செய்து முடித்து. **புலன்** – இந்திரியம். **செற்று** – வென்று. **மதிக்குலத்து மன்னவன்** – கிருஷ்ணன். **நிதிய மிகப் பெற்றவனாய்** – மிக்க செல்வத்தைப் பெற்றவனைப்போல அகமகிழ்ந்து. **வழிக்கொண்டான்** – சென்றான்.

19. **அருந்தவர்கள் புகழ் சீர்த்தி யமைந்த** – அரிய தவ ஒழுக்கமுடையோர் புகழ்கின்ற பெருமை வாய்ந்த. **பூரிப்புற்ற** – நிறைவை அடைந்தன. **விரதாதி**=விரதம் +ஆதி; **ஆதி** – வறுமை. **கண்டம்** – கழுத்து. **ஆரம்** – மாலை. **பிறங்கிற்று** – விளங்கிற்று.

20. **பாங்கியராய கோலமாமடவார்** – சேடியராகிய அழகிய பெண்கள். **கொழுநன்** – கணவன். **எதிர்கொள்வான்** – எதிர்கொள்வதற்கு.

21. **குருமலர்** – ஒளிவீசுகின்ற. **கலம்** – உண்ணுதற்குரிய பாத்திரம். **மூரல்** – சோறு. **குழம்புப் பால்விராய்** – குழம்பாகிய பால் சேர்த்து. **திருகுபுவேண்டா என்மரும்** – கையைத் திருகிக் கொண்டு வேண்டா என்போரும். **அருகிய** – அற்ப. **அணிமகார்** – அழகிய மக்கள்.

22. **உவளக வரைப்பினையுற்று** – அந்தப்புரத்தை யடைந்து. **கழிப்பி** – அனுப்பிவிட்டு. **கவாடம்** – கதவு. **நூக்குபு** – மூடி. **வலிப்பான்** – நினைப்பான்.

23. **துந்துமி** – பேரிகை. **ஆர்ப்ப** – ஆரவாரிக்க. **மயம்** – சிறந்த. **குதுகலிப்ப** – மிக்க மகிழ்ச்சிகொள்ள. **பயம்** – பயன். **அண்ணல்** – கிருஷ்ணன்.

24. **மூதறிவுடையோர்** – ஞானந் தலைப்பட்டவர்கள். **கொள்ளா** – மதியாத. **குணிப்பரும் பவத்திற்கு ஏது** – அளவிடுதற்கரிய பிறவிப் பிணிக்குக் காரணம். **படியற வாயிலின்பம்** – ஒப்பில்லாத பேரின்பம். **இன்று** – இல்லை.

25. **மேதக** – மேன்மையுடைய. **காதலினடியார்** – மிக்க அன்புள்ள மெய்யடியார்கள்.

## நளவெண்பா.

இதன் முதனூல் வியாசபாரதத்திலுள்ள நளோபாக்கியாநம். இந்நூல் சுயம்வரகாண்டம் கலிதொடர்காண்டம் கலிநீங்கு காண்டம் எனும் முப்பிரிவினது வெண்பாவினாற் செய்யப்பட்டது; இயற்றியவர் புகழேந்தி; இவர் 13ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

1. **வில்தானை** – வில்தாங்கிய படைகள். **பொன் தேர்** – பொன்னால் ஆனதேர்; அழகிய தேர் எனினும் அமையும். **முற்று ஆம்பல்** – மலர்ந்த ஆம்பல். **தேன் நீர் அளித்து** – தேனாகிய நீரைக் கொடுத்து. **மா நீர் நிடதம்** – மிக்க நீர் வளமுள்ள நிடத நாடு.

2. **தானவர்** – அசுரர். **தரித்த** – பிடித்த. **வை** – கூரிய. **ஏனை நெறி** – எஞ்சிய வழி. **மிக்கு** – சிறந்து.

3. **இகல்** – பகைக்கின்ற. **எறி** – (அலை) வீசுகின்ற. **செய்** – வயல். **குன்று** – உதயகிரி. **செருக்கும் மான்** – களிக்கின்ற குதிரை. **வெய்யோன்** – சூரியன்.

4. **மன்றல்** – மணம் (அமைந்த). **கோதை** – மலர்மாலை அணிந்த தமயந்தி. **பூ** – தாமரைப்பூ. **விந்தை** – விஜய இலக்குமி

5. **மற்று** – அசைநிலை. **அவன்** = கொற்றவன் – புட்கரன். **பணயம்** – பந்தயப் பொருள். **தண் தெரியல்** – குளிர்ச்சி பொருந்திய மலர் மாலை.

6. **வல் நெஞ்சன்** – இரக்கமில்லாத மனமுடைய புட்கரன். **ஆய** – பொருந்திய. **பெடை** – பெண் அன்னம்.

7. **தேர்ச்சி இலாத** – ஆராயும் அறிவு இல்லாத. **அம் கோலம்** – அழகிய உருவம். **காதலன்** – நாயகன் (நளன்). **காதலி** – நாயகி (தமயந்தி). **யாவர்** – இருமக்கள். **தீது இலவே** – (க்ஷேமம் உளதா?) தீமை இல்லையே?

8. **மை ஆழியில் துயிலும் மால்** – பாற்கடலில் நித்திரை செய்யும் திருமால். (வெண்மையான பாற்கடலில் கரிய திருமேனியுடைய மால் நித்திரை செய்வதால், அவர் மேனியின் ஒளி பரந்து கரியதாகக் காணப்படும்). **பராய்** – வணங்கி. **கை ஆழி** – கை விரலில் (அணிந்த) மோதிரம். **கழித்து** – கழற்றி.

9. **பலகை** – ஒரு பலகை ஆட்டம். **வென்றுனை** – வென்றவனாகிய புட்கரனை.

10. **ஆங்கு** – ஓர் ஆட்டம். **செந் தமிழோர்** – செந்தமிழில் வல்ல புலவர். **நாவேய்ந்த** – நாவினால் தொடுத்த. **போற்று இசைக்கும்** – துதியைச் சொல்லுகின்ற. **கோ வேந்து** – அரசர்க்கு அரசன்.

11. **ஆன** – உண்டாகிய. **பொன்னகரம்** – அமராவதி நகரம். **புரந்தரன்** – இந்திரன்.

12. **பெற்ற** – வரப்பெற்ற. **ஓ** – தெரிநிலைப்பொருளில் வந்தது.

## வில்லிபுத்தூரர் பாரதம்.

இதன் முதனூல் வடமொழியில் வியாசமுனிவர் இயற்றிய மகாபாரதம். இதனைத் தமிழில் மொழி பெயர்த்தவர்களுள் வில்லிபுத்தூராழ்வாரும் ஒருவர். இவர் 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தார். இவர் இயற்றிய நூல் மொழிபெயர்ப்பெனினும் முதனூல் போலச் சிறந்து விளங்குகின்றது. இந்திய நாகரிகத்தின் உயர்வை எந்நூலைக்காட்டிலும் இந்நூல் எடுத்துரைக்கின்றது என்பர்.

1. **இமையவர்** – தேவர்கள். **சுந்தரப் பொற்றேள்** – அழகிய பொன்னுபரணங்களை அணிந்த தோள். **வேள்வி** – இராசசூயம் என்னும் யாகம்; இது எல்லா அரசர்களையும் வென்று அவர்களிடம் கொண்ட திறைப்பொருளைச் செலவிட்டுச் செய்வது. **தந்திர வெள்ளச்சேனை** – போர்த் தந்திரங்களிலே தேர்ச்சிபெற்ற 'வெள்ளம்' என்னும் பெருந் தொகையான சேனை. [வெள்ளம் – 'கோடி' போன்ற ஓர் எண்]

2. **எம்மனோர் வாழ்வுங் கொள்ளும்** – எமது செல்வ வாழ்க்கையையும் பறித்துக் கொள்வான். **துனைவரும் புரவித் திண்தேர்த் துணைவரும் சூரர் ஆனார்** – வேகமாகச் செல்லுகின்ற குதிரைகள் பூட்டிய வலிய தேரையுடைய (தருமனின்) தம்பிமார்களும் பராக்கிரம சாலிகளாய் விட்டார்கள். **கூர்முனை வரு முள் வேலே** – கூர் நுனி பொருந்திய முட்களையுடைய வேல மரத்தை. **நனிவா வயிர்த்த போது** – மிகுதியாக வயிரங்கொண்ட போது. **நவியம்** – கோடரி. **மடியும்** – கூர் மழுங்கும்.

3. **போதுற** – மேன்மைப் படத் தொடங்கிய இப்போதே. **புரவலன்** – தருமன். **பேதுற** – திகைக்கும்படி. **முடிக்க வல்லார்** – வலியடக்க வல்லவர். **மோதுற** – தாக்கி. **மொழியொணு வஞ்சமொன்று தீதுறப் புரிந்தேயாதல்** – சொல்லொணுத ஒரு வஞ்சனையைத் தீமை மிகும்படி செய்தாயினும்.

4. **தொத்து அனை உகளும் நல் நீர் குருநிலக் கோமான்** = தொகுதியான அனை என்னும் சாதி மீன்கள் புரளப்பெற்ற மிக்க நீரையுடைய குரு நாட்டுக்குத் தலைவனான தருமன். **முத்தனை** – கிருஷ்ணனை. **முதன்மை செய்தான்** – முதன் மரியாதை செய்து முதல்வனுக்கினுன்.

5. **எல் இயல் பரிதி அன்ன** – பகற் காலத்திற் சஞ்சரிக்கின்ற சூரியனை யொத்த. **யது குல மன்னன்** – கிருஷ்ணன், [யது-சந்திர குலத்திற் பிரசித்திபெற்ற ஓரரசன், அவன் குலத்திற் பிறந்தவர் யாதவர் எனப்படுவர்.] **சல்லியமிகுபோர்** – உபத்திரவம் மிக்க போர். **சல்லியன் தன்மேற் சென்றுள்** – சல்லியன்மேற் படையெடுத்துச் சென்றிருக்கிறுன். **சூழ்வலை படுத்திக்கொண்ட** – சூழ இட்ட வலையில் அகப்படும்படி செய்யப்பட்ட. **வல்லியம் என்ன** – புலி என்று சொல்லும்படி. **சூழ்ந்து** – முற்றுகையிட்டு. **மலைவது** – போர் புரிவது.

6. **வாரணம்** – யானை. **மணித்தேர்** – மணிகள் கட்டிய தேர். **வாசி** – குதிரை. **நஞ்சு அனையவர்** – விஷத்தையொத்த காலாட்படை. **கஞ்சனை**

**மலையை எண்ணி** – கம்சனைக் கொல்லக் கருதி. **கரிய பேய் முலைப்பாலுண்ட** – கருநிறமுள்ள பூதனை யென்னும் பேய் மகளது முலைப்பாலைக் குடித்த. **நெஞ்சினன்** – கிருஷ்ணன்.

7. **வெஞ்சிலை குனித்து** – கொடிய வில்லை வளைத்து. **எஞ்சி விண் புகுவர்** – இறந்து வீர சுவர்க்கம் புகுவர். **மதிப்பது** – எண்ணுவது. **அங்கர் கோமான்** – அங்க தேசத்து அரசனான கன்னன்.

8. **வை வேல்** – கூரிய வேல். **நெடும்பணை** – நீண்ட பருத்த. **படை தொடும் தடக்கை வீரர்** – ஆயுதமேந்திய பெரிய கைகளையுடைய வீரர். **உத்தரம்** – மறுமொழி.

9. **துப்பு உறழ் அமுதச் செவ்வாய்** – பவளம் போன்றதும் அமிழ்தம் போலினியதுமான சிவந்த வாய். **வேட்டு** – (தழுவ) விரும்பி. **மெய்ப்படு முனியாய்** – உண்மையான பிராமண வேடத்துடன். **வில் இறுத்த போதும்** – வில்வளைத்து (இலக்கை) அறுத்து விழுத்தியபோதும். **இப்பொழுது இருந்த வீரர் யாவரும்** – இப்பொழுது இங்கே கூடியிருக்கின்ற வீரராகிய நாமெல்லாம்.

10. **மெய்ப்பு இறப்பு அற்ற நீதித் தருமன்** – மெய் பேசுதலினின்று சிறிதுந் தவருத நியாய வழியில் நடக்கின்ற தருமன். **ஒப்பு அறப் பணைத்த தோளாய்** – (தமக்குச்) சமானமில்லாதபடி பருத்திருக்கின்ற தோள்களையுடைய துரியோதனனே. **தப்பு அற** – தப்பாதபடி. **சதிப்பதே** – அழிப்பதே.

11. **கோமகன்** – துரியோதனன். **மாமன்** – சகுனி. **தவிசு** – ஆசனம். **பாமரு பனுவல் மாலைப் பாண்டவர் தம்மை** – (புலவர் பாடிய) பாட்டுக்களின் வடிவமாக அமைந்துள்ள நூல்களாகிய மாலையைச் சூடிய பாண்டவர்களை. **காமரு சூதால் வெல்லும்** – நல்ல சூதாட்டத்தால் வெல்லுதற்குரிய. **கருத்து** – ஆலோசனை.

12. **செல்வக்கோயில்** – செல்வச் சிறப்புடைய அரண்மனையில். **பொற்பு** – அழகு. **சிற்பம் பன்னும் நூல்குன்றுப் பல்தொழில் வினைஞர் தம்மால்** – சிற்பத் தொழிலைக் கூறும் சாஸ்திர முறையிற் குறைவுபடாத பல வகை வேலைத்திறத்தில் வல்லவர்களான தொழிலாளர்களைக் கொண்டு. **நல்நிலம் விரிவு உண்டாக** – மிக்க இடத்தின் பரப்பு அமையும்படி (மிகப் பெரிதாக).

13. **புண்டர விசால நெற்றிப் புரவல** – குறிகளாக நீறணிந்த விசாலமான நெற்றியையுடைய அரசனே. **அண்டர்** – தேவர். **வல்சூது** – வலிய சூதாட்டத்தை.

14. **அதிர் முரசு உயர்த்த கோ** – ஒலிக்கின்ற முரசமெழுதிய கொடியை உயர எடுத்துள்ள அரசனாகிய தருமனும். **ஐ எனத் துணியும்** – 'அழகியது' என்று சொல்லிச் சூதாடத் துணிவான். **மதிமருள் இயற்கைத்தாரும்** – புத்தி மயங்குதற்குக் காரணமான இயல்பையுடைய. **விதி எனப்பொருது** – ஊழ்வினை என்று சொல்லும்படி போராடி. **தங்கள்** – பாண்டவரின். **வாழ்வு** – செல்வம். **மேதகு அரசு** – மேலான அரசாட்சி. **செகுத்திடுவல்** – அழித்துவிடுவேன்.

15. **இன்னதே கருமம்** – இதுவே செய்யத்தக்க காரியம். **விழைந்து** – விரும்பி. **தன்னதே ஆகும் இந்தத் தலம்** – தன்னுடையதாய்விடும் இவ்வுலகம் முழுவதும்.

16. **வாழ்வு** – செல்வ வாழ்க்கை. **வாங்குகை** – கவர்வது. **பொய் அடர் சூது** – பொய்ம்மை மிக்க சூது. **ஓலை** – திருமுகம்.

17. **இது** – இவ்வாறு பக்ஷபாதகமாகச் சொல்வது. **உயிர்த் தந்தை** – உயிர்க்கு ஒப்பான தந்தை. **நாளும்** – நாள்தோறும். **அங்கே** – அப்பாண்டவர்களிடம். **மாசுணத் துவசன்** – பாம்புக் கொடியையுடைய துரியோதனன்.

18. **மாற்றம்** – வார்த்தை. **ஈர** – வருத்த. **வெந்திறல் விதுரன்** – மிக்க வலிமையுள்ள விதுரன். **புந்தி** – மனம். **ஒருசார்** – ஒருதிறத்தாரிடத்து. **அத் தந்தையன்றே** – அவ்வாறே (இருதிறத்தார்க்கும்) தந்தை முறையாகுவனன்றோ.

19. **வாங்கு நீர் உததி ஆடை மண்ணின்மேல் வாழ்தல் உற்றல்** – வளைவான (சூழ்ந்துள்ள) நீர் நிறைந்த சமுத்திரத்தை ஆடையாகக் கொண்டுள்ள இவ்வுலகத்தில் (ஒற்றுமையாக) வாழ்ந்தால். **பாங்கு அலா அரசர்** – இணக்கமில்லாத அரசர். **ஒருப்பட** – ஒன்று சேர.

20. **உளம் பிரிந்து** – மனம் வேறுபட்டு. **தங்களின் எதிர்ந்தார்** – தமக்குள் மாறுபட்டுப் போர் புரிவராயினர். **அம்மா** – என்ன ஆச்சரியம். **பொங்கு அளி திகழும்** – களிப்புக்கொள்ளுகின்ற வண்டுகள்

மொய்ப்பதற்கு இடமான. **கஞ்சம்** – தாமரை மலர். **புரவலன்** – தலைவனான சூரியன். **ஒழிவு கண்ட** – நீக்கத்தைக் கண்ட. **திங்கள்** – சந்திரன். **உயர்ச்சி போல** – சிறந்த தோற்றம் போல. **திகழ்வர்** – விளங்குவர்.

21. **நயந்து** – விரும்பி. **வாழ்வுறு தந்தை** – செல்வ வாழ்க்கை பொருந்திய திருதராட்டிரன். **நல்ல விரகினால் வெல்லல் உற்றீர்** – தகுதியான உபாயத்தினால் வெல்ல எண்ணினீர்கள். **அக நெடும் போர்** – துன்பத்திற்கிடமான பெரிய போர்.

22. **சூது கொண்டு நிகழ் விலாசம் அயர்விரோ** – சூதாடு கருவியைக் கொண்டு செய்கிற விளையாட்டை ஆடுகிறீர்களா. **ஆயவென்றி ஐயன் இல்லில்** – பொருந்திய வெற்றியையுடைய தந்தையின் மாளிகையில் போய். **போனகம்** – உணவு. **போது போக** – காலம் இனிது கழியுமாறு.

23. **மீது எடுத்த வஞ்சராகி வெகுளி செய்தல்** – அதிகமாகப் பொருந்திய வஞ்சனையுடையவர்களாய்க் கோபங் கொள்ளுதல். **பிறர் பெருங்கோது எடுத்து உரைத்தல்** – பிறருடைய பெருங்குற்றத்தை எடுத்துத் தூற்றல். **சூது எடுத்து விழைதல்** – சூதாடலை விரும்புதல். **உற்ற சூள் பிழைத்தல்** – சொன்ன உறுதிமொழி தவறுதல். **இன்ன** – இப்படிப்பட்ட செயல்களை. **தீது எடுத்த நூலில்** – பாவங்களைக் கூறுகின்ற தரும சாஸ்திரங்களில்.

24. **வஞ்சனைச் சூதுகொண்டு வாதுகொண்டு பொருது** – வஞ்சனைக்கு இடமான சூதாட்டத்தினால் மாறுமட்டுப் போர்செய்து. **அழிந்து** – பொருள்களை இழந்து. **தாது கொண்டு தேன் இரங்கு தாம மார்ப** – மகரந்தப் பொடிகளைப் பூசிக்கொண்டு வண்டுகள் ஒலிக்கின்ற பூமாலையை அணிந்த மார்பை உடைய துரியோதனனே. **நீர் ஏது கொண்டது** – நீங்கள் எப்பொருளைப் பெறவேண்டுமென்று கருதுகிறீர்களோ. **அது** – அப்பொருளை. **இம்பர்** – இப்பொழுதே. **என்னவே** – என்று கூறவே.

25. **போது போகும் ஆறு இருந்து பொருதும் வருதி என்ன** – பொழுது (இனிது) கழியும்படி இருந்து சூதாடுவோம் வருவாயாக என்று அழைக்க. **சூது போரும் அஞ்சியே உளம் தொலைந்து உளங்குவாய்** – சூதாடு

தற்கு அஞ்சி மனம் வருந்தி நடுங்குகின்றாய். **மோதுபோரில் எங்ஙன் உய்தி**—(ஆயுதங்களால்) தாக்கிச் செய்யப்படுகின்ற போரில் எப்படிப் பிழைப்பாய். **முடுகு தேர்**—விரைந்து செல்லும் தேர்.

26. **இல் எடுத்து**—புதிதாக மண்டபம் கட்டி. **விரகு**—வஞ்சனை **மாயைகூர் வல்எடுத்து**—மிகக மோசத்திற்கு இடமான சூதாடு கருவியை எடுத்துக்கொண்டு. **மகீபன்**—அரசன் (தருமனை). **சொல் எடுத்து வைத வாய் நுனிப்பன்**—தகாத சொற்கொண்டு பழித்த வாயைத் துண்டித்துவிடுவேன்.

27. **ஏதிலாரின்**—யாதொரு சம்பந்தமுமில்லாத அயலார்போல. **இருக்க**—சும்மா இருப்பாயாக. **காதில்**—போர் புரிவேனானால். **முனைந்து கண்விழிக்க வல்லபேர் ஆர்** எதிர்த்து நின்று அஞ்சாமற் போர்புரிய வல்லமையுள்ள வீரர் யார் உளர். **ஓதில்**—(தம்மைத்தாமே) புகழ்ந்து கூறினால். **ஆண்மை குன்றும்**—வீரம் குறையும். **உருத்து**—கோபங்கொண்டு. **மாயநின் சூதில் ஆடல் புரிதும்**—வஞ்சனையுள்ள சூதாட்டத்தை ஆடுவோம்.

## இராமாயணம்.

இராமாயணம் என்பது இராமனது சரிதம் எனப் பொருள்படும். இராம+அயநம் = இராமாயணம். இதனை வடமொழியில் வான்மீகி முனிவர் செய்தனர். இதுவே கம்பர் தமிழில் இராமாயணம் செய்வதற்கு முதனூலாய் இருந்தது. கம்பர் வாழ்ந்த காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டென்ப.

1. **பூவிரி**- அழகுமிக்க. **பொலன் கழல்**—பொன்னாலாகிய வீரக்கழல். **பொரு இல் தானையான்**—ஒப்பில்லாத சேனையை யுடைய பரதன். **கழனி**- வயல். **ஓர் இ**—விட்டுநீங்கி. **தாவர சங்கமம்**—நிற்பனவும் அசைவனவும்.

2. **கான்தனில்**—காட்டில். **காளை**—இடபத்தை ஒத்தவன் (இராமன்). **தோன்றல்**—சிறந்த ஆண்மகன் (பரதன்). **ஆன்றவர்**—பெரியோர். **அக்குரோணி**—யானை இருபத்தோராயிரத் தெண்ணூற்றெழுபது, தேர் இருபத்தோராயிரத்தெண்ணூற்றெழுபது, குதிரை அறுபத்தையாயிரத் தறுநூற்றுப்பத்து, காலாள் இலட்சத்தொன்பதினாயிரத்து முந்நூற்றைம்பது ஆக இரண்டுஇலட்சத்துப் பதினெண்ணா

யிரத் தெழுநூறு கொண்டது. தொடர்ந்து சென்றன மூன்று பத்தாயிரத் திரட்டி அக்குரோணிகள் என முடிக்க.

3. **ஆயிடை**—அச்சமயத்தில். **துப்புடைக் கடல்**—வலிமை பொருந்திய கடல். **அண்ணல்**—மேலோன் (இராமன்). **உடற்றவேகொல்**—போர் செய்தற்காகவோ? **கொல்**—ஈண்டு ஐயப்பொருளைத் தந்த இடைச் சொல். **சீற்றம்**—கோபம்.

4. **கூற்றின் ஆற்றலான்**—யமன் போலும் வலிமையுடைய குகன். **முரண்**—வலிமை **துகளின் நோக்குவான்**—(சேனையால் எழுப்பப்பட்ட) புழுதியால் பார்த்தறிந்தவனாய்; சேனையைத் துகள்போல நோக்குபவன் என்றலும் பொருந்தும். **நகை**—சிரிப்பு. **நாற**—தோன்ற. **குனிப்பு**—வளைவு.

5. **என**—என்று சொல்லி. **வள்ளுகிர்**—கூரிய நகம். புலியெலாம் ஒருவழிப் புகுந்தபோலச் சேனையை (ஒருங்கு வந்து சேரும்படி) உவந்து கூவினான் என முடிக்க.

6. **புளிஞர்**—வேடர். **சூழ்ச்சியின் ஊன்றிய** — ஆலோசனையோடு நிலைநின்ற. **உம்பர்**—மேலுலகம். **ஏன்றனென்**—தொடங்கியுள்ளேன். என்னுயிர்த்துணைவன் என்பது இராமனைக் குறிக்கும். புளிஞரை நோக்கி, "சேனையை உம்பர் ஏற்றுதற்கு, துணைவற்கு அரசு ஈகுவான், ஏன்றனென்; நீர் அமைதிர்" என்றான், எனமுடிக்க.

7. **விலங்கிடும்**—(அஞ்சி) ஒதுங்கும். **வில்லாளோ**—வில்வீரனோ? **அவர்**—இராமர். **தோழமை என்றவர் சொல்லிய சொல்**—முன்பு இராமர் குகனைக் கண்டபொழுது அவனது அன்பை உவந்து அவனைத் தம் தோழனென்று பாராட்டிச் சொன்ன சொல்லாகும். **ஏழைமை**—எளிமை; அறிவின்மை. முன்னிரண்டடிகளில் குகனது வீரமும், பின்னிரண்டடிகளில் அவனது நன்றி மறவா நற்பண்பும் புலனாகின்றன.

8. **முன்னவனென்று**—(இராமனைத் தனது) தமையன் என்று. **மொய் புலி அன்னான்**—வலிமைகொண்ட புலியை ஒத்தவன். **பின்னவன்**—தம்பி (இலக்குமணன்). **அவை பேசானேல்**—அவற்றைக் குறித்து எண்ணாவிடினும். **வாயாவோ**—(தைத்துப்) பொருந்தமாட்டாவா?

9. **என்துணை**—என் துணைவன் (இராமன்). **உயிர் மருந்து எனின் அன்று**—உயிர் தேவாமிர்தமோ எனின் அன்று. என்கடன் இன்றோடு கழிக்குவென் எனக் கூட்டுக.

10. **சாடி**—மோதியழித்து. **அறத்தவர்**—தாயுரை கேட்டுக் காட்டுக்குச் சென்றதால் அறத்தைக் கடைப்பிடித்தோராகிய இராமர். வேடு—வேடர் கூட்டம். அறத்தவரேயாள வேடுபார் கொடுத்தது எனச் சேர்க்க. **நாடு கொடுத்த என் நாயகனுக்கு**—தனக்குரிய நாட்டை (தம்பிக்குக்) கொடுத்த என் நாயகனான இராமபிரானுக்கு. **காடு கொடுக்கிலாராகி**—காட்டையும் கொடுக்கச் சம்மதியாதவராய்; அதாவது, இராமரைக் காட்டிலும் வாழவிடாது என்றபடி. **எடுத்தது**—உள்ளம் எடுத்தது; (போர்க்குப்) படையெடுத்து வந்தது.

11. **இரும்பு அ(ன்)ன**—இரும்பை ஒத்த. **பணை**—பெரிய. **வாள் வீரற்கு அன்பன்**—வாட்போரில் விரனான இராமனுக்கு அன்பனாகிய குகன். **முன்பனில் வந்து**—வலிமையுடைய பரதனிடத்து வந்து. (முன்பு—வலிமை). **மூரிய தேர்வல்லான்**—வலிய தேரைச் செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன். வில்லினன், தோளினன், வீரன் என்பன இராமரைக் குறித்து நின்றன. அன்பன், என்பன சொல்லி ஏனோர் முன்நின்றனன்; தேர்வல்லான் அது கண்டு முன்பனில் வந்து மொழிந்தனன் எனச் சேர்க்க.

12. **காளில் அல்கண்டு அனைய**—நோக்குமிடத்து இரவைக் கண்டாற்போன்ற. **மேனியான்**—குகன். **மணிநிறத்தான்**—அழகிய நிறத்தையுடைய பரதனே. **நெறியெதிர்**—வழியெதிரே. "மணிநிறத்தாய், திண்மையான காதலான் மேனியான் உள்ளத்தான் நின்றனன்" என்றான் என முடிக்க.

13. **தந்தைதுணை**—தசரதனின் நண்பனான சுமந்திரன். **துரிசு**—களங்கம். **மனத்தான்**—பரதன். **மன்**—இராமர். **என் முன்னே**—என்னை அவன் வந்து காண்பதற்கு முன்னே.

14. **துன்று**—நெருங்கிய. **குஞ்சி**—மயிர். **எயினர்கோன்**—வேடர் தலைவனான குகன். **துண்ணென்றான்**—திடுக்கிட்டான்.

15. **வற்கலை**—மரவுரி. **நல்கலை இல் மதி**—அழகிய கலைகளில்லாத (ஒளியின்றி வடிவம் மாத்திரம் காணப்படுகின்ற) சந்திரன். தூரத்தே பரதனது உடையும், நெருங்கிய அளவில் அவனது உடம்பின் தன்மையும், முன்னணைந்தவிடத்து அவனது முகவாட்டமும்

அம்முகத்தின்மூலம் அவனது உள்ளப்பான்மையும் குகனுக்குப் புலனுகின்றன.

16. **தம்பி** – பரதன். **அயல் நின்றான்** – பரதனருகில் நின்றவனுகிய சத்துருக்கினன். **தம்பி** – இலக்குமணன். **எம் பெருமான் என் நாயகன்** என்ற சொற்களில், குகன் இராமனிடத்து வைத்த அன்பும் உரிமையும் புலனுகுதல் கவனிக்கத் தக்கது.

17. **இடுக்கண்** – துன்பம். **உலையாத** – நீங்காத. **நெறிகாமின்** – வழியைப் பாதுகாத்திருங்கள்.

18. **எதிரே வந்து தொழுதானை** – எதிரிலே வந்து (திசைநோக்கித்) தொழுது நிற்கும் பரதனை. **மலரிருந்த அந்தணன்** – பிரமன். **வணங்குமவனும்** – வணங்கத்தக்க பரதனும். **அவனடி வீழ்ந்தான்** – குகனது அடியில் வீழ்ந்து வணங்கினுன். **சீர்த்தியான்** – புகழையுடைய குகன். இங்கே, குகன் பரதனை வணங்கினுன்; பரதன் குகனது அடியில் வீழ்ந்தான்; குகன் பரதனைத் தழுவினுன்; எனப் பொருள் கொள்க. இவ்வாறன்றி வேறு வகையாகவும் பொருள் கொள்வர் சிலர்.

19. **தாமரைச் செங்கணன்** – பரதன். **எழு** – தூண். **எய்தியது என்னை** – வந்தது யாது காரணத்தால். புளிஞர் வேந்தன் செங்கணனை "என்னை" என்ன, (பரதன்) "தந்தை வழுவினன் மன்னனைக் கொணர்வான் (எய்தியது)" என்ருன் எனச் சேர்க்க.

20. **கிராதர்** – வேடர். **உயிர்ப்பு** – மூச்சு. **தீட்டரு மேனி மைந்தன்** – (சித்திரத்தில்) எழுதமுடியாத (அழகுவாய்ந்த) உடம்பினையுடைய பரதன்.

21. **தேக்கி** – நிறைத்து. **புகழினேய்** – புகழையுடைய பரதனே. **நேர்** – ஒப்பு. அம்மா என்பது அதிசயக் குறிப்பினையுடைய இடைச்சொல். ஈண்டு, காவியத்தின் கதாநாயகனை இராமனைவிடப் பரதன் பன்மடங்கு உயர்ந்தவனெனக் கூறியது கவனிக்கத்தக்கது. அடுத்த பாடலிலும் இதனைக் காண்க.

22. **கற்றை** – தொகுதி. சூரியனுக்கும் சூரியகுலத்துதித்த பரதனுக்குமுள்ள ஒத்த பண்பு உணர்ந்தின்புறத்தக்கது. **உரவு** – வலிமை. "தோளாய், எயினனேன் என்புகழ்கின்றது" எனவும்

"இரவி தவிர்க்குமாபோல் மரபினோர் புகழ்களெல்லாம் உன் புகழாக்கிக்கொண்டாய்" எனவும் சேர்த்து முடிக்க.

23. **வாரி** – கடல். **செவ்வழி** – நல்வழி. **அண்ணல்** – பரதன். அண்ணல் நோக்கிக் கூப்பி என்றலும், வேந்தன் "காட்டுவல் எழுக" என்றான் எனச் சேர்க்க.

24. **கார்** – மேகம். **வார்சிலை** – நீண்டவில். **தட** – பெரிய. **வள்ளல்** – இராமன். **பள்ளி** – படுக்கை. கல்லிடைப் படுத்த புல்லின் பள்ளி எனச் சேர்க்க. **பருவரல்** – துன்பம். **பரவை** – கடல். **மணிப்புனல்** – முத்துப்போன்ற கண்ணீர். **மண்ணுதல்** – கழுவுதல்.

25. என் பொருட்டினால் இவ்விடர் உனக்கு இயன்றது எனச் சேர்க்க. **இடர்** – துன்பம். **இயன்றது** – நேர்ந்தது. கிழங்கும் காயும் அமிர்தென அயின்றனை எனச் சேர்க்க. **காசு குயின்று** – இரத்தினங்கள் பதித்து.

26. **தூண்தா** – தூணை ஒப்ப. **நிவந்த** – உயர்ந்த. **தோளான்** – பரதன். **அந்நீண்டவன்** – பெரியவனாகிய அவ்விராமன். **நேயம் பூண்டவன், பின்னே போந்தவன்** என்பன இலக்குமணனைக் குறிக்கும். **பொழுது நீத்தது** – இராப்பொழுதைக் கழித்தது. **யாண்டு** – எவ்விடத்தில். **தா** என்பது உவம உருபு.

27. **அல்** – இருள். **ஆண்டு** என்பது போல என்னும் பொருள் பட நின்றது. **துஞ்ச** – நித்திரை செய்ய. **கல்** – மலை. **கங்குல் எல்லை** – விடியற்காலம். "தோளாய், அழகனும் அவனும் துஞ்ச வீரன் வில்லோடும் கூடிய கையோடும் வெய்துயிர்ப்போடும் நீர் சொரிய எல்லை காண்பளவும் இமைப்பிலன் நின்றான்" எனக் கூட்டுக.

28. **என்பதை** – என்பத்தை என நின்றது; விரித்தல் விகாரம். **மைந்தன்** – பரதன். **தோற்றத்தேமில்—**தோற்றத்தினையுடைய எம்மில். **அவன்—**இலக்குமணன். **அழகிது என் அடிமை—**(குறிப்பு மொழி) என் அடிமை அழகியதன்று என்பது பொருள். "யான் ஏதுவானேன்; அவன் துடைக்க நின்றான்; என் அடிமை அழகிது" என முடிக்க.

# திருக்குறள்.

திருவள்ளுவரியற்றிய திருக்குறள் பழைய தமிழ் நூல்களுள் மிகவுஞ் சிறந்தது. இது பலமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார் பாரதியாரும்.

திருக்குறள் மூன்று பகுதிகளையுடையது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. முதல் மூன்று பாலிலிருந்தே குறள்கள் தெரியப்பட்டுள்ளன. ஒருவன் தனக்கும் பிறருக்கும் நன்மை புரிந்து வாழ்தலை விளக்குவது அறத்துப்பால்; தான் வாழ்தலுக்கும் பிறருக்கு உதவுவதற்கும் உரிய பொருளைச் சம்பாதித்தற்கு வேண்டிய அரசியல் முதலிய சூழ்நிலையின் இயல்புகளை விளக்குவது பொருட்பால்.

## ஒப்புரவறிதல்

இது ஒப்புரவு+அறிதல் எனப் பிரிபடும். செல்வராயினோர் தம்மிடத்துள்ள பொருளை ஏழைகள் கேளாமலே கொடுத்துதவுதலே ஒப்புரவு செய்தலாகும். அறிதல் என்பது அறிந்து செய்தலைக் குறிக்கின்றது.

1. **தாள் ஆற்றி** – முயற்சியைச் செய்து. **வேளாண்மை** – ஒப்புரவு. பெருமுயற்சி செய்து சம்பாதித்த பொருள் முழுவதையும் ஒருவன் தன்மேற் செலவிடலும், வைத்திழத்தலும் நல்லதல்ல. அப்பொருளில் ஒருபகுதியைப் பிறர் நலத்துக்குச் செலவிட்டு மகிழல் வேண்டும்.

2. **ஒத்தது** – ஒப்புரவு. உயிரோடிருப்பவர் பிறர் வறுமை காணின் அதனைக் களைதற்காக உள்ளந்துடிப்பர். ஒப்புரவு செய்யார்க்கு உள்ளத்துடிப்பில்லாமையால் அவர் செத்தாரென்று இகழப்பட்டார்.

3. **உலகு** – ஒப்புரவு. **அவாம்** – அவாவும் என்பது குறைந்து நின்றது. ஒப்புரவை விரும்பிச்செய்யும் பெரிய அறிவினையுடையவ

னது செல்வம் ஊரில் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம் நீர்நிறைந் தாற்போலும் என்பது பொருள்.

## தெரிந்து வினையாடல்.

அரசாங்க காரியங்களைப் பார்ப்போரை நியமிக்குமுன் செய்ய வேண்டிய காரியங்களையும் செய்வோரின் தகுதியையும் ஆராய வேண்டிய அவசியத்தை இவ்வதிகாரம் வற்புறுத்துகிறது. இனம், நண்பு, கைக்கூலி முதலியவற்றை நோக்கி ஒரு நியமனமுஞ் செய் யக்கூடாதென்பது வலியுறுத்தப்படுகின்றது.

1. **வாரி** – வருமானம் வரும் வழிகள். அரசனுக்குப் பொருள் வரும் வழிகள் பகைவரை அழித்தல், திறை கோடல், தன்னாட்டு மக்களிடம் அறவிடும் வரிகள் முதலியன. **வளம் படுத்து** – செல் வங்களை வளர்த்து. **உற்றவை** – இடையூறுகள்; இவை உத்தியோ கத்தர், சுற்றத்தார், பகைவர், கள்வர் முதலியோரால் வருவன.

2. அரசனிடத்தில் அன்பும் அவனுக்கு ஆவன அறியும் அறி வும், அதனைச் செய்யும்பொழுது மனங்கலங்காமையும், அவற்றால் பொருள் கைக்கு வந்தபொழுது அப்பொருள்மேல் அவாவில்லாமை யும் ஆகிய இந்நான்கு குணங்களையும் நிலைபெறவுடையானையே அரசன் தெரிதல்வேண்டும்.

3. **ஆய்ந்து** – ஆராய்ந்து. **விடல்** – விடுக. அதிகாரப்பொருளை இக்குறள் நன்றாக விளக்குகிறது.

## அமைச்சு.

அரசாங்க காரியங்களைப் பொறுப்பேற்று நடத்தும் மந்திரி மாரிடத்தே கட்டாயம் இருக்கவேண்டிய இயல்புகள் இவ்வதிகாரத் துள் வருகின்றன.

1. **தெரிதல்** – ஒரு காரியத்தைப் பலவிதமாகச் செய்துமுடிக்க லாமென்று தோன்றினால், அவற்றுட் சிறந்ததை ஆராய்தல்.

**செய்தல்** – எடுத்த காரியம் பிழைபோகாதபடி முடித்தல். **ஒருதலை யாய்ச்சொல்லல்** – கேட்பவர் யாராயினும் ஒத்துக்கொள்ளத்தக்க முறையிற் சொல்லுதல்.

இக்குறளில் அமைச்சனுக்கு அமையவேண்டிய நல்லியல்புகளுள் மூன்று தெரிந்து கூறப்பட்டுள்ளன. அவை ஆராயும்அறிவும் ஆராய்ந்தபடியே செய்துமுடிக்கும் வல்லபமும் இணங்காதவரையும் இணங்கச்செய்யும் பேச்சுவன்மையுமாம்.

2. **மதிநுட்பம்** – இயற்கையான புத்திக்கூர்மை. **அதிநுட்பம்** என்பதில் **அதி** என்பது மிகுதி என்னும் பொருளுடையது. இயல்பாகவே விவேகமுள்ளவன் அருமையான கல்வியுமுடையனாயின் அவனை ஒருவரும் வெல்லமாட்டார் என்பது பொருள்.

3. **உழையிருந்தான்** – மந்திரிக்கு ஒரு பெயர்; (அரசன்) பக்கத்திலிருப்பவன் என்ற பொருளையுடையது. அரசன் மேலதிகாரியாதலின் அவன் விருப்பப்படி ஒழுகாது தன் கடமையைச் செய்வதில் மந்திரி தவறாதிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் நன்மையை உணர்ந்தவனாவான்.

## நாடு.

படை, அமைச்சு முதலிய சிறப்புக்கள் ஒரு நாட்டிற்கிருப்பினும் நாடும் நாடாயிருந்தாற்றான் மதிக்கப்படும் என்பது இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றது.

1. **தள்ளாவிளையுள்** – தவறாத விளைவு. **தாழ்வு இலாச்செல்வர்** – கேடு அடையாச் செல்வமுடையோர்.

ஒரு நாடு தன்னுணவுக்குப் பிறநாட்டை எதிர்பார்த்திராது தானே விற்கத்தக்க வளமுடையதாய் இருக்கவேண்டும். ஒருநாட்டுக்கு வேண்டிய அனைத்தும் அந்நாட்டிலேயே பெறமுடியாதாதலால் மற்றைய இடங்களிலிருந்து வருவிக்கும் வாணிகச்செல்வர் வாழவேண்டும். மனிதர் நல்வழி ஒழுகாவிடில் நாட்டுமக்களுள் ஒற்றுமை இல்லாதொழியும். தக்கோர் வாழின் மற்றையோருக்கு வழிகாட்டுவர்.

2. **ஓவாப்பிணி** – நீங்காத நோய்கள்; ஈளை, கயரோகம்போன்றன. **செறுபகை** – புறத்து நின்றும் வந்து அழிவுசெய்யும் பகை.

3. **பல்குழு** – வேறுபட்ட கொள்கைகளையுடைய கட்சிகள்; (சில இருப்பது நல்லது; பலகட்சிகள் இருப்பின் நாட்டு மக்களிடையே ஒற்றுமை நிலவாது.) **உட்பகை** – நாட்டுக்குள்ளிருந்துகொண்டே அரசாங்கத்தைக் கவிழ்த்துத் தாமே அதனைக் கைப்பற்ற எண்ணுவோர். **கொல்குறும்பு** – கொலைசெய்தவற்கேற்ற ஆயுதம் அரண் முதலியவற்றை உடையோர்.

## பொருள் செயல்வகை.

பொருளை எப்படியுந் தேடலாம் எனப் பலர் நினைக்கின்றனர். ஒருவனெனினும் ஓர் அரசாங்கமெனினும் அவசியம் தேவையான பொருளைத் தேடும்பொழுது அதுவரும் வழியையும் யோசிக்கவேண்டுமென்பது இவ்வதிகாரத்துட் கூறப்படுகின்றது.

1. **திறனறிந்து** – அழிவிலும் ஆக்கம் கூடத்தக்கநெறி. **தீதின்றி** – குடிமக்களை வருத்தாது. பிறருக்குதவுவதால் அறனீனும் என்றும் தீதின்றி வந்த பொருள் நெடுங்காலம் நின்று அநுபவிக்கப்படுதலால் இன்பமும் ஈனும் என்றும் பொருள் கொள்ளுக.

2. **அருளொடும்** – அரசன் குடிகளிடத்தே காட்டும் அருள். **அன்பொடும்** – குடிகள் அரசாங்கத்திடம் காட்டும் அன்பு. **புல்லார் புரளவிடல்** – புல்லாது (தழுவாது) கழியவிடுக.

3. **செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு** – பகைவருடைய செருக்கையறுக்கும் ஆயுதம். ஓரரசன் பொருளைப் பெருக்குவானாயின் பெரும்படையும் நட்பும் உடையவனாவன். ஆகவே பகைவர் தாமே செருக்கொழிந்து அடங்குவர் என்பதாம்.

## *கத்தியின்றி ரத்தமின்றி.*

வெ. இராமலிங்கம்பிள்ளை நாமக்கல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவரை ஆஸ்தான கவிஞராக்கிச் சென்னை அரசாங்கம் பெருமைப்படுத்தியுள்ளது. இவர் பாடல்களில் தேசியமும் பொதுநோக்கும் மலிந்து காணப்படுகின்றன. தம் பாடல்

களின்மூலம் பல சீர்திருத்தங்களை இக்கவிஞர் செய்துவருகின்ருர்.

## சூரியகாந்தி.

இது "மலரும் மாலையும்" என்னும் தொகுதியிலுள்ளது. சூரியன் பக்கமே எப்பொழுதும் திரும்பியிருக்கும் சூரியகாந்தி மலர் சூரியனின் காதலியாகக் கற்பனை செய்யப்படுகின்றது. சூரியகாந்தியாகிய பெண் தன் காதலனைக் கண் எடுக்காது பார்த்துக்கொண்டு அவன் அன்பிற்காக ஏங்கி நிற்கிருள். ஆனுல், அவனே திரும்பியும் பாராது தான்செல்லும் வழியிலே செல்கிருன். சூரியகாந்தியும் முகம்வாடித் தளர்கிருள். இக் காட்சி எட்டுப்பாடல்களிலும் வர்ணிக்கப்படுகிறது. சூரிய காந்தி சூரியனது ஒளிபோன்ற ஒளியையுடையது. ஆனுல் இங்கே "காந்தி" என்னும் சொல் "காந்தன்" (காதலன்) என்பதன் பெண்பாலான "காந்தை" (காதலி) என்னும் பொருளில் வந்தது.

1. **விண்ணிலே கண்ணுக** – ஆகாயத்தையே கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டு.

2. நடுவெயிலிலே ஒரு காலிலே நின்று தவஞ்செய்வது ஒரு வகையான தவம். சூரியகாந்தியும் ஒருகாலில் நின்று வெயிலில் தவம் செய்வதாக ஆசிரியர் கூறுகின்ருர்.

3. **நேயம்** – அன்பு. **காயவருத்தம்** – உடல்வருத்தம்.

4. **ஏதடியே** – ஏது அடியே?

5. **ஆயிரம் கண்கள்** – சூரியகாந்திப்பூவின் நடுவிலுள்ள அதன் கரிய விதைகள். **பீத்தல்பெருமை** – தற்புகழ்ச்சியோடு கூடிய பெருமை.

6. பெண்கள் மஞ்சள் பூசிக்குளித்தல் தமிழ்நாட்டு வழக்கம். சூரியகாந்தியும் மஞ்சள் பூசி அழகு செய்துகொண்டு நிற்கிறது. **மாயப்பொடி** – மக்களை மயக்கும் மந்திர சக்தியுள்ள பொடி. கஞ்ச

**மகள்** – தாமரையாகிய பெண். தாமரையைச் சூரியனின் காதலியாகக் கூறுவது கவிமரபு. **கண்ணீர்** – கள் + நீர் எனவும் பிரியும் (**கள்** – தேன்).

## பேராதனைப் பூந்தோட்டம்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரை "ஈழத்துத் தமிழ்த் தாத்தா" என்றே கூறலாம். இப்புலவர் மிகவும் சமீப காலம்வரை நம்மிடையே வாழ்ந்தவர். இவருடைய பாடல்களில் பழைமையின் ஆழமும், புதுமையின் எளிமையும் ஒன்று சேர்ந்து காணப்படுகின்றன. இவர் கடவுள் சம்பந்தமாகவும் வேறு விஷயங்கள் பற்றியும் நூற்றுக்கணக்கான பாடல்கள் பாடியுள்ளார். மேலேயுள்ள செய்யுள் இவர் பாடிய "இலங்கை வளமும் தால விலாசமும்" என்னும் நூலிலுள்ளது.

## காலைப் பொழுது.

இச்செய்யுள்கள் சோமசுந்தரப் புலவர் இயற்றிய "சிறுவர் செந்தமிழ்" என்னும் நூலில் உள்ளன.

1. **கொம்பு** – கிளை.

4. **தாமிரம்** – செம்பு. **சாடி** – அழித்து.

## ஜூலியஸ் சீஸர்.

ஜூலியஸ் சீஸர் என்னும் ஆங்கில நாடகத்தின் சில பகுதிகளைச் சுவாமி விபுலானந்தர் மொழிபெயர்த்தார். இம்மூன்று செய்யுள்களும் அம் மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டன.

தீக் கனக் கண்ட சீஸரின் மனைவி நள்ளிரவில் அச்சமுற்றெழுந்து புறத்தே நிகழுகின்ற உற்பாதங்களினால் உள்ளம் அவலித்துத் துயிலொழித் திருந்து காலைப்பொழுது வந்ததும்

கணவன் முன்னிலையை அடைந்து அவைக்குச் செல்லாதிருக்கும்படி வேண்டுகின்றாள். சீஸர் மறுத்துரைக்கின்றார்.

1. **பீழை** – துன்பம். **பேதலிக்கும்** – கலங்குகின்ற. **அகம்** – வீடு **அவை** – அரசாங்கசபை.

2. **சதம்** – நூறு. **அவனி** – உலகம். **துஞ்சுவர்** – இறப்பர்.

3. **இன்னல்** – அபாயம். **குருளை** – குட்டி. **பேதுறல்** – மயங்கற்க.

## பாரதி பாடல்கள்.

NN

சுப்பிரமணிய பாரதியார் 1882ம் ஆண்டு கார்த்திகை மாதம் பிறந்தார். இவர் தந்தையார் சின்னச்சாமி ஐயர்; தாயார் லக்ஷ்மி அம்மாள். பிறந்த ஊர் எட்டயபுரம். கவிபாடும் ஆற்றல் இளமையில் இருந்தபடியால் சரசுவதியின் பெயருள் ஒன்றாகிய பாரதி என்னும் பெயரால் அழைக்கப்பட்டார். 39 ஆண்டுகள் மாத்திரம் வாழ்ந்த பாரதியார் தேசிய கீதங்கள் பாஞ்சாலிசபதம், கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு முதலியவற்றைப்பாடியது மிகவும் அதிசயிக்கத்தக்கதே.

தெரியப்பட்ட பாடல்கள் பாரதியார் இந்தியாவின் விடுதலைக்காகப் பாடியதைக் காட்டும்.

### 1. பாரத தேசம்.

1. **வெள்ளிப்பனிமலை** – இமயமலை. **பள்ளித்தலம்** – பள்ளிக்கூடங்கள்.

2. **வங்கம்** – வங்காளம்.

3. **வெட்டுக்கனிகள் செய்து** – உலோகச் சுரங்கங்களை அறுத்து.

### 2. நடிப்புச் சுதேசிகள்

**நடிப்புச்சுதேசிகள்** – உண்மையான தேசப்பற்று இல்லாதவர்.

2. **நாட்டம்** – மனம். **உளம்வலி** – மனத்துணிவு. **துஞ்ச** – இறக்க. **பஞ்சத்தும்** – பஞ்சத்திலும்.

## 3. சுதந்திரதேவியின் துதி

கல்வி, செல்வம், வீரம் ஆகிய இவற்றை வேண்டுவோர் சரசுவதி, இலக்குமி, துர்க்கை ஆகியோரை வழிபடுதல்போலச் சுதந்திரத்தை வேண்டிப் பாரதியார் சுதந்திர தேவியைத் துதிக்கின்றார்.

1. **இதம் தரும் மனை** – இன்பத்தைத்தரும் வீடு. **பதம் திரு** – உத்தியோகமும் செல்வமும். **இன்னல்** – துன்பம்.

2. **அணிகள் வேய்பிணம்** – ஆபரணங்களை அணிந்த பிணம்.

3. **ஆவி** – உயிர்; நாட்டை ஆளும் அந்நியரைத் துரத்துதற்கு ஆண்மை, மானம் முதலிய குணங்கள் வேண்டும். இவையில்லாதவர் உயிருடன் இருந்தும் செத்தவர்களைப் போல்வராதலின் "ஆவியங் குண்டோ"? எனப்பட்டது. **நின்தன்பாலனம் படைத்திலாதார்** – உன்னுடைய காவலைப்பெருதவர்.

## 4. பாரதியார் வேண்டுவது

**காணி** – நூறு குழி கொண்டதொரு நிலப்பரப்பு. **பராசக்தி** – இறைவி. **துய்ய** – தூய. **பத்தினிப்பெண்** – கற்புடைய பெண். **எங்கள் கூட்டுக்களியில்** – நாங்கள் கூடும் இன்பத்தில். **வையம்** – பூமி. **பாலித்தல்** – காத்தல்.

## கவிஞனும் உலோபியும்.

இதனை இயற்றியவர் அட்டாவதானம் சரவணப்பெருமாட் கவிராயர். இவர் காலம் இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் என்ப.

**காமதேனு** – விரும்பியவற்றைக் கொடுக்கும் தேவலோகப் பசு. **தாரு** – கற்பகதரு. **சிந்தாமணி** – சிந்தித்தவற்றைக் கொடுக்கும்

இரத்தினக்கல். **திருமன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற** – அழகிய சபையில் நியாயத்திற்குச் சாட்சியாக நின்று இணையற்ற திருநடனம் செய்கின்ற.

## மறம்

இதனை இயற்றியவர் சிவப்பிரகாசசுவாமிகள். இவர் காலம் இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் என்ப.

தமது மகளை மணம் பேசும்படி ஓரரசனால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி, மணம் மறுத்து, அவ்வரசனை இகழ்ந்து பேசியதாகச் செய்யுள் செய்வது 'மறம்' எனப்படும். மனைவியை விற்றவன் அரிச்சந்திரன்; வனத்தில் விட்டகன்றவன் நளன்; சிறைபுகவிட்டவன் இராமன்; துகிலுரிய விட்டவர் பாண்டவர்.

**உமி** – உமிழ்ந்து துப்பு. **உருட்டு** – பறக்கவிடு. **விமலர்** – குற்றமற்ற சிவன். **வேலர்** – முருகக்கடவுள். **வளர்ப்பினில் ஒரு பெண்** – வளர்ப்புப் பெண்ணாகிய வள்ளி.

## மழைப்பாட்டு.

இது 'பருளை விநாயகர் பள்ளு' என்னும் நூலில் உள்ளது. இயற்றியவர் சின்னத்தம்பிப் புலவர். இவரூர் யாழ்ப்பாணத்து நல்லூர்; காலம் இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் என்ப.

**கவி இனம்** – குரங்குக் கூட்டம். **புல்வாய்** – ஒருவகை மான். **மூழை** – குகை. **கொடுகிட** – நடுங்க. **அருகு** – பக்கம். **உழை** – ஒருவகைமான். **தவழ** – தவழ்ந்து செல்ல. **தடகிரி** – பெரிய மூங்கில். **சொரிமலர் அகல** – சொரிந்த பூக்கள் மழை வெள்ளத்திளுல் அகன்று செல்ல.

## ஆலத்தி எடுத்தல்.

இப்பாடலைப் பாடியவர் சுந்தர கவிராயர். வேட்டைக்குச் சென்று மீண்ட அரசன் ஒருவனைப் பெண்கள் ஆலத்தி எடுத்து

வரவேற்கின்றூர்கள். அச்செய்தியை இப்புலவர் சொன்னயம் பொருந்தப் பாடியுள்ளார்.

**மரமது** – அரசமரம். **மரத்திலேறி** – மாவிலேறி. **மரமதை** – வேலை. **மரத்தைக்கண்டு** – வேங்கையைக் கண்டு. **மரத்தினுல்** – வேலால். **மரத்தை** – வேங்கையை. **மரமுடன் மரம்** – ஆல் அத்தி. மரமது என்பது நான்கு அடியிலும் 'அரசு' என்பதைக் குறித்து நின்றது. இங்கே அரசு, மா, வேல், வேங்கை என்னும் மரங்களின் பெயர்கள் முறையே அரசனையும் குதிரையையும் வேற்படையையும் புலியையும் குறித்தன. மரமுடன் மரம் என்றது ஆலும் அத்தியும் என மரங்களைக் குறித்தலோடு ஆலத்தி எனப் பொருள் பட்டும் நின்றது.

## புல்லரைப் பாடேன்.

இதனை இயற்றியவர் ஔவையார். இவர் காலம் பன்னிரண்டாம் நூற்ருண்டு என்ப. சில புல்லறிவோர் தங்களைப் பாடச் சொன்னபோது பாடியது இப்பாடல்.

**மூவர்கோ** – சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர். **மூவிளங்கோ** – மூன்று இளவரசர்; **இளங்கோ** என்பதற்கு இலக்கணையாற் பொருள்கொண்டு குறுநில மன்னராகிய பாரி காரி அதியமான்நெடுமான்அஞ்சி என்னும் மூவரையும் கொள்ளினும் அமையும்.

**பனுவல்வாய்** – பாட்டு மணங்கமழும் வாய். **என்றனிர்** – என்று கேட்டீர். **வெளிறுபடு நல்யாழ்** – குற்றம் நீங்கிய நல்ல யாழின் இசை. **அவிச்சுவை** – உணவின் சுவை. **உடீஇர்** – நல்ல உடைகளை உடுக்கமாட்டீர். **உண்ணிர்** – நல்ல உணவுகளை உண்ணமாட்டீர். **ஒவ்வாக்கானம்** – பொருந்தாத காடு. **துவ்வாக்கனி** – பயன்படாத கனி. **களிறுபடு செங்களம்** – ஆண் யானைகள் பொருது இறக்கின்ற சிவந்த போர்க்களம். **கொடீஇர்** – ஏழைகளுக்குக் கொடுக்கமாட்டீர். **கொள்ளிர்** – நற்பொருள்களை விலைகொடுத்து வாங்கமாட்டீர்

## முத்தொள்ளாயிரம்.

சேர சோழ பாண்டிய மன்னர்மீது பாடிய மூன்று தொள் ளாயிரம் பாடல்கள் சேர்ந்து ஒரு நூலாகி, முத்தொள்ளாயிரம் என்னும் பெயரோடு அது வழங்கி வந்தது போலும். அந்நூல் முழுதும் இப்போது கிடைத்திலது. சில பாடல்களே கிடைத் துள்ளன. இவற்றின் ஆசிரியர் பெயரும் காலமும் தெரிந்தில.

1. **விறுசால் மன்னர்** – படைவலியால் செருக்குடைய அரசர். **தாமம்** – முத்துச் சரம். **பாற எறிந்த பரிசயம்** – நொருங்கும்படி முரித்த பழக்கம். **தேருது** – தான் காணும் பொருள் குடை அன்று என்பதனை உணராது. **கோதை** – சேர அரசன். **சின வெங்களி யானை** – கோபத்தினால் வெறிகொண்ட யானை. **திங்கள்** – சந்திரன். **கை** – துதிக்கை.

2. **அடிமதிற்பாய** – மதிலின் அடிப்புறத்தைக் குத்தித் தகர்த்த தனால். **அழிந்தன** – முரிந்துபோன. **கோடு** – தந்தம். **பிடி** – பெண் யானை. **முடியுடை மன்னர் குடை** – முடி சூடிய பகைஅரசரிடம் பறித்த குடை. **மறைக்கும்** – முரிந்த தந்தங்களை மறைக்கும்.

## புறநானூறு.

புறநானூறு சங்க நூல்கள் எனப் போற்றப்படும் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. இது, அறம் கொடை வீரம் முத லிய புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களை உடைத்தா யிருத்தலால் புறநானூறு என்னும் பெயர்த்தாயிற்று.

### 1. இளமைஇன்பமும் முதுமைக் கவலையும்

'இப்பொழுது நினைந்து இரங்கவேண்டியிருக்கிறது. நெருங்கிய மணலிற் செய்த பாவைப்பிள்ளைகளுக்குக் கொய்த பூவைச் சூடி, பின்பு குளிர்ந்த குளத்தில் நீராடும் சிறு பெண்களுடன் கைகோத்து, அப்பெண்கள் தழுவிய வேளைகளில் தழுவியும், அவர் தங்கிய இடத் துத் தங்கியும், ஒளித்துச் செய்வது தெரியாததும் வஞ்சனை இல் லாததுமான இளமைந்தர் கூட்டத்தோடு நீராடுந்துறையிலே மிகத்

தாழ்ந்து, நீருக்குஅருகில் படிந்த உயர்ந்த கொம்புகளையுடைய மருத மரத்திலேறிக் கரையில் நிற்போர் ஆச்சரியப்பட, திரையிடத்துத் திவலை பறக்க, ஆழமான நீரையுடைய குளத்துள் திடீரெனப் பாய்ந்து முழுகி, குளத்தின் அடியிலுள்ள மணலைக் கையிற்கொண்டு வந்து காட்டும் கல்வி அறிவில்லாத இளமைக்கு இரங்கவேண்டி யிருக்கிறது. அவ்விளமை இப்பொழுது எங்கே போய்விட்டதோ? நுனியில்பூண்போட்ட தண்டையூன்றித்தளர்ந்து இருமல் இடையே நெருங்கிய சில சொற்களையும் பெரிய முதுமையையும் உடைய எங்களுக்கு இளமை யாண்டுண்டு கொல்லோ? அதுதான் இரங்கத் தக்கது' எனக் கூட்டிக்கொள்க.

பாட்டிலேயுள்ள அடியொன்றே புலவர் பெயராய் அமைந்தமை நோக்குக. இவர் இயற்பெயர் தெரிந்திலது.

## 2. நாடும் தந்தையும் இழந்தமை

பாரி என்னும் வள்ளல் பறம்பு மலையை ஆண்டுவந்தான் கொடையினால் அவன் அடைந்த புகழைப் பொறாமல் சேர சோழ பாண்டியர்கள் மூவரும் அவன் மலையை முற்றுகை செய்து அவனைக் கொன்றார்கள். கபிலரிடம் தமிழ்கற்ற பாரியின் மகளிர் ஓர் இரவு நிலவில் தந்தையையும் தம் மலைநாட்டையும் இழந்த கவலையைப் பாடிய செய்தியைக் கூறும் இப்பாடல்.

# வசனபாகத்தின் அரும்பதவுரை.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 43. | இரசவாதம் | — | இரும்பைப் பொன்னுக்கும் வித்தை. |
| | கிலேசம் | — | கவலே. |
| | அண்டம் | — | மேலுலகம். |
| பக்கம் 44. | தமியன் | — | தனித்தவன. |
| | உழந்து | — | வருந்தி. |
| | முண்டிதம் | — | மொட்டை |
| | வங்கம் | — | ஈயம், வெள்ளி. |
| | சீலேமண் | — | மருந்துச் சட்டியிற் சுற்றும் துணியின் மேல்இடும் மண் பூச்சு |
| | குக்குட புடம் | — | கோழியின் அளவு உயர முள்ள எரு வராட்டி |
| | குக்குடம் | — | கோழி |
| | வராகம் | — | பன்றி |
| பக்கம் 49. | சிதல் | — | கறையான் |
| | பாணம் | — | இராமபாணம் என்னும் ஒரு வகைப்புழு |
| | பாணக்கலப்பை | — | இராமபாணம் என்னும் புழு கலப்பையாக உருவகிக்கப் பட்டது |
| | கிலம் | — | சிதைவு |
| பக்கம் 50. | கிரந்தம் | — | நூல் |
| | பணிக்களரி | — | தொழில் செய்யும் இடம் |
| பக்கம் 61. | தாணு | — | காவலிடம் |
| | சங்கீர்த்தனம் | — | புகழ்தல், துதித்தல். |
| பக்கம் 62. | கர்ணபரம்பரை | — | கேள்வி வழியாக வந்த செய்தி. |
| பக்கம் 65. | அநாயாசமாக | — | சிரமமின்றி, எளிதாக |
| | சமஸ்யை | — | எஞ்சியிருப்பதை முடிவடை யச்செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 91. | வாயிதா | — | தவணை. |
| பக்கம் 103. | சிலம்பம் | — | தடிகளினுல் விளையாடும் ஒருவகை விளையாட்டு |
| | கழி | — | தடி |
| பக்கம் 117. | கங்கு | — | கரை, பக்கம் |
| பக்கம் 120. | கந்துவட்டி | — | வட்டிக்குப் பணம் கொடுப்போருட்சிலர் பணம் கொடுக்கும்போதேவட்டியைக்கழித்துக்கொண்டு கொடுப்பர், அது கந்துவட்டி என்று கூறப்படும். |
| பக்கம் 121. | சல்லாபம் | — | வேடிக்கை மொழி. |
| | துப்பட்டா | — | சால்வை. |
| | பிராப்தி | — | பெறப்பட்ட பொருள். |
| | தூக்கிவாரிப்போட்டது | — | திடுக்கிடச் செய்தது. |
| | ஜ்வலிக்க | — | விளங்க. |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 43 | 14 | அத்த | — அந்த |
| 45 | 11 | நூற்றெட்டுக்குக் | — நூற்றெட்டுக் |
| 74 | 9 | இல்லே | — இல்லே. |
| 86 | 7 | இன்பம், | — இன்பம். |
| 92 | 22 | பேருற்சாகம் | — பேருற்சாகம். |
| 98 | 10 | தூசி | — பூமி |
| 99 | 9 | வெப்பபத்திஞல் | — வெப்பத்திஞல் |
| 101 | 28 | உஷாக்காலம் | — உஷத்காலம் |
| 107 | 15 | நாகரீகம் | — நாகரிகம் |
| 107 | 30 | வாணிபம் | — வாணிகம் |
| 110 | 4 | வாணிபம் | — வாணிகம் |
| 115 | 18 | போய்ச்...சேருமாறு | — போய்ச்சேருமாறு |
| 116 | 15 | செய்...வதையும் | — செய்வதையும் |
| 128 | 14 | ஓர் ஆட்டம் | — அப்பொழுது |

அச்சுப்பதிவு:
நாமகள் அச்சகம், 319, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.